# வன்னிக் காட்டு வசம்



ஜா. அடைக்கல ராசா

# வன்னிக் காட்டு வசம்

ஜா. அடைக்கல ராசா

FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

## நூல் விவரம்

*தலைப்பு* : வன்னிக் காட்டு வசம்

*ஆசிரியர்* : ஜா. அடைக்கல ராசா

*பக்கங்கள்* : vii + 89

*புத்தக அளவு* : டெமி 1/8

*எழுத்து* : 11 புள்ளி

*வெளியீடு* : 2003

*பதிப்பகம்* :



## அர்ப்பணம்

என்னை ஈன்று, தமிழமுது ஊட்டி வளர்த்த
எனது தாய் பிலோ ஜாண்,
தந்தை கலாநிதி தே. ஜாண் அவர்களுக்கு



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

# நன்றி

**நான் வன்னிக்காட்டு வசமாகிட உதவியவர்கள் . . .**

- ஊக்கம் தந்து, ஆக்கபூர்வ ஏற்பாடுகள் செய்த அண்ணன் சின்னராசா,
- அனுமதி வழங்கிய சலேசிய சபை திருச்சி மாநிலத் தலைவர் அருட்பணி. தியோபிலஸ்,
- அன்போடும், பாசத்தோடும் வழியனுப்பிய பெற்றோர், உடன்பிறந்தோர்,
- உடனிருந்து ஊக்கம் தந்த நண்பர்கள் மாறன், அகிலன், சகாயராஜ்,
- என்னை ஏற்று, வழிநடத்திய மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் மற்றும் மன்னார், யாழ்ப்பாணம் மறைமாவட்ட சகோதர குருக்கள்,
- உடனிருந்து வழிகாட்டிய அருட்பணியாளர்கள் ஜேம்ஸ் பத்திநாதர், அன்டன் மத்தியாஸ் மற்றும் எமில் அவர்கள்,
- அணிந்துரை வழங்கிய தமிழீழ கவிஞர் காசி ஆனந்தன்,
- தட்டச்சு செய்து உதவிய சுசி மற்றும் மஞ்சு.



# உள்ளே


அணிந்துரை vi

முன்னுரை 1

தமிழீழத்தில் என் பிரவேசம் 3

தமிழருக்கெதிரான கூட்டு சதி 15

கோழை வீரம் 19

இந்தியாவின் இரட்டை வேடம் 23

போதைக்கு அடிமையாகும் தமிழ் இளையோர் 27

தமிழீழத்தில் பெண் விடுதலை 35

தமிழீழ சமூகம் - எனது பார்வை 46

தமிழீழத்தில் கிறிஸ்தவம் 76

இனப்பிரச்சனைக்குத் தீர்வு 87




FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

# அணிந்துரை

**உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தன்,**
**சென்னை.**

பண்பட்ட நடுநிலையாளர் அருட்பணி. அடைக்கலராசா அவர்களின் வன்னிக்காட்டு வசம் படித்தேன். வெறி கொண்ட சிங்கள அரசாலும் தமிழின எதிரிகளாலும் அடிக்கடி புதைக்கப்படும் அல்லது திரிக்கப்படும் தமிழீழம் பற்றிய உண்மைகளை வெளிச்சத்தில் வைத்திருக்கின்றார். தமிழீழத்தில் ஓராண்டு காலம் தங்கியிருக்க நேர்ந்த போது தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் குருத்துவ துறவியான அவர் கண்களில் பட்டவை, நெஞ்சைத்தொட்டவை அனைத்தும் உண்மையின் தரவுகளாய் இந்நூலில் பதிவாகியுள்ளன.

அவர் கருத்து இதுதான்: "இலங்கைத் தமிழர்களின் இன்றைய உண்மையான வாழ்வும் உணர்வுகளும் வெளிப்படாமல் மறைவாகவே உள்ளன. தீவிரவாதம், பிரிவினைவாதம் என்ற முத்திரைகளோடு நம் மக்களின் வாழ்வு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது."

ஈழத்தமிழர்கள் தமிழ்நாட்டு மீனவர்களை அடிக்கடி துன்புறுத்துவதாக அவிழ்த்து விடப்படும் பச்சைப் பொய்யையும், தமிழீழ மக்களின் விடுதலை உணர்வை அழித்தொழிக்க சிங்கள ஆட்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பகுதிகளில் தமிழ் இளைஞர்களிடையே போதைப்பொருட்களை பரப்பி வரும் கொடுமையையும் அடிகளார் இந்நூலில் அம்பலப்படுத்தியுள்ளார்.

நேரில் அடைக்கலராசா அவர்கள் நெஞ்சம் உருகிடக்கண்ட - நெருப்பில் எரிந்து கருகிப் போன தமிழீழம் இதுதான். "இலங்கையின் வடக்கு கிழக்கு (தமிழீழம்) பகுதிகளில் பெருமளவு தமிழர்கள் வாழும் இடங்களில் நிலபுலன்கள், வீடுகள், வீட்டுப்பொருட்கள் அழிக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். பலர் நிரந்தரமாக ஊனமாக்கப்பட்டனர். இலங்கை முழுவதும் வாழ்ந்த தமிழ் இளையோர், குறிப்பாக ஆண்கள் பலர்



காணாமல் போயினர். சோதனை, உசாவுதல், சந்தேக தடுப்புக்காவல் என்ற பெயரில் இன்றும் பலர் தென்னிலங்கையில் சிறையில் வாடுகின்றனர். அறுபதாயிரம் அப்பாவிகள் உயிரைப்பலி கொண்டு, இலட்சக்கணக்கானோரை அகதிகளாக்கி, பெண்களை விதவைகளாக்கி, மாணவச்செல்வங்களின் கல்வியை பாழாக்கி அநாதைகளாக்கிய இருபதாண்டு கால யுத்தத்தால் இறப்பு, இழப்பு, இடப்பெயர்வு என்னும் முப்பரிமாண துன்பத்திற்கு தமிழர்கள் ஆளாகியுள்ளனர்."

சிங்கள வெறி அரசின் தமிழின ஒழிப்புப் போரை தமிழீழத்தின் விடுதலைப் போராக மாற்றி, களத்தில் மேனி சிலிர்த்து நிற்கும் மாபெரும் தலைவர் பிரபாகரன் அவர்களைத் தமிழீழத்தின் ஒரே தலைவராக அடையாளம் காட்டுகிறார் அருட்பணியாளர். விடுதலை புலிகளின் போர் ஆற்றல் பற்றி மட்டுமல்ல, நிர்வாக ஆற்றலைப் பற்றியும் 'வன்னிக்காட்டு வசம்' விரிவாக பேசுகின்றது.

"வன்னிக்காட்டில் நுழையும் போதே 'தமிழீழ ஆயத் துறை' 'போக்குவரவு கண்காணிப்புத்துறை' போன்றவற்றையும், வன்னிப்பகுதியில் தமிழீழ போக்குவரத்து, தமிழீழ காவல், தமிழீழ நீதிமன்றம், தமிழீழ பொருண்மியம், தமிழீழ வனவளம், தமிழீழ மருத்துவப்பணி, தமிழீழ வைப்பகம் (வங்கி), போன்ற அடிப்படை அரசியல் நிர்வாக கட்டமைப்பையும் பார்க்கலாம்." என்கிறார் நூல் ஆசிரியர். உண்மைத் தமிழீழத்தை அவர் உலகிற்கு காட்டுகின்றார்.

'தெற்காசிய ஒன்றியம்' இன்றைய முதல் தேவை என்றும் அதன் மூலமே தமிழினச் சிக்கலை தீர்க்க முடியும் என்றும் அடிகளார் நூலின் முடிவில் தெரிவிக்கும் கருத்துச் சரியானதல்ல. ஐரோப்பிய ஒன்றியத்தின் தோற்றம் இசுப்பானிய நாட்டின் பாசுக்கு தேசிய இன மக்களுக்கு விடுதலை தந்ததா? வடஅயர்லாந்து மக்கள் வாழ்வில் ஒளி பாய்ச்சியதா? இல்லையே. ஒரு தேசிய இனத்தின் விடுதலை அத் தேசிய இனம் தன்னை முழுமையான விடுதலைப் போரில் ஒப்படைப்பதன் மூலமே பெறப்படும். அடுத்தவன் வயலில் தமிழ் ஈழத்தின் விடுதலை என்றைக்குமே அறுவடை ஆகாது. இக்கருத்தை அருட்திரு அடிகளார் தன் நூலின் இறுதியில் குறிப்பிடாமல் இல்லை.

"மக்களின் விடுதலைக்காக உறுதியுடன், துணிவுடன் பணிபுரியும் தலைவர்களாலேயே உண்மையான விடுதலை பெற்றுத்தர முடியும். ஈழத்தமிழர்கள் அப்படியானதொரு உண்மையான தலைவரைப் பெற்றிருப்பது அவர்களின் புண்ணியமே. தமிழீழம் நிச்சயம் விடியும்" என்கின்றார் அவர்.

அருட்பணியாளரும். நடுநிலையாளரும், பண்பாளருமான அவர் வாய்ச்சொல் நனவாகட்டும்.

***காசி ஆனந்தன்***



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

# முன்னுரை

இந்துமாக்கடலில் ஒரு சிறு நீர்த்துளிப் போல் காட்சிதரும் தீவு இலங்கை. இன்று உலக வரைபடத்தில் சிந்தப்பட்ட இரத்தத்துளிப் போல காட்சி தருகிறது. கடந்த முப்பது ஆண்டு காலமும் இச்சிறு தீவு மக்கள் இரத்தமும் கண்ணீருமாக வாழ்ந்து கொண்டிருப்பது மிகப்பெரிய சமூக அவலம். அதிலும் ஈழத்தமிழர்களின் வாழ்வு நெருப்பிலிப்பட்ட புழுப்போல, கர்சிக்கும் சிங்கத்தின் வாயில் அகப்பட்ட மான்போல உள்ளது. இலங்கை தமிழர்களின் இன்றைய உண்மையான வாழ்வும், உணர்வுகளும் வெளிப்படாமல் மறைவாகவே உள்ளது. தீவிரவாதம், பிரிவினை வாதம் என்ற முத்திரைகளோடு நம் மக்களின் வாழ்வு இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆதிக்க சக்திகளின் கைகளிலுள்ள ஊடகங்கள் உண்மையை திரித்து, பரபரப்பு செய்திகளை முதன்மைப்படுத்தி பணம் சம்பாதிக்கும் எண்ணத்தோடு தமிழீழத்தின் உண்மை நிலையை, யதார்த்த வாழ்க்கையை மூடி மறைத்துள்ளன.

இந்நிலையில் நம் மக்களின் உண்மை நிலையறியவும், யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகளை நேரில் கண்டறியவும், நம் இன மக்களோடு கூடிய மட்டும் இணைந்து வாழ்ந்து அனுபவம் பெற விழைந்தேன். குறைந்த காலமான ஓராண்டில் நான் பெற்ற அனுபவங்களை, நேரில் கண்ட நிகழ்வுகளை, கேட்ட கதைகளை, வாசித்து பெற்ற உண்மைகளை மட்டும் தொகுத்து ஈழத்து தமிழர்களையறியாத தமிழ் நாட்டு தமிழர்களோடும் ஈழத்தமிழர்களைப் பற்றிய தவறான எண்ணங்களோடு வாழ்பவர்களுக்கும், பயணக் கட்டுரையாக வழங்க எண்ணி முயற்சித்ததே இந்நூல்.



உறுதி செய்யப்படாத விடயங்களை, வெறும் கதையாகவே உள்ள கருத்துக்களை, யாருக்கோ நடந்த நிகழ்வை வேறு ஒருவர் சொல்லியோ இங்கு எதுவும் தரப்படவில்லை. என் இனிய கற்பனையோ, பகல் கனவோ, யூகமோ இங்கு வெளிப்படாது இருக்க கடும் முயற்சி எடுத்துள்ளேன். உள்மன கிளர்ச்சிக்காகவோ, பரபரப்பாக்கவோ எவ்வித செய்தியையும் இங்கு வெளியிடவில்லை. மாறாக உண்மையை எனது மனதில்பட்டவாறு அப்பட்டமாக எடுத்துரைக்கவே விழைகின்றேன். இன்னும் நான் காணாத, கேளாத, அனுபவிக்காத பல நிகழ்வுகள் இருக்கலாம். அவற்றையும் தொகுக்க நினைத்தால் என் வாழ்நாள் போதுமா?

தனிமனிதர்களின் அரசியல் இலாபத்திற்காக, மனித நேயமின்றி தமிழின அழிப்பை மேற்கொண்ட சிங்கள பேரினவாத ஆதிக்க சக்திகளுக்கெதிராக முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அகிம்சை வழியில் பேச்சு வார்த்தைகள் மூலமாக தீர்வுகாண முற்பட்டு தோற்றுபோன நிலையில், வேறுவழியேயின்றி ஆயுதமேந்தும் நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டார்கள். மண்ணின் மீட்புக்காக, மக்களுக்காக கடந்த இருபது ஆண்டளவாக போரிட்டு, சமபலத்தை அடைந்த பின் போர் நிறுத்தம் ஏற்படுத்தி, பேச்சுவார்த்தைகள் நடைபெறும் இக்கால கட்டத்தில், துப்பாக்கி வேட்டொலி இல்லாத, அமைதி நிலவும் தமிழீழத்தில், போரினால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் கண்டறிந்து என்னையே பாதிப்புக்குட்படுத்துவதன் மூலமாக அதை பிற தமிழ் கூறும் நல்லுலகிற்கு எடுத்துக் கூறும் தார்மீக பொறுப்பேற்கிறேன்.

வாருங்கள் என்னோடு, விடுதலைக்கானம் இசைக்கும் வன்னிக்காட்டுக்குச் செல்வோம் . . .



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

# தமிழீழத்தில் என் பிரவேசம்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். என் நீண்ட நாள் கனா 2003ம் ஆண்டு தை மாதம் முதல் நாளிலே நனவானது. 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்ற போகிப் பண்டிகையில் சிங்கள ஆதிக்க அரசின் எல்லையைக் கடந்து புளியங்குளம் வழியாக சுதந்திர தமிழீழத்தில் பிரவேசித்தேன். 14-01-2003 அன்று மாலை சரியாக 5.30 மணிக்கு என் தமிழீழ பிரவேசம் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின், அனைத்துலகத் தொடர்பகம் சார்பாக தயா என்ற 'பொடியன்' என்னை வரவேற்றான். பின் மாங்குளத்தில் A9 வீதி வழியாக, போரில் தரைமட்டமான கட்டிடங்களையும், வளமான கிளிநொச்சி வயல்களையும், கிளிநொச்சி மாவட்டத்தில் மிகப்பெரிய குளமான இரணைமடு குளத்தையும் பார்த்துக் கொண்டே வாய்க்கால் ஊடாக சென்ற மோசமான பாதை வழியாக இரவில் பயணமானோம். சரியாக நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு அதாவது தைப் பொங்கல் திருநாளன்று 15-01-2003 அதிகாலையில் விடுதலைப் புலிகளால் 'ஓயாத அலை-1' இராணுவ நடவடிக்கையால் மீட்கப்பட்ட முல்லைத்தீவு வந்தடைந்தோம். முல்லைத்தீவின் பங்குப் பணியாளர் அருட்பணி. ஜேம்ஸ் பத்திநாதர் அனுபவமும் தமிழுணர்வும் மிக்கவர். அவரின் துணையோடும், வழிகாட்டுதலோடும் என் வன்னிக் காட்டு விஜயம் துவங்கியது.

### அடிமை வரலாறு

சிலோன் என்று பாரம்பரியமாக அழைக்கப்பட்ட இலங்கை கடந்த காலங்களில் இந்திய மன்னர்களுக்கும், போர்ச்சுகீசு, டச்சு மற்றும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழும் அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு நாடு. பல்வேறு ஆதிக்கங்களின் எச்ச சொச்சங்கள் இன்றும் காணப்படுகின்றன. இந்திய பல்லவர்களின் ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்ட குளங்கள் அவர்களின் பெயர்களை தாங்கி நிற்கின்றன. டச்சு, போர்ச்சுகீசிய கட்டிட வடிவமைப்புகள் இங்குள்ள பழமை வாய்ந்த கிறித்தவ கோயில்களில் காணப்படுகின்றன.



ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெற்ற இலங்கை, ஆங்கிலேயனின் சூழ்ச்சியால் சிங்கள, தமிழ், இசுலாமிய மக்களிடையே ஆண்டான் - அடிமை நிலையை ஏற்படுத்திக் கொண்டது. பொருளாதாரத்திலும், கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் சிறந்து விளங்கிய தமிழர்களை 'வந்தேறு குடிகள்' என்று வரலாற்றை திரித்து, சிங்கள - பௌத்த பேரினவாத கொள்கைகளை முன் வைத்து தமிழினத்தை அழித்து ஒழிக்க முற்பட்டனர். தமிழர்கள் வந்தேறிகள் என்பது வரலாற்றுப் பிழை, திரிபு என்பதை யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் 'பொங்கு தமிழ்' நிகழ்வின் சார்பாக நடத்திய கண்காட்சியில் ஆதாரத்துடன் நிரூபித்திருந்ததை கண்கூடாக கண்டேன். இலங்கை வாழ் அனைத்து தமிழர்களையும் ஓரணியில் திரட்டி, பலம் வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினரான தந்தை செல்வா என்றழைக்கப்பட்ட திரு. செல்வநாயகம் போன்றோர் எவ்வளவோ அற வழியில் முயன்றும் தமிழர் உரிமையை நிலைநாட்ட முடியவில்லை. வேறுவழியேயின்றி தமிழ் இளைஞர்கள் சிலர் ஆயுதமேந்தி போராடும் துர்நிலைக்கு தள்ளப்பட்டனர். கடந்த இருபது ஆண்டளவாக நடைபெற்று வந்த அந்த போரின் கோரவிளைவுகள் சொல்லில் அடக்க முடியா. தமிழரின் பொருட் செல்வம் மட்டுமன்று இலங்கை நாட்டின் பொருளாதாரமும் அழிந்தது. இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் பெருமளவு தமிழர்கள் வாழும் இடங்களில் நிலபுலன்கள், வீடுகள், வீட்டுப்பொருட்கள் அழிக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. ஆயிரங்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். பலரும் நிரந்தரமாக ஊனமாக்கப்பட்டுள்ளனர். இலங்கை முழுவதும் வாழ்ந்த தமிழ் இளையோர் மற்றும் ஆண்கள் பலர் காணாமல் போயினர். சோதனை, உசாவுதல், சந்தேக தடுப்புக் காவல் என்ற பெயரில் இன்றும் பலர் தென் இலங்கை சிறைகளில் வாடுகின்றனர். அறுபதினாயிரம் அப்பாவிகளின் உயிர்களைப் பலிகொண்டு, இலட்சக்கணக்கானோரை அகதிகளாக்கி, பெண்களை விதவைகளாக்கி, மாணவச்செல்வங்களின் கல்வியைப் பாழாக்கியதுடன், அநாதைகளுமாக்கிய இருபது ஆண்டுகால மிலேச்சத்தனமான யுத்தம் **இறப்பு, இழப்பு, இடப்பெயர்வு** என்ற முப்பரிமாண துன்பத்திற்கு தமிழர்கள் ஆளானது சொல்லொண்ணா வருத்தமளிக்கிறது.

### வதிவிட சேதங்கள்

வட இலங்கையில் தமிழர் பகுதியின் எல்லைப் பகுதியான வவுனியா தொடங்கி கிளிநொச்சி வழியாக யாழ்ப்பாணம் செல்லும் வரை எல்லா கட்டிடங்களும் முழுவதுமாக சேதமாக்கப்பட்டுள்ளன. மேல் கூரைகளே காண முடியாது. கான்கிரீட் கட்டடங்கள் மற்றும் தூண்கள் உடைந்து சாய்ந்துள்ளன. பக்கவாட்டு சுவர்கள் எல்லாம் துப்பாக்கி குண்டுகளால், செல் தாக்குதலால் துளைக்கப்பட்டுள்ளன. பல வீடுகளும், நிலங்களும் இராணுவ கட்டுப்பாட்டில், ஆக்கிரமிப்பில் இன்றுமுள்ளன. பல கிராமங்கள் முழுவதுமாக அழிக்கப்பட்டுள்ளன. இதை



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

வவுனியாவிலிருந்து மன்னார் செல்லும் பாதையோரம் பார்த்தேன். யாழ்ப்பாணம் மற்றும் தமிழீழம் முழுவதும் இதே நிலையென அறிகிறேன். சிறிய சிறிய இராணுவ முகாம்களை அமைத்து இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள தமிழர் நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப் பட்டுள்ளன.அப்பகுதிகளில் வசித்து வந்த மக்கள் அகதிகள் முகாம்களில் இன்றும் அவதிப்படுகின்றனர்.

வடக்கு - கிழக்கு மாவட்டங்கள் ஊடாக செல்லும் எல்லா வீதிகளும் கடந்த 20 ஆண்டளவாக பராமரிக்கப்படாமல் முற்றும் பழுதடைந்து குண்டும் குழியுமாக காட்சி தருகிறது. ஐம்பது கிலோ மீட்டர் தூரமுள்ள பகுதிகளை கடக்க இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக ஆகிறது. பேருந்துகள் மற்றும் சிறு வாகனங்களை விடுதலை புலிகளும், அவர்களின் அனுமதியோடு சில தனியார்களும் இயக்குகின்றனர். மின்சாரம், தொலைத் தொடர்பு வசதிகளேயில்லை. சில முக்கிய ஊர்களில் விடுதலைப் புலிகள் இரவு நேரங்களில் மட்டும் பெரிய ஜெனரேட்டர்களின் மூலமாக மின்சார வசதி தருகின்றனர். மின்சாரம் கடத்தும் பெரிய தூண்கள், கோபுரங்கள் போரில் தகர்க்கப்பட்டுள்ளன. சாலை, மின்சாரம், தொலைத் தொடர்பின்றி பொதுமக்கள் அவதிபட்டது மட்டுமின்றி, எவ்வாறு ஒரு தேசம் பொருளாதார, தொழில் முன்னேற்றம் காண இயலும்? தமிழீழ நிர்வாக கட்டமைப்பு மக்களின் இக்குறைகளைப் போக்க முயற்சிக்கிறது.

வாழ வேண்டும் என்ற துணிவும், நம்பிக்கையும் கொண்ட மறத்தமிழர்கள் எல்லாவற்றையும் இழந்துவிடவில்லை. 'மானமும், அறிவும் மனிதருக்கு அழகு' என்ற பெரியாரின் சொற்படி தமிழரினம் இன்று இங்கு புதுவாழ்வைத் தொடங்கியுள்ளது. புது வீடுகள் கட்டப்படுகின்றன. சேதமடைந்த வீடுகள், கட்டிடங்கள் திருத்தப்படுகின்றன. விவசாயம் மேற்கொள்ளப்பட்டு நெல், வெங்காயம், கத்தரிக்காய் மற்றும் கடலை, சோளம், பயிறு போன்றவை பயிரிடப்படுகிறது. இயற்கை வளம் மிகுந்த தமிழீழத்தில் மிதிவெடிகள் ஆபத்து பெருமளவில் காணப்பட்டாலும் எப்போதும் இல்லா அளவுக்கு விவசாயம் செய்யப்பட்டு இந்த வருடம் தன்னிறைவு பெற்றுள்ளனர். புது படகுகள், புது இயந்திரங்கள், புது வலைகள் என கடலோர பகுதி தமிழர்கள் புது வாழ்க்கையினை மேற்கொண்டுள்ளனர். கடற்புலிகளின் பாதுகாப்பில் முல்லைத் தீவு, அளம்பில் போன்ற கிழக்கு கடற்கரை கிராம மீனவர்களின் வாழ்வு ஏற்றம் பெறுகிறது.

## உளவியல் பாதிப்புகள்

கடந்த 25 ஆண்டு கால போரினால் தமிழ் சமூகம் பல்வேறு உளவியல் ரீதியான பாதிப்புக்களையும் அடைந்துள்ளது. குறிப்பாக



இளைஞர்களிடையே வன்முறைக் கலாச்சாரம் பெருகியுள்ளது. சிறிய, அற்ப காரணங்களுக்காக பெரியவர்களை எதிர்த்து பேசுதல், உடன்பிறந்தவர்களோடு முரண்படுதல், நண்பர்களோடு சண்டையிடுதல் என்பன அதிகமாக காணப்படுகின்றன. போருக்கு முன் பிறந்தவர்கள், போர் காலத்தில் பிறந்தவர்கள் என்ற வேறுபாடு காணக்கூடியதாக உள்ளது.

கடந்த 25 ஆண்டு கால போரில் தமிழ் சமூகம் கண்ட கொடுமைகள், வானிலிருந்து இடிபோல் விழும் குண்டுகள், தலைக்கு மேல் ஊசலாடும் கத்தி போல் பறக்கும் விமானப்படைப் போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள். குண்டு வெடித்து சிதறும் போது சிதறும் மனித உடல்கூறுகள். தசைபிண்டங்கள், வழிந்தோடும் இரத்த ஆறுகள், தலையில்லா முண்டங்கள், உடலில்லா தலைகள், மண்ணோடு கலந்த மனித தசைகள். . . . . . சொல்லும் போதே மனதை பிசைகின்றது. இதை பார்த்தவர்கள், அனுபவித்தவர்கள் எப்படி ஒரு சாதாரண மனித வாழ்வை வாழ முடியும்? தனது கண்முன்னே உயிருக்காக ஓலமிட்ட குழந்தைகள், உயிருக்காக போராடும் பெற்றோரை காப்பாற்ற இயலாது துடித்த பிள்ளைகள், கணவன் முன்னால் நிர்வாணமாக்கப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட இளம் பெண்கள். . . இன்னும் எத்தனையோ எத்தனை. . .

இவ்வளவு துன்பங்களை அனுபவித்தும் சராசரியான மனித வாழ்க்கையை வாழ்வது கடினமானதொன்றாகும். ஆகவே தான் இன்று பலர் மனநோயாளிகளாக, நடமாடும் பிணங்களாக வாழ்கின்றார்கள். சிலருக்கு பேய் பிடித்து விட்டது என்று ஆன்மீக வைத்தியங்கள் செய்யப்படுகின்றது. சிலருக்கு தாங்கள் என்ன செய்கின்றோம், எங்கு போகின்றோம், என்ன பேசுகின்றோம், என்ன சாப்பிடுகின்றோம் என்று கூட தெரியாமல் விலங்கினதும் கீழான வாழ்க்கை வாழ்கின்றார்கள்.

முல்லைத்தீவில் ஒரு சிறிய பெண் குழந்தை. மாலை நேரங்களில் தலைவலி. தலையை வெட்டி விடலாமா என்று நினைக்குமளவுக்கு தலைவலி. பல ஆண்டுகளுக்கு பிறகு கொழும்பிலுள்ள நரம்பியல் மருத்துவ நிபுணர்கள் நோய்க்கான காரணம் தெரியாமல் கைவிரித்து விட்டனர். இக்குழந்தை தாயின் கருவில் இருந்த போது அல்லது பிறந்து கைக்குழந்தையாக இருந்த போது பெரிய குண்டு வெடித்து அதிர்ச்சியை அனுபவத்திருக்கலாம் என்று அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பொதுவாகவே இங்கு மக்களிடையே ஒரு பரபரப்பான பயந்த மனநிலையை அவதானிக்கலாம். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சம் கலந்த மனநிலையிலேயே வாழந்து விட்டதால் இந்த பரபரப்பு இன்னும் காணக்கூடியதாக உள்ளது. ஆகவே நிதானமாக, திட்டமிட்டு, மனதை ஒருநிலைப்படுத்தி செயல்படும் தன்மை இங்கு



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

மிகக்குறைவு. எந்த செயலுக்கு எப்போது முதலிடம் தரவேண்டும் என்று சிந்தித்து செயல்படுவதும் சற்று குறைவாக உள்ளதாக அவதானிக்கின்றேன்.

மன்னாரில் பத்தாம் ஆண்டு படிக்கும் சிறுவனுக்கு இருளைக் கண்டால் பயம். வீட்டில் எல்லோரும் கூடியிருக்கும் அறையை விட்டு ஒளி வெளிச்சம் குறைவாக இருக்கும் அடுத்த அறைக்கோ அல்லது வீட்டு முற்றத்திற்கோ செல்ல பயம். காரணம் போரினால் ஏற்பட்ட அதிர்ச்சிதான்.

சிறுவர், சிறுமியர், இளைஞர்கள், இளம்பெண்கள் என்று அனைவருமே உளவியல் ரீதியாக மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவே வாழ்கின்றார்கள். சிலருக்கு பாதிப்பு குறைவாக காணப்படுகின்றது. சிலருக்கு மருத்துவம் கைவிடும் அளவு பாரிய பாதிப்பாக உள்ளது. தமிழின அழிப்பின் ஒரு கோர முகம் இது.

## உழைக்கும் சிறார்

சனவரி மாத இறுதி. மாலை வேளை, முல்லைத் தீவு கடற்பரப்பில் இளைஞர்களோடு கடலோர காற்றினை மட்டுமல்லாமல் மீனவர்களின் வாழ்வினையும் உள்வாங்கிக் கொண்டிருந்தேன். அது இறால்படு பருவம். ஒவ்வொரு மீனவக் குடும்பமும், குடும்ப சகிதமாக கடற்கரையில் படகுகளில் அமர்ந்து மீன்வலைகளிலிருந்து இறாலைப் பிரித்தெடுத்து வலைகளை கழுவி சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். பெருமளவில் இறால்மீன் பிடிபட்டதால், புது படகு, இயந்திரம், வலை போன்றவைகளை வாங்க பெற்ற கடனை அடைத்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு ஆழ்கடலோடு போராடினார்கள். ஒரே நாளில் மூன்றுமுறை கடலுக்கு சென்று திரும்பி வருவாயீட்ட முயற்சித்தனர். இந்த நம்பிக்கை நிறைந்த கடும் உழைப்பு தமிழருக்கே உரித்தாயினும் பல சிறுவர்கள், சிறுமியர்கள் கடற்கரையில் வேலை பார்ப்பதையும் காணமுடிந்தது. முக்கிய வீதிகளில் இளம்சிறார்கள் சோளம் மற்றும் கச்சான் (வேர்க்கடலை), பாலம்பழம் (காட்டுப்பழம்) விற்பதையும் சில இடங்களில் காணமுடிந்தது. படிக்க வேண்டிய குழந்தைகள் வேலை பார்க்க வேண்டிய தூர்நிலைக்கு தள்ளபட்டது ஏன்? படிப்பை பாழாக்கிய அரசை பழிப்பதா? வறுமையினால் குழந்தைகளை பாடசாலை அனுப்பாத பெற்றோரை குறைசொல்வதா?

## கல்வி நிலை

போரினால் பல கல்விக் கூடங்கள் தரை மட்டமாகிவிட்டன. போர்காலத்தில் இடம் பெயர்ந்த எல்லா குடும்பங்களும் தமது குழந்தைகளின் கல்வியை மறந்தனர். தமிழர் பகுதிகளில் பயிற்றுவிக்க ஆசிரியர்கள் இல்லாதுபோய்விட்டனர். குடும்ப பாரத்தை சுமக்க



குழந்தைகளும் வேலைக்கு செல்ல வேண்டிய அவல நிலை. தமிழர்கள் முறையான கல்வி கற்றாலும் மேல் படிப்பிற்கோ, வேலை வாய்ப்பிற்கோ உத்திரவாதம் இல்லா சூழ்நிலையில் குழந்தைகள் கல்வியை இழந்தனர். அறிவும், திறமைகளும் கொண்ட தமிழினம் திட்டமிட்டு கல்வி மறுக்கப்பட்டு சிதைக்கப்பட்டது. இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள தமிழர் வதியிடங்களில் பல பாடசாலைகள் இராணுவ கட்டுப்பாட்டில் இன்றும் தொடர்ந்து இருப்பதானால் குழந்தைகள் பாடசாலைக்கு செல்ல மறுக்கின்றனர். ஐக்கிய நாடுகளின் சபையின் உதவியாலும், பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் முயற்சியாலும் எல்லா குழந்தைகளும் கல்வி பயிலுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். பாட புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. கலை, அறிவியல் கல்லூரிகள், விவசாயம் மற்றும் தொழில் நுட்ப கல்லூரிகளை தமிழர் பிரதேசங்களில் நிறுவ தமிழீழ கல்வித்துறை முயற்சி மேற்கொண்டுவருகிறது.

## வழிபாட்டு தலங்கள்

சிங்களவரின் கண்மூடித்தனமான தாக்குதலில் பல கோயில்களும் தரைமட்டமாகிவிட்டன. சில இந்து கோயில்கள் பௌத்த கோயில்களாகவும் மாற்றப்பட்டுள்ளன. கோயில்களே தஞ்சம் என்று மக்கள் போர்காலத்தில் அடைக்கலம் புகுந்த பல கோயில்களும் தாக்கப்பட்டன. உதாரணமாக இலங்கையில் எல்லா மதத்தினரும், இனத்தவரும் புனித இடமாக கருதும் மருதமடு மாதா திருத்தலம் 1999ம் ஆண்டு போரின் உக்கிரத்தால் கோயிலில் தஞ்சமடைந்த 3000 மக்களைக் கேடயமாகக் கொண்டு திடீர்



இடிந்து போனவை கட்டிடங்கள் மட்டுமே – எமது வாழ்க்கையல்ல



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

ஆக்கிரமிப்பு செய்த சிங்கள இராணுவம் மடுத்திருத்தலத்தைப் போர்முனையாக்கியதின் விளைவாக செல் தாக்கி 42 பேர், அப்பாவி மக்கள் இறந்தனர். அதில் பெரும்பாலோர் சிறு குழந்தைகள்.

1995ம் ஆண்டு ஜீலை மாதம் 9ம் தேதி யாழ்ப்பாண தீபகற்பத்தில் நவாலி தூய பேதுரு ஆலயத்தில் புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் தாக்கி 141 பேர் கொல்லப்பட்டனர். குருநகர் தூய ஜேம்ஸ் ஆலயத்தில் ஏழுபேர் கொல்லப்பட்டனர். 1992ம் ஆண்டு மே மாதம் 18ம் தேதி முல்லைத்தீவு வற்றாபளை கண்ணகி அம்மன் கோயில் மீது நடந்த எறிகணைத் தாக்குதலில் 15 பேர் இறந்தனர். பரந்தன் முருகன் கோயில் கிணற்றிலிருந்து அபாயகரமான வெடிமருந்துகளும், ஆர்.பி.ஜி எறிகணைகளும் மீட்கப்பட்டன. இன்னும் பல கோயில்கள் இன அழிப்பின் சாட்சியாக உருக்குலைந்து காணப்படுகின்றன. இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள தமிழர் பகுதிகளிலுள்ள இந்து கோயில்கள் சில பௌத்த கோயிலாக, இராணுவத்தினர் வழிபடும் இடமாக மாற்றப்பட்டுள்ளன. ஓமந்தை, மன்னார் ரோடு போன்ற இடங்களிலும் யாழ்ப்பாணம் செல்லும் வீதிகளிலும் சில கோயில்கள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டு பயன்பட்டு வருவதும் கண்கூடு. சனவரி மாதம் நான் தங்கியிருந்த முல்லைத்தீவு தூய பேதுரு ஆலயமும் 1995ம் ஆண்டு இராணுவ முகாமாக இருந்தது. கோயில் சுவர்களிலும், கதவுகளிலும் இராணுவ பெயர்களும், சிங்கள வார்த்தைகளும் எழுதப்பட்டுள்ளன. குண்டடிபட்டு கோயிலின் பிராதான வாயிற்கதவு சல்லடைபோல் துளைக்கப்பட்டுள்ளதும் இன்றைய வரலாற்று சின்னங்கள்.

## மிதிவெடி அபாயம்

வவுனியா தொடக்கம் யாழ்பாணம் செல்லும் 193 கிலோமீட்டர் தூரம் முழுவதும் வீதியின் இருபுறமும் கண்ணிவெடி அபாயச் செய்தி காணப்படலாம். இந்த வீதிதான் தமிழீழ போராட்ட வரலாற்றில் உலக பிரசித்தி பெற்ற 'ஆல்பா9' (A9) கொழும்பு - கண்டி வீதி. இலங்கை இராணுவமும் விடுதலை புலிகளும் கண்ணி வெடிகளை அதிகமாக பாவித்துள்ளனர். உலகில் எங்கெல்லாம் யுத்தம் நடந்துள்ளதோ அங்கெல்லாம் கண்ணி வெடிகளால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்களுக்கு புலப்படாதவாறு நிலத்தில் புதைக்கப்பட்டுள்ள இவ்வகை வெடிகள் மனிதர்களையும், மிருகங்களையும் வெகுவாக பாதித்து ஊனமடையச் செய்துள்ளது. இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர் பகுதிகளில் மட்டும் சுமார் 20 இலட்சம் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகவும், அவைகளில் இதுவரை ஒரு இலட்சம் மட்டுமே மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாகவும், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிபுணர் குழு தெரிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் தாங்களாகவே சொந்தமாக கண்ணி வெடிகளை தயாரித்துள்ளனர். அவை பெரும்பாலும் மரத்தினால் செய்யப்பட்டதாகவும், மிகவும் சக்தி



வாய்ந்ததாகவும் அமைந்துள்ளன. அதே நேரத்தில் அவை காலத்தால் விரைவில் அழியக்கூடியதாகவும் உள்ளது. சிங்கள இராணுவம் இஸ்ராயேல், பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளிலிருந்து மிதிவெடிகளை இறக்குமதி செய்துள்ளது. இவை பிளாஸ்டிக் பொருட்களால் செய்யப்பட்டுள்ளதால் பல வருடங்களுக்கும் அழியாமல் நிலத்தில் உள்ளது. கண்ணி வெடிகளுக்கு நண்பன் யார், எதிரி யார் என்று அடையாளம் தெரியாது. மனிதருக்கும் மிருகங்களுக்கும் கூட வித்தியாசம் தெரியாத இவ்வகை மிதிவெடிகள் இன்றும் பொது மக்களுக்கு மிகப்பெரும் அபாயமாகத்தான் உள்ளது.

சிறுவனின் பெயர் விமல். நண்பர்கள் கூப்பிடும் பெயர் மைன்ஸ் (MINES). படிப்பு ஏழாம் ஆண்டு. 1998ம் ஆண்டு மன்னார் மாவட்டம் சிலாவத்துறையில் அகதியாக வாழ்ந்த நேரம் வீட்டிற்கு அருகே விளையாடிக்கொண்டிருந்த போது இரும்பு பொருள் ஒன்றைக் கண்டிருக்கின்றான். அது ஏதோ விளையாடும் பொருள் என்று கண்டெடுத்தவன் அதை விளையாட்டாக தரையில் எறிந்த போது ஏற்பட்ட விபரிதம் தான், "அய்யோ அம்மா" என்று தூக்கி எறியப்பட்டான். பாரிய வெடிச்சத்தம் கேட்டு அக்கம் பக்கத்திலிருந்த பெரியவர்கள் கூடி வந்து பார்த்த போது விமல் காலில் மூன்று பெரிய காயங்கள் ஏற்பட்டு இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது.

அவன் விளையாட்டாக எறிந்த பொருள் ஒரு மிதி வெடி.




வீதிகளில் காணப்படும் மிதிவெடி அபாய அறிவிப்பு பலகைகள்



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

சிலாவத்துறையில் இலங்கை இராணுவம் முகாம் அமைந்து இருந்த நேரத்தில் பாதுகாப்புக்காக தங்கள் முகாம் சுற்றி வேலி போல் மிதிவெடிகளை புதைத்து வைத்து விட்டனர். முகாம்களை அகற்றிய போது கண்ணிவெடிகளை முழுவதுமாக அகற்றவில்லை. தமிழர் பகுதிதானே என்று அலட்சியம் செய்ததன் விளைவு இந்த விபத்து. இது போன்று எத்தனையோ பேர் கால்களை இழந்து அங்கவீனர்களாகவும், உயிரை இழந்தும் அழிந்தும் போயுள்ளனர். பி.பி.சி வானொலியின் தகவலின்படி மிதிவெடியினால் பாதிக்கப்பட்டவர்களில் 78 சதவீதமானோர் சிறார்கள் என்று ஐரோப்பிய மிதிவெடி அகற்றும் நிபுணர் குழு கருத்து கணிப்பு செய்துள்ளது. இவ்வாறாக எமது எதிர்கால தலைமுறையினரை ஊனமாக்கியுள்ளனர் பகைவர்கள். எமக்கு உடல் ஊனம் ஊனமேயில்லை.

## அண்டை நாடுகளின் உறவு

கடந்த இருபது ஆண்டுகால தமிழீழ விடுதலை போராட்டத்தில், உலக நாடுகள் தங்களையே சிங்கள பேரினவாத ஆதிக்க சக்திக்கு அடிமையாக்கி கொண்டனர். தென்னாப்பிரிக்க விடுதலையை ஆதரித்த உலக நாடுகள், பாலஸ்தீன விடுதலையை ஆதரித்தவர்கள், கொசாவோ இன விடுதலையை கை கொடுத்து மீட்டவர்கள் இலங்கையில் தமிழரின் விடுதலை போராட்டத்தை மட்டும் தீவிரவாதம் என்றனர். பிரிவினைவாதம் என்று முத்திரைக் குத்தினர். இதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

- மேற்கத்திய நாடுகள், தென்கிழக்கு ஆசியாவில் செல்வாக்கு பெற அந்தந்த நாடுகளின் அரசியல் தலைமையை ஒருபோதும் பகைத்ததில்லை.
- தெற்காசியாவில் வல்லரசு நாடாக திகழும் இந்தியாவின் எந்தவொரு நிலைப்பாட்டிற்கும் எதிராக உலக நாடுகள் எப்போதும் நின்றதில்லை. எந்த நாட்டில் யார் ஆட்சி செய்தாலும் இதே நிலைதான்.

ஆனால் இன்று உலக நாடுகள் அனைத்தும் இலங்கைவாழ் தமிழர்களின் ஒரே பிரதிநிதி ‘தமிழீழ விடுதலைப் புலிகள்’ தான் என்பதை ஏற்றுக் கொண்டு (பின்வரும் பக்கங்களில் இதை விரிவாக ஆராய்வோம்), அவர்களோடு கை குலுக்கி நிற்கின்றனர். கடந்த ஜனவரி மாதம் மட்டும் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் வன்னிக்கு விஜயம் மேற்கொண்டு புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். 2003 ஜனவரி 21ம் தேதி அன்று மட்டும் அமெரிக்காவின் வேர்ல்ட் விஷன், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள், டேனிஷ் அகதிகள் பேரவை பிரதிநிதிகள் மற்றும் ஜப்பான், ஐ.நா.சபை அதிகாரிகள் தமிழீழ தாயகத்தில் வன்னி பிரதேசம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ் செல்வன் அவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். (ஆதாரம்: ஈழநாதம், 22-01-2003) ஐ.நா. சபையின் செயலர் திரு. கோபி



அன்னான் விரைவில் தமிழீழத்திற்கு விஜயம் செய்வார் என்று பத்திரிகை செய்தி வெளியாகியிருந்தது. யூலை மாதம் A9 பாதையூடாக புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் இலங்கைக்கான கனேடிய தூதர், அமெரிக்க தூதரக அதிகாரிகள் மற்றும் ஜப்பான், நோர்வே தூதர்கள் பயணமானார்கள். ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் அரபு நாடுகளின் அபிவிருத்தி வங்கி போன்றவை நேரடியாக தமிழீழத்தில் மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டுள்ளனர். உலக நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் தீவிரவாத இயக்கமாக தடை செய்யப்பட்டதாக இருப்பினும், இலங்கையில் தடை நீக்கப்பட்டு தமிழர் பகுதிகளில் மட்டுமல்ல தலைநகர் கொழும்புவிலும் அரசியல் அலுவலகங்களை விடுதலைப் புலிகள் ஏற்படுத்தியுள்ளனர்.

“விடியல் அவசியமென்பதால் அவர்கள்
சூரியனையும் நகர்த்துவார்கள்.
வாழ்வது சாத்தியமென்றால் அவர்கள்
பூமியையும் புரட்டுவார்கள்”

ப்ரவீன் என்பவர் எழுதியதாக எங்கோ நான் வாசித்தேன் உண்மைதான் தமிழன் வாழ்வது சாத்தியமென்றால் உலக நாடுகளெல்லாம் தமிழீழம் நோக்கி வர பூமியையும் புரட்டுவார்கள். அதுதான் இன்று, இங்கு நடந்து கொண்டிருக்கின்றது.

## இந்தியாவின் இன்றைய நிலை

உலகநாடுகளின் பிரதிநிதிகள் அதிலும் குறிப்பாக ஜப்பானின் விசேட தூதுவர் மற்றும் இங்கிலாந்தின் வெளியுறவு இணையமைச்சர் போன்றோர் தமிழீழத்தில் விடுதலைப் புலிகளோடு நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி, நிதியுதவிகளை தாராளமாகச் செய்ய வாக்குறுதி கொடுத்த நேரத்தில் இந்தியாவின் நிலை தர்ம சங்கடத்திற்குள்ளானது. நோர்வே, ஒஸ்லோவில் நடைபெற்ற நிதியுதவி செய்வோர்கள் மாநாட்டில், புலிகள் கலந்து கொள்ளும் எந்தவொரு கூட்டத்திலும் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்று நீதிமன்றத்தில் தடையுத்தரவு வாங்கியுள்ள நேரத்தில் இந்தியா இலங்கையின் சமாதான முயற்சியில் ஒதுங்கியிருப்பது நல்லதல்ல என்று உணர்ந்துள்ளனர். ஆகவேதான் இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியில் போரினால் சேதமுற்ற பௌத்த விகாரைகளை சீர்படுத்த இந்தியா உதவும் என்ற செய்தியானது வெளியிடப்பட்டது. இந்தியாவில் சிறுபான்மையினரின் பாதுகாவலனாக பிதற்றிக் கொள்ளும் பா.ஜ.க. வடஇலங்கையில் சிறுபான்மையுள்ள பௌத்த மதத்தினருக்கு கை கொடுக்க விரைந்துள்ளது.

இந்துத்துவா கொள்கையின் அடிப்படையில் இந்து மதத்தைக் காப்பாற்றவும், உலக இந்துக்களை ஒன்று சேர்க்கவும் முயற்சிக்கும்



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

பா.ஜ.க., வட இலங்கையில் ஆயிரங்கணக்கான இந்து தமிழர்கள் கொல்லப்பட்ட போது வாய் பொத்தி மௌனம் காத்தது ஏன்? பல இந்து கோயில்கள் இலங்கையில் தரைமட்டமான போதும், பௌத்த விகாரையாக மாறின போதும் பேசாமல், ஆதிக்க சக்திகளின் பக்கம் சாய்ந்தது ஏன்? தமிழர்களின் தாயகமான தமிழீழத்தில் அழிந்து போன பாரம்பரிய இந்து கோயில்களையும், இந்து தமிழர்களின் மறுவாழ்வையும் விட வந்தேறிகளின் பௌத்த விகாரைகளை சீர்படுத்த சிங்கள பேரினவாத அரசுக்கு நிதியுதவி செய்வதுதான் இந்தியாவின் இன்றைய தலையாயக் கடமையா?

ஆதிக்க சக்திகளோடு கை கோர்த்துக் கொள்வதுதான் பார்ப்பனிய தத்துவம். தாழ்த்தப்பட்ட இந்து மத தலித் சகோதரர்கள் இதை உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும். நாம் இந்துக்கள் என்று சமத்துவம் கொண்டாடினாலும், பார்ப்பனிய தலைமைத்துவம் நம்மை அடிமைப்படுத்தும்.

## மாவீரர் துயிலும் இல்லங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் மனநோயாளர்கள், போதை மருந்துக்கு அடிமையாகி தீவிரவாதத்தில் ஈடுபடுகிறார்கள் என்றெல்லாம் சில வருடங்களுக்கு முன்பு இந்திய பத்திரிகையில் செய்தி வெளியானது. இத்தகைய புனைக்கதைகளை எழுதியவர்களுக்கும், அதை நம்பினவர்களுக்கும் இதோ ஓர் செய்தி.

ஆயிரங்கணக்கான தமிழ் இளையோரை பலி கண்ட கோரப் போர். படிக்க வேண்டிய வயதில், இளமை சுகங்களை அனுபவிக்க வேண்டிய பருவத்தில் மண்ணுக்காய், மக்களுக்காய் இன்னுயிரை நீத்த மாவீரர்களை, தேச தியாகிகளை விடுதலைப் புலிகள் இயக்கம் தக்க மரியாதையோடு வணக்கம் செலுத்தும் இடங்களே, மாவீரர் துயிலும் இல்லங்கள். கிறித்தவ கல்லறைகளைப் போன்று, போரில் வீரச்சாவு எய்திய வீரர்களை அடக்கம் செய்து, வருடந்தோறும் முதல் களப்பலியான போராளி சங்கர் இறந்த நவம்பர் 27ம் நாளை மாவீரர் தினமாக தமிழீழ தேசமெங்கும் கொண்டாடி வருகின்றனர். மாவீரர்களின் தியாகத்தை உணர்த்தும் வகையில் அவர்களுடைய கல்லறைகளில் ஈகஜோதி ஏற்றப்படுகிறது.

வன்னிக் காட்டில் விசுவமடுவிலும், முள்ளியவிளையிலும் யாழ்குடா நாட்டில் கோப்பாயிலும், மன்னார் மாவட்டத்தில் பண்டிவிரிச்சான், முளங்காவில், மற்றும் ஆண்டான்குளத்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை நேரில் கண்டேன். மிக அழகான கல்லறைத் தோட்டங்கள். வரிசையாக ஒரே மாதிரியான கல்லறைகள். சுற்றிலும் அழகான மலர்த் தோட்டங்கள். அருமையான பராமரிப்பு. எந்த நாட்டிலும், நாட்டிற்காக இறந்த வீரர்களுக்கு செய்யப்படாத மரியாதை தமிழீழத்தில் மட்டுமே



செய்யப்படுகிறது. வீரச்சாவு எய்திய மாவீரர்களின் தியாகம், அர்ப்பணிப்பு, ஈகை, போர்களத்தில் பட்ட துன்பங்கள், எல்லா வற்றுக்கும் மேலாக அவர்களுடைய இலட்சியம் மறக்கப்படாமல் தலைமுறைக்கும் நினைவுகூறப்படும். இறப்பினும் நாம் வாழ்வோம் என்ற எண்ணமே இளையோரை போராட்ட வாழ்விற்கு அழைக்கிறது. தனது பிள்ளை மாவீரன் என்பதை சில பெற்றோர் மனமுவந்து பெருமையோடு என்னிடம் கூறியுள்ளனர். முள்ளிக்குளத்தை பிறப்பிடமாக கொண்ட அந்தோனி என்ற இளைஞன் முருங்கன் பாடசாலையில் பனிரெண்டாம் ஆண்டு படித்து கொண்டிருந்தபோதே இயக்கத்தில் இணைந்து 2001ம் ஆண்டு முகமாலையில் நடைபெற்ற சமரில் வீரச்சாவு எய்தியுள்ளான். செப்டம்பர் மாதம் எட்டாம் தேதி அவருக்காக இரண்டாமாண்டு நினைவு திருப்பலியை நான் முள்ளிக்குளத்தில் நிறைவேற்றிய போது அவரின் தியாகத்தை நினைத்து என்னையறியாமலே அழுதுவிட்டேன்.

இந்த மாவீரர்களின் துயிலும் இல்லங்களின் விடுதலை தாக்கத்தை சரியாக உணர்ந்து கொண்ட சிங்கள இராணுவம் யாழ்குடா நாட்டை 2000ம் ஆண்டில் கைப்பற்றிய போது கோப்பாயில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தை புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்கினர். இன்று மீண்டும் முன்னதைவிட அழகான தோற்றத்தை அது பெற்று மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துகிறது.




மாவீரர் துயிலும் இல்லங்கள், உயிர் வாழ்பவர்களின் பாசறைகள்.
தமிழீழம் மலரும் நாள், இவர்களின் உயிர்ப்பு பெருநாள்.



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

# தமிழருக்கெதிரான கூட்டு சதி

தமிழக மீனவர்கள் 100 பேரும் அவர்களுடைய மீன்பிடி படகுகளும், மீன்படி வலைகளும் இலங்கை மீனவர்களால் கடத்தப்பட்டன. இது தமிழகத்தில் வெளியான செய்தி. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறல். இது இலங்கையில் வெளியான செய்தி. நடந்த சம்பவம் ஒன்று, ஆனால் செய்திகளோ இரண்டு. தமிழர்களை குழப்பி அரசியல் ஆதாயம் தேடிக்கொள்ள பலரும் முன்வருவதை இந்நிகழ்வு தெளிவுபடுத்துகின்றது. இச்சம்பவங்கள் நடந்த போது இலங்கை, மன்னார் மாவட்டத்தில் பேசாலையில் நிகழ்வு ஒன்றில் நான் கலந்து கொண்டதால் நேரடியான செய்திகளை, உண்மையை முன் வைக்கும் பொறுப்பினை இந்திய தமிழன் என்ற முறையில் ஏற்று முன்வருகிறேன்.

2003, மே மாதம் 3ம் தேதி மதியம் இலங்கை, மன்னார் மாவட்டம், பேசாலை என்ற மீனவ கிராமத்தில் இந்திய படகுகள் வருவதை கண்ணுற்ற மக்கள், இந்திய படகுகளை எல்லைக்கு அப்பால் துரத்தவே சென்றனர். இந்திய மீனவர்கள் இலங்கை எல்லையில் அத்துமீறி நுழைந்து, தங்கள் படகுகளையும், மீன்பிடி வலைகளையும் சேதப்படுத்துவதாகவும், தடை செய்யப்பட்ட இரட்டைமடி வலைகளைப் பயன்படுத்தி சிறிய மீன்களையும் அடியோடு பிடித்து செல்வதால் தங்களின் மீன்வளம் குன்றுவதாகவும் இலங்கை மீனவர்கள் தெரிவிக்கின்றார்கள். இந்திய கடற்பரப்பில் மீன்வளம் குன்றியதாலேயே இப்போது இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கின்றார்கள் என்று பேசாலை மீனவர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள். இரவு நேரங்களில் இந்திய படகுகள் நூற்றுக்கணக்கில் வருவதாகவும், அந்த படகுகளில் எரியும் விளக்குகள் ஒரு கிராமமே கடலில் மிதப்பது போன்று தோன்றுவதாகவும் அதனை நேரடியாக பார்த்த அருட்தந்தையர்கள் கூறுகின்றார்கள்.



3ம் தேதி மாலையில் இந்துமாக்கடலில் இலங்கை தமிழ் மீனவர்களுக்கும் இந்திய தமிழ் மீனவர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பில் 17 தமிழ்நாட்டு மீனவர்களும், 4 பேசாலை மீனவர்களும் காயமுற்றனர். 70க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டு மீனவர்கள், இலங்கை மீனவர்கள் உதவியுடன் இலங்கை காவல்துறையினரால் சிறைபிடிக்கப்பட்டனர். அடுத்த நாள் தலைமன்னாரில் 42 தமிழக மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டார்கள். 4ம் தேதி பகலில் பேசாலை கிராமத்தில் விசாரணை செய்ய வந்த இலங்கை காவலர்கள் நடைபெற்ற சம்பவத்திற்காக அப்பாவி இளைஞர்கள் நான்கு பேரை கைது செய்து, இந்திய படகுகளை சேதப்படுத்தியதாகவும், மீன்பிடி கருவிகளை கொள்ளளையடித்தாகவும் பொய் வழக்கு போடப்பட்டு அழைத்துச்சென்றனர். பேசாலை கிராம மக்களின் ஒற்றுமையாலும், உடனடி சாலை மறியல் போன்ற போராட்டத்தினாலும், மன்னார் ஆயர், பங்குதந்தையர்களின் முயற்சியாலும் அந்த அப்பாவி இளைஞர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டனர்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற இந்திய மீனவர்களை நேரில் சந்தித்து விசாரித்த போது அவர்கள் அனைவரும் இராமேஸ்வரம் பகுதிகளை சார்ந்தவர்கள் என்பதும், கூலிக்காக மீன்பிடி தொழிலில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தார்கள். கச்சத்தீவு பகுதிகளில் தங்களை இலங்கை மீனவர்கள் சுற்றி வளைத்து பிடித்ததாகவும், இரும்பு தடிகளால் தங்களை அடித்து, காயப்படுத்தியதாகவும், மயக்க நிலையில் தங்களை கடத்தி வந்ததாகவும் கூறினார்கள். கடந்த காலங்களில் பல முறை இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்ததாகவும், இந்திய, இலங்கை அரசுகள் எவ்வித தடுக்கும் முயற்சிகளை எடுக்காமலும் இருப்பதாகவும் கூறினார்கள்.

மேலும் நடந்த சம்பவங்கள்தான் என் மனதைத் தொட்டு, உண்மையை வெளி கொணர்கிறது. சிறைபிடிக்கப்பட்ட எல்லா இந்திய மீனவர்களையும் பத்திரமாக கொண்டு வந்து, தாங்களாகவே அவர்களுக்கு உணவு சமைத்துத் தந்தார்கள் இலங்கை மீனவர்கள். இந்திய படகுகளைத் தாங்களே கரைக்கு ஓட்டிவந்து அவைகளைப் பாதுகாப்பாக இலங்கை காவல்துறையினரிடம் ஒப்படைத்தார்கள். மருத்துவமமையில் சிகிச்சை பெற்றுவரும் இந்திய மீனவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, புதிய லுங்கிகளை வாங்கி கொடுத்து, ரொட்டி, பிஸ்கட் போன்ற உணவு பொருட்களையும் தொடர்ந்து கொடுத்து கொண்டு வந்தார்கள். கடந்த இருபது ஆண்டுகளாக இலங்கை தமிழர்கள் அகதிகளாக இந்தியா வந்தபோது தமிழக மீனவர்கள்தான் தங்களை அன்புடன் வரவேற்று, உணவளித்து, உபசரித்து, பாதுகாப்பளித்ததை இன்று இலங்கை




FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

தமிழர்கள் நன்றி உணர்வுடன் நினைத்து உதவி செய்கின்றார்கள். இந்திய மீனவர்களும் தங்களைப் போலவே கூலி தொழிலாளர்கள்தான், அவர்களையும் நம்பி இந்திய கடற்கரையில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இருப்பதையும் இலங்கை மீனவர்கள் உணர்ந்து இந்திய படகுகளை சேதப்படுத்தாமல் பத்திரமாக காவல் துறையினரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

உண்மையில் நடப்பது என்ன? முதலாவதாக, இந்திய மீனவ முதலாளிகள் ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு உரிமம் பெற்று கூலிதொழிலாளர்களை அமர்த்தி அவர்களை இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுப்புகிறார்கள். பிடிக்கப்படும் மீன் அளவுக்கு ஏற்பதான் அவர்களுக்கு கூலியும் வழங்கப்படுகின்றது. இலங்கை கடற்பரப்பில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் தமிழக அரசியல்வாதிகளைக் கொண்டு நிலமையைச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையும் இந்த முதலாளிகளுக்கு உண்டு.

இரண்டாவதாக, இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும் இலங்கை, இந்திய கடற்படையினர் கண்டுகொள்ளாமல் அசட்டைதனமாக இருப்பதுவே வேதனைக்குரியது. இந்திய மீனவர்கள்




சர்வதேச எல்லை தாண்டும் இந்திய மீன்பிடி ஆதிக்கம்



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறினார்களா அல்லது இலங்கை தமிழ் மீனவர்கள் இந்திய தமிழ் மீனவர்களையும், படகுகளையும் கடத்தினார்களா? என்ற உண்மை நிலை விசாரிக்கப்பட வேண்டியதொன்றாக இருந்தாலும் இந்திய, இலங்கை கடலோர காவல்படையின் செயல்பாடுகள் கேள்விக்குட்படுகின்றன.

இந்திய கடற்பரப்பிலும், அதற்கு அப்பால் சர்வதேச எல்லைகளிலும், ஒரு சிறிய துரும்பு மிதந்தாலும் அவற்றை கண்டுபிடித்து தாக்கும் ஆற்றல் வாய்ந்த இந்திய கடற்படை பல மணிநேரமாக இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் நடந்த சண்டையை பராமுகமாக இருந்தது ஏன்? நாட்டையும், நாட்டுமக்களையும் காப்பாற்ற வேண்டிய இந்திய, இலங்கை கடலோர காவற்படைகள் தனது மீனவர்கள் தாக்கப்படுவதை ஏன் கண்டு கொள்ளவில்லை? இலங்கை தமிழர்கள் என்றாலே தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தும் இந்திய அரசும், இராணுவமும் தமிழக மீனவர்கள் 120 பேரும் 25 படகுகளும் இலங்கை மீனவர்களால் கடத்தப்பட்ட போது நடவடிக்கை எடுக்க தவறியது ஏன்?

இந்திய கடற்படை போலவே இலங்கை கடற்படையும் தமிழ் மீனவர்களின் பிரச்சனையில் அக்கறையில்லாதது போல் நடந்துகொள்கிறது. இந்தியாவிலிருந்து மீனவர்களும், படகுகளும் கடத்தப்படுவதைத் தடுக்கக்கூட வக்கில்லாத இலங்கை இராணுவம் அப்பாவித் தமிழர்களை விசாரணை என்ற பெயரில் கொடுமைப்படுத்துவதைத்தான் காலம்காலமாக செய்து வந்துள்ளது. யார் யாரை தாக்கினார்கள் என்ற புகார் ஏதும் இல்லாமல் 1500 மீனவ குடும்பங்கள் உள்ள பேசாலை கிராமத்தில் நால்வரை மட்டும் தேர்ந்தெடுத்து கைது செய்தது அடிப்படை மனித உரிமை மீறலாகும். கைது என்ற பெயரில் நடவடிக்கை எடுப்பதாக சர்வதேச நாடுகள் முன் நல்ல முகத்தை காட்டிக் கொள்ளவே இலங்கை அரசு விரும்புகிறது.

இந்திய தமிழர்களுக்கும், இலங்கை தமிழர்களுக்கும் பகைமையை உண்டாக்கி, ஒருவரையொருவர் தாக்கி அழித்து கொள்வதையே இரண்டு நாட்டு அரசுகளும் விரும்புகின்றன. தமிழர்களின் சகோதரத்துவ உணர்வை மழுங்கடிக்கச் செய்து இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் பாலம் அமைப்பதினால் என்ன பயன்? யாருக்கு பலன்? தமிழர்களுக்கெதிரான கூட்டு சதியை தமிழர்கள் உணர்ந்து செயல்படவேண்டும். ஒருவர் மற்றவரின் அடிப்படை வாழ்வாதார, மனித உரிமைகளை மதிக்க வேண்டும். உறவுப் பாலங்களைக் கட்டியெழுப்புவோம்.



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

# கோழை வீரம்

இது என்ன, வித்தியாசமான தலைப்பு. உண்மையான தனது எதிரியைப் பிடிக்க வக்கில்லாத இலங்கை இராணுவமும், காவல் துறையும் பல நேரங்களில் அப்பாவி தமிழ் மக்களிடம் தனது வீரத்தைக் காட்டியிருக்கிறது. ஒன்றுமறியாத அப்பாவி பொது மக்களையும், குழந்தைகளையும், முதியவர்களையும், நோயாளிகளையும் சுட்டுக் கொன்று விடுதலைப் புலிகளைக் கொன்றுவிட்டோம் என்று கொக்கரித்துள்ளது. தேடி வளைத்துப் பிடித்த தமிழர்கள் அனைவருமே அவர்களின் பார்வையில் விடுதலைப் புலிகள். இதனை இந்திய இராணுவமும் 1987 - 1989களில் செய்துள்ளது என்பது வெட்கக்கேடானது. உலகிலேயே மிகப் பெரிய சனநாயக நாடு, காந்தி தலைமையில் அகிம்சை வழியில் சுதந்திரம் பெற்ற நாடு, தெற்காசிய கண்டத்தில் வல்லரசாக உருவெடுக்கும் நாடு, இலங்கைக்கு மூத்த சகோதரன் போல் வலியப் போய் உதவி செய்த நாடு, யாழ் தீபகற்பத்தில் விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்க அப்பாவி தமிழ் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து அழித்தனர். இதனையே கோழை வீரம் என்கிறேன். தமிழ் இனத்துக்கெதிராக இரண்டு பெரிய இராணுவ கட்டமைப்புக்கள் இத்தகைய கோழைதனமாக வீரத்தை காட்டியிருக்கிறார்கள் என்பது சென்ற நூற்றாண்டின் அவலங்களில் ஒன்று.

மன்னாரில் நான் பதினொரு மாதங்கள் தங்கினேன். மன்னார் மறைமாவட்ட பேராலயப் பங்கில் தங்கியிருந்த போது அங்குள்ள பேராலய இளைஞர்கள் கதையாக சொன்ன ஒரு நிகழ்வு. இலங்கை இராணுவத்தினர் பயங்கரவாதிகள் என்று அழைக்கப்பட்டவர்களை ஒழித்து சமாதானத்தை ஏற்படுத்துவதாகக் கூறி, மன்னார் வீதிகளில் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தி தமிழர்களை துன்புறுத்தி, அவமானப்படுத்தி வந்த காலகட்டம்



அது. பேராலயத்தின் முகப்பில் ஒளிந்திருந்து கொரில்லா தாக்குதல் மூலம் மூன்று சிங்கள இராணுவத்தினர் பேராலய முன் சந்தியில் கொல்லப்பட்டனர். கொலை செய்தவர்களை பிடிக்க முடியாமற் போகவே இலங்கை இராணுவம், மன்னார் தெருக்களில் கண்மூடித்தனமான தாக்குதலைத் தொடர்ந்திருக்கிறார்கள்.

அந்த நேரத்தில் பேராலய வளவுக்குள் இளம்குரு மாணவர்களுக்கான பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த இளைஞர்களுக்கு ஆங்கிலம் போதித்துக்கொண்டிருந்த ஆசிரியர், தனது மனைவிக்கும், குடும்பத்திற்கும் என்ன ஆனதோ என்ற பயத்தில் வீட்டிற்கு செல்ல முற்பட்ட போது குருமாணவர்கள் ஆசிரியரை வற்புறுத்தி தங்களோடு தங்குமாறு கேட்டிருக்கிறார்கள். காரணம் குருமாணவர்களுக்கு பொறுப்பான குருக்கள் அந்த நேரத்தில் அங்கில்லை. மேலும் தாங்கள் இளைஞர்கள் என்பதால் இலங்கை இராணுவம் தங்களை விடுதலைப் புலிகள் என்று தவறாக நினைத்து துன்புறுத்துவார்கள் என்பதற்காகவும் ஆசிரியருக்கு சிங்களமும் தெரியும் என்பதாலும் அழுது கெஞ்சி ஆசிரியரை தங்களோடு தங்க செய்துள்ளார்கள்.

அந்த இளம் குருமாணவர்கள் நினைத்தது போலவே இராணுவம் கோயில் வளவுக்குள் விடுதலைப் புலிகளைத் தேடி வந்துள்ளது. அங்கு அந்நேரம் உதவியாளராக இருந்த ஒரு சகோதரரை (இன்று ஓர் இளம் குருவாக மன்னாரில் பணியாற்றுகிறார்) பிடித்து இழுத்துச் சென்று கோயிலின் பின்புறம் உள்ள சக்கரிஸ் (கோயில் திருபண்ட அறை) அறையில் மூடிவைத்து அடித்துள்ளார்கள். பின்னர் சில பெரியவர்கள் வந்து அந்த சகோதரரைக் காப்பாற்றியுள்ளனர். இருப்பினும் அன்றிரவு சில இராணுவத்தினர் கோயிலில் இருந்த ஒரு மரத்தினுள் ஏறி மறைந்திருந்து குருக்களையும், சகோதரர்களையும் நோட்டம் கண்டு அச்சுறுத்தி சென்றுள்ளனர். ஓடுற பாம்பை மிதிக்கிற வயசில, செத்த பாம்பை எட்டி நின்று அடிக்கிற வீரச் செயல் போன்றது இது. பாயும் புலிகளுக்கு இவர்கள் எம்மாத்திரம்?

இதே போன்று யாழ்ப்பாணத்தில் 1987ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் தேதியன்று அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நோயாளிகள், பணிபுரிந்த மருத்துவர்கள், தாதியர்கள் பணியாளர்கள் உட்பட 21 பேரை படுகொலை செய்துள்ளனர். மீண்டும் அடுத்த நாளே



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

47 பேர் கொல்லப்பட்டனர். காரணம் அந்த மருத்துவமனையில் காயப்பட்ட போராளிகள் சிகிச்சை பெறுகிறார்கள் என்பதுதானாம். சமாதானத்தையும், சரணடைவதையும் உணர்த்தும் வகையில், மருத்துவப் பணியாளர்கள் கைகளை உயரத் தூக்கியபடி நின்றபோதும், இந்திய அமைதிப்படையினர் நேரெதிரில் நின்று அவர்களைச் சுட்டு வீழ்த்தி எறிகுண்டுகளையும் அவர்கள் மீது வீசியிருக்கிறார்கள். நோயாளிகள் எதுவித எரிச்சலூட்டும் செயலைச் செய்யாத போதிலும், இந்திய இராணுவக் காட்டு மிராண்டித்தனத் தாக்குதலில் மருத்துவமனைப் பணியாளரும், நோயாளிகளுமாக ஐம்பத்தியொருவர் கடுங்காயம் அடைந்திருக்கிறார்கள் என்கிறார் '*சுதந்திர வேட்கை*' என்ற நூலின் ஆசிரியர் திருமதி அடேல் பாலசிங்கம், இந்த இழிவான நிகழ்வின் போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து காயமுற்றோருக்கு மருத்துவம் பார்த்தவர்களில் இவரும் ஒருவர்.

திரு. நாவண்ணன் அவர்கள் எழுதிய '*அக்கினிக் கரங்கள்*' என்ற குறுநாவல் மேல்குறிப்பிட்ட நிகழ்வின் அடிப்படையில் எழுதப்பட்ட குறுநாவல். இந்த நாவலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளவர் வைத்திய கலாநிதி(டாக்டர்) எஸ். பி. ஆர். சீர்மாறன். இவர் இச்சம்பவத்தின் போது மருத்துவமனையின் எக்ஸ் - ரே பிரிவுக்குள் மறைந்திருந்து தப்பி பிழைத்தவர். ஒரு யுத்த களத்தில் காயப்பட்டவர்களுக்கு உதவி செய்கின்ற தொண்டர் கூட, நடு நிலையாளராகக் கருதப்பட்டு மதிக்கப்படல் வேண்டும் என சர்வதேசச் சட்டங்களும் தர்மங்களும் கூறுகின்ற வேளையில் ஒரு மருத்துவமனை, அதனுள் சீருடைகளில் தாதிகள், ஊழியர்கள், டாகடர்கள், காயத்துடனும், வேறு நோய்களுடனும் இருக்கின்ற நோயாளிகள் என்கின்ற மனிதநேயம் இல்லாமல் அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளனர் என்கிறார். இதுவே நாவண்ணன் அவர்கள் **காந்திய நாட்டின் காட்டுமிராண்டிகள்** என்று இந்திய அமைதிப் படையினரை அழைக்க வைத்துள்ளது. இந்த ஆசிரியரை நான் சனவரி மாதம் முல்லைத்தீவில் வைத்து சந்தித்து உரையாடிய போது நான் ஒரு இந்தியன் என்று தெரிந்தும், என்னோடு கரிசினையோடும், மரியாரையோடும் பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஒரு இன அழிப்பையே மேற்கொண்ட இந்தியாவின் இச்செயலால் தமிழர்கள் பெருந்துன்பத்திற்கு ஆளானார்கள் என்பது உண்மை. இந்திய அமைதிப்படையை ஆங்கிலத்தில் Indian Peace Keeping Force என்பதை சுருக்கி I.P.K.F என்பார்கள்.



இதனுடைய உண்மையான மற்றொரு விரிவாக்கம் Innocent People Killing Force என்பதாகும் என்று இந்தியனாகிய என்னிடம் பகிடிக்காக சொன்னவர் ஒரு நண்பர். வெட்கி தலைகுனிந்தேன். காந்தி தாத்தா அகிம்சை வழியில் விடுதலை வாங்கி தந்ததாகக் கூறப்படும் இந்தியாவில் பிறந்ததற்காக வெட்கப்பட்டேன். இரண்டு வருடங்களாக இந்திய அமைதிப் படை, அமைதியின் பெயரால் தமிழர்களை கொன்று குவித்து, பெண்களை மானபங்கப்படுத்தி, வீடுகளையும், சொத்துக்களையும் சூறையாடி, அழித்து தனது கோழை வீரத்தை வெளிக்காட்டியுள்ளது.

இந்திய அமைதிப்படை ஒரு இராணுவ நடவடிக்கை ரீதியில் மாபெரும் தோல்வி கண்ட நிலையிலேயே இன அழிப்பை மேற்கொண்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்தலாம். ஒருவன் செய்த வரலாற்று பிழையால் ஒரு இனமே அழியவிடலாமா? அப்பிழை செய்தவனை தண்டித்ததே ஒரு வரலாற்று பிழையாகுமா? *அந்த ஓர் உயிர் மட்டும்தான் உயிரா?* எங்கோ பார்த்த ஒரு புத்தகத்தின் தலைப்பு இது.






FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

# இந்தியாவின் இரட்டை வேடம்

வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற அறிஞர் அண்ணாவின் கூற்று இந்திய மைய அரசின் போக்கை தெளிவுபடுத்துகிறது. தமிழினமே தன் காலுக்கடியில் உள்ள எண்ணத்தோடே (உலக வரைபடத்தில் வேண்டுமானால் அப்படி இருக்கலாம்) இந்திய அரசாங்கம் செயற்படுகிறதை தமிழர்கள் காலம் காலமாக உணர்ந்து வந்துள்ளார்கள். இருப்பினும் இந்திய தமிழர்களுக்கு போதிய அளவு ரோசம் - மானம் இல்லாத காரணத்தினாலே தமிழ்நாடு என்ற வெறும் பெயரோடு, இன்றளவும் இந்தி – ஆரிய சக்திகளின் ஆதிக்கத்திற்கு அடிபணிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நானும் ஒரு இந்திய தமிழன் என்றாலும் இப்போது நான் வாழ்ந்துக்கொண்டிருப்பது வீரம் விளையும் வன்னிக் காடு என்பதாலேயே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்கிறேன்.

இந்தியாவைப் பற்றிய எத்தகைய ஒரு எண்ணத்தோடு இலங்கை தமிழர்கள் இருந்தார்கள் என்பதை திருமதி அடேல் பாலசிங்கம் தனது *சுதந்திர வேட்கை* என்ற புத்தகத்தில் அழகாக எழுதியிருக்கிறார்கள்.

> பல நூற்றாண்டுகளாகக் குடியேற்றவாத சுரண்டலுக்கு உள்ளாகி, போராட்டம் மூலமே சுதந்திரத்தை வென்றெடுத்த ஒரு நாடு என்ற வகையில், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த பல ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் மட்டில் இந்தியா அனுதாபம் காட்டியது. அத்துடன் அப்போராட்டங்களுக்கு தார்மீக ரீதியாகவும் இந்தியா ஆதரவு வழங்கியது. அனைத்துலக மட்டத்தில் கண்டிக்கப்பட்ட அப்பார்தைட் இன ஒடுக்கல் முறைக்கு எதிராகப் போராடிய ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கு ஆதரவு வழங்குவதில் முதல்நிலை நாடாக இந்தியா திகழ்ந்தது. அத்தோடு ஆபிரிக்காவின் ஏனைய விடுதலைப் போராட்டங்களுக்கும் முதல்நிலை ஆதரவு வழங்கியது. பாலஸ்தீன போராட்டம் பயங்கரவாதம் என்று கருதப்பட்ட அரசியல் ராஜதந்திர உலகில், பலஸ்தீன விடுதலை இயக்கமான PLO (Palestinian Liberation Organisation)வுக்கு இந்தியா வலுவான ஆதரவு வழங்கியது. இது பலஸ்தீன மக்களுக்கு பெரியதொரு தார்மீக உந்துதலாக விளங்கியது. ஏனைய கண்டங்களிலும், பிரதேசங்களிலும் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்களுக்குத் தாராள மனப்பான்மையுடன் வெளிப்படையாக தார்மீக, ராஜதந்திர உதவிகளை வழங்கி வந்த இந்தியா, தனது கொல்லைப் புறத்தில் நிகழ்ந்த போராட்டங்கள் சம்பந்தப்பட்டவகையில் சந்தர்ப்பவாதத்தையும், பிரதேச நலன் பேணும் சாணக்கியத்தையுமே கடைப்பிடித்தது.



இந்தியாவின் மைய அரசை இரும்பு பெண்மணி இந்திரா காந்தி ஆட்சி செய்த போதும், தமிழ்நாட்டை நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆட்சி செய்த போதும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வெளிப்படையான இராணுவ, ஆயுத, நிதியுதவி செய்துவந்துள்ளார்கள். அதன் உள்நோக்கம் இலங்கையை தன் கைப்பிடிக்குள் கொண்டு வரலாம் என்றதாக இருந்திருந்தாலும் அவர்களின் உதவியை ஈழத் தமிழர்கள் ஒரு போதும் மறக்கமாட்டார்கள். நன்றி மறப்பது நன்றன்று என்ற வள்ளுவனின் வாக்கின்படி வாழ்பவர்கள் மறத்தமிழர்கள். ஆனால் அவர்களுக்குப் பிறகு நடந்த ஆட்சி மாற்றம், அதிகாரிகள் மாற்றம் இந்தியாவின் உண்மை நிலையை உலகுக்கு எடுத்தியம்பியது. அதன்பின் இலங்கையிலும், இந்தியாவிலும் நடந்த துக்கமான வரலாற்று நிகழ்வுகளை நாம் நன்றாக அறிவோம்.

நான் இலங்கையில் இருந்தபோது அதாவது 2003 மே மாதம் இலங்கையின் தென் கிழக்கு பகுதிகளில் பலத்த காற்று, புயல், மழை வந்தது. மிகுந்த பொருட்சேதம் ஏற்பட்டது. 250 பேர் வெள்ளத்தினால், மண் சரிவினால் இறந்தார்கள். குறிப்பாக இரத்தினபுரி மாவட்டம் பெரும் அழிவுக்குள்ளானது. அடுத்த நாளே இந்தியா தனது ஆதரவு கரங்களை நீட்டியது. பெரும் அளவிலான மீட்புப்பணிகளை மேற்கொள்வதற்காக இராணுவக் கப்பல், உலங்கு வானூர்தி (ஹெலிகாப்டர்) மற்றும் இராணுவ மருத்துவர்கள், மருந்து, உணவு பொருட்கள் அனைத்தையும் அனுப்பிவைத்தது. இந்த மனிதாபிமான செயலை, கேட்பதற்கு முன் உதவும் நட்பினை பாராட்டியாக வேண்டும்.



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010


ஆனால் கடந்த இருபத்தைந்து ஆண்டுகால போரினால் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் இறந்த போதிலும், இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் தமிழர் தாயகமெங்கும் வீடுகள், சொத்துக்கள் அழிக்கப்பட்ட போதும் இந்திய அரசின் நிலைப்பாடு என்ன? ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்துக் கொண்டிருப்பதை உள்நாட்டு பிரச்சனை என்று மௌனம் காத்து வேடிக்கைப் பார்ப்பது சரிதானா? மேற்கத்திய நாடான நோர்வே இங்குவந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த, தனக்கு எதுவும் தெரியாதது போல் கண்டும் காணாமலும் இருந்துவிட்டால் கூட நலம், இலங்கையின் எதிர்கட்சி உறுப்பினர்களை அழைத்து சமாதானத்தைக் குழப்பாமல் இருந்தால். ஒவ்வொரு முறையும் சமாதானப் பேச்சுக்கள் நடந்தால், நிதியுதவி மாநாடுகள் நடந்தால் உடனே தனக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்று இந்தியா எதிர்பார்த்து காத்திருப்பது போல, இலங்கை அரசு தூதுவர்களும், நோர்வே அதிகாரிகளும் இந்தியாவின் ஆட்சியாளர்களைக் கண்டுகொள்ள வேண்டும். எங்கே தனக்கு தெரியாமல் இலங்கையும், சர்வதேச நாடுகளும் விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொண்டு விடுவார்களோ என்ற பயத்துடனேயே இந்தியா விழி பிதுங்கி பார்த்துக் கொண்டிருக்கிறது. தற்சமயம் இலங்கை அரசு தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக சபைப்பற்றிய தனது அச்சத்தையும், அதனால் விடுதலைப்புலிகள் பெறும் அங்கீகாரத்தையும் இந்தியா மிகுந்த கவலையோடு வெளிப்படுத்தியுள்ளது.

திருவிவிலியத்தில் வரும் ஊதாரி மைந்தன் கதையில் தந்தை இளைய மகனை மன்னித்து அன்பு செய்வதை ஏற்காத மூத்த மகனைப் போல இலங்கையும், சர்வதேச நாடுகளும் விடுதலைப் புலிகளை மதித்து தமிழர்களின் பிரதிநிதிகளாக ஏற்று பேச்சுவார்த்தைக்கு அழைத்து சமாதானமாக வாழ்வதை விரும்பாத இந்தியா, இலங்கையில் சமாதானத்தைக் குழப்புவோரை வெளியே அழைத்து, விசாரித்து அவர்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருப்பது தலைகுனிய வைக்கும் அவமானச் செயல். இதன் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தை முறிந்தால் புலிகளை ஒடுக்க இந்தியா உதவும் என்று இங்கு அரசியல்வாதிகள் அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் பிறந்த பௌத்த மதத்தை இந்தியாவிலிருந்து துரத்தி விட்ட இந்தி – ஆரியர்கள், இலங்கையில் தமிழர்களின் வாழ்விடமான வடக்கு பகுதிகளில் எத்தனையோ இந்து, கிறிஸ்தவ கோயில்கள் போரினால் அழிந்து போயுள்ள நிலையில் அதே வடகிழக்கில் அழிந்துபோன



பௌத்த விகாரைகளைத் திருத்த நிதியுதவி செய்கிறார்களாம். இந்தியாவின் இரட்டை வேடம் உலக அரங்கில் அரங்கேற்றப்பட்டுள்ளது. கூத்தாடி ஆரியனின் ஆரியக்கூத்தை வாய்பிளந்து நின்று இரசிக்க ஈழத்தமிழனென்ன இளிச்சவாயனா? எமக்கு தேவை நிதியுதவியல்ல, நிரந்தர சமாதானத்துடன் கூடிய நிம்மதியான வாழ்க்கையே!




தமிழீழ மாவட்டங்கள்



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

# போதைக்கு அடிமையாகும் தமிழ் இளையோர்

ஆயதம் கொண்டு போராடி வெற்றிக் கொள்ள முடியாத கயவர் கூட்டம், போதைப் பொருளுக்கு இளையோரை அடிமையாக்கி தமிழினத்தை அழிக்க முன்வந்துள்ளது வருந்தத்தக்கது. இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள தமிழ் பிரதேசங்களில் இன்று போதைப் பொருட்கள் எளிதாக மாணவர் கைகளில் புழங்கக் காரணமென்ன? இராணுவம் குறிப்பாக இலங்கையின் கடற்படை மற்றும் காவல்துறையினரின் அனுசரணையில்லாமல் இலங்கையில் போதை பொருளுக்கு இடமில்லை என்பதை மன்னார் பிரஜைகள் குழு சார்பில் போதைப் பொருள் எதிர்ப்பு தினமான யூன் 26ம் தேதி மன்னாரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது தெளிவுபட எடுத்துக் கூறினேன். அந்த உரையின் தொகுப்பு இதோ.

### மன்னார் மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை

பள்ளிமுனை பகுதியில் ஏறக்குறைய அறுநூறு கிறிஸ்தவ குடும்பங்களில் நுற்றைம்பது இளையோர் போதை பொருளுக்கு அடிமையாகியிருப்பதாக அங்கு வீடுகளை தரிசித்து மகா ஞானஒடுக்கம் மேற்கொண்ட அமல மரி தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்தந்தை அன்புராசா கூறினார். அப்படியென்றால் குறைந்தது நான்கு குடும்பங்களில் ஒன்று போதைப்பொருளுக்கு அடிமையான நபரைக் கொண்ட குடும்பமாக உள்ளது. அதே போன்று மன்னார் தீவில் பேசாலை, தாழ்வுபாடு, தலைமன்னார், பனங்கட்டிக்கொட்டு போன்ற இடங்களிலெல்லாம் போதைப் பொருள் பாவனையாளர்கள் உள்ளதாக காவல்துறை உயர் அதிகாரி



திரு. சிறில் கூறினார். இந்த இடங்களிலெல்லாம் இலங்கையின் கடற்படை நிலைக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே போதை பொருள் எதிர்ப்பு கூட்டங்களை மன்னார் மாவட்டத்தில் பிரஜைகள் குழு சார்பாக உயிலங்குளம் மற்றும் தலைமன்னார் போன்ற இடங்களில் நடத்தி நானே உரையாற்றிருக்கிறேன் என்பதை, வருத்தத்தோடு சுட்டிக்காண்பிக்கிறேன். மன்னார் தூய சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியைச் சார்ந்த சில இளம் மாணவர்கள் போதை பொருள் வைத்திருந்ததன் அடிப்படையில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அதே போன்று சில மாணவிகளும் போதை பொருட்களை பாவித்ததாக கைது செய்யப்பட்டுள்ளனர். சில இளைஞர்கள் போதை பொருட்களை பெறுவதற்காக தங்கள் சொந்த வீடுகளிலும், பிறருடைய வீடுகளிலும் விலையுயர்ந்த பொருட்களையும், தங்க நகைகளையும், துணிமணிகளையும் திருடுவதாக காவல் துறையினர் தெரிவிக்கின்றனர்.

மேற்சொன்ன கூட்டத்தின் போது உரையாற்றிய மன்னார் காவல் துறையில் போதை பொருள் தடுப்பு உயர் அதிகாரியான திரு. சிரில் நகைச்சுவையாகவும், வேதனையாகவும் சில விடயங்களை முன்வைத்தார். இனி மன்னார் தெருக்களில் காது அறுந்த பெண்களும், தாலி



## மன்னாரில் போதைப்பொருள் பாவனை பெரிதும் அதிகரிப்பு

### பொதுஅமைப்புகள் விசனம்

வவுனியா, ஜூலை 19

மன்னார் மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து விட்டதாக அங்குள்ள பொது அமைப்புக்கள் விசனம் தெரிவிக்கின்றன. இதனை கண்டும் காணாதது போன்று அரச அதிகாரிகள் செயற்படுகின்றனர். அதேசமயம் பாதுகாப்பு தரப்பினரும் இதற்குத் துணைபோவதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

மன்னாரின் ஊடாக தென் இந்தியாவிலிருந்து போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது. அண்மையில் இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்படவிருந்த இரண்டு தொகுதி பல லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருட்களினை தமிழ் நாடு பொலிஸார் கைப்பற்றினர்.

அத்துடன், மன்னாரிலிருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்படவிருந்த ஒரு கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருட்கள் உயிலங்குளம் சோதனைச் சாவடிப்பகுதியில் வைத்து புலிகளால் கைப்பற்றப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேநேரம், போதைப் பொருட்கள் நடமாடும் சேவை கூட இங்கு உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-312)

நன்றி: *சுடர்ஒளி*, ஜீலை 19, 2003, சனிக்கிழமை



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

கொடியில்லாத பெண்களும் நடமாடுவார்கள். காரணம் போதை பொருட் பாவனையாளர்கள் தங்கள் சொந்த உறவுபெண்களிடமே நகைகளைக் கொள்ளையடித்து போதைப் பொருட்களை வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். மேலும் தண்ணீர் பிடிக்க தெருக்குழாய் அடியில் பிளாஸ்டிக் குடங்களைக் கூட வைக்க முடியாது. அவற்றையும் திருடி, விற்று போதை பொருட்களை வாங்குகிறார்கள், என்றார்.

இலங்கையில் மொத்தம் ஒரு இலட்சம் போதைப் பொருட் பாவனையாளர்கள் உள்ளார்கள் என்றும், ஒரு நாளைக்கு ஒருவருக்கு ரூபா 500 பெறுமதியான போதைப் பொருள் தேவைப்படுவதாகவும் கூறப்படுகிறது. அப்படியென்றால் இலங்கையில் ஒரு நாளைக்கு 50 மில்லியன் ரூபா போதைப் பொருளுக்காக செலவிடப்படுகிறது. இது இலங்கையின் இராணுவத்திற்கு ஒரு நாளுக்கு செலவிடப்படும் தொகையை விட கூடுதலாகும். இந்த பணமெல்லாம் யாருடையது?

அன்றாட கூலிகளாக ஒவ்வொரு நாளும் உழைத்து, சம்பாதித்த பணத்தையும், பிறரிடமிருந்து திருடிய பணமும்தான் போதைபொருளுக்கு பயன்படுத்தபடுகிறது. மேலும் போதைபொருளுக்கு அடிமையானவரே தனக்கு பணம் தேவைப்படும் என்பதால் தனது சகநண்பர்களுக்கு



போதைவஸ்து ஒழிப்பு கருத்தரங்கில் நான் உரைநிகழ்த்தியபோது



ஆசைக்காட்டி அவர்களிடமே போதைபொருட்களை விற்கிறார்கள். இதன் மூலமாக ஒரு சுழற்சி முறையில் போதைப் பொருள் பாவனையாளர்கள் பிற புதிய பாவனையாளர்களை உருவாக்குகிறார்கள்.

பெரிய அளவில் போதைப் பொருள்களை கடத்தி விற்பனை செய்பவர்கள் நேரடியாக விற்பதில்லை. போதைப் பொருளுக்கு அடிமையான ஏழை இளைஞர்களைக் கொண்டே விற்பனை செய்கிறார்கள் இதன் மூலமாக பெரிய கடத்தல்காரர்கள் காவல்துறையிடமிருந்து தப்பிவிடுகிறார்கள். அப்பாவி இளைஞர்கள் மாட்டிக்கொள்கிறார்கள். பெரும்பணம் கொடுத்து அவர்களை மீட்க வேண்டிய அவல சூழ்நிலைக்கு குடும்பத்தினர் தள்ளப்படுகின்றனர்.

## பாதிக்கப்படுபவர்கள் இளைஞர்களே

உலகெங்கும் உள்ளதுபோல இலங்கையிலும், மன்னாரிலும் பெரும்பாலும் இளைஞர்களே போதை பொருளுக்கு அடிமையானவர்களாக உள்ளார்கள் பன்னிரண்டு வயது தொடக்கம் முப்பது வயதுக்குட்பட்ட இளைஞர்களே போதைப் பொருளுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள் என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள், மாணவிகள் மத்தியில் இத்தீய பழக்கம் அதிகரிப்பதை சமூகத்தில் தெளிவாக உணரலாம். இருப்பினும் பெரும்பாலும் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தி ஏதேனும் ஒரு கூலித் தொழிலுக்கு குறிப்பாக மன்னாரில் கடல் தொழில் செய்யும் இளைஞர்களிடையே இப்பழக்கம் அதிகமாக காணப்படுகிறது.

தீய நட்பின் காரணமாகவும் இப்பழக்கம் இளைஞர்களிடையே வேகமாக பரவுகிறது. ஏற்கனவே மேலே குறிப்பிட்டது போல போதைப் பொருளுக்கு அடிமையான ஒரு இளைஞர் தனது தேவைக்குப் பணம் தேவைப்படுகிறது என்பதனால் தனது நண்பர்களை ஊக்கப்படுத்தி அவர்களிடமே போதைப் பொருட்களை விற்று தனக்கு தேவையான பணத்தைப் பெறுகிறார். "இதை நீ எடுக்காவிட்டால் நீ ஒரு ஆம்பிளையே இல்லை" என்று தனது நண்பன் சவால்விட்டால் எந்த இளைஞனால் தனது ஆசையைக் கட்டுப்படுத்த இயலும். ஒரு முறைதானே என்று நண்பனோடு போதைப் பொருட்களைப் பாவிப்பவர் மெதுவாக அதற்கு



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

அடிமையாகிவிடுகிறார்கள். குடும்ப பிரச்சனைகளை அதுவும் பெற்றோரின் கண்டிப்புக்கு முகம் கொடுக்க இயலாத இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகின்றார்கள்.

பெற்றோரின் கவனமின்மையாலும், பிரிந்த குடும்பங்களின் அவலத்தினாலும் இளைஞர்கள் போதைப் பொருளுக்கு எளிதில் அடிமையாகிவிடுகின்றார்கள். அதுவும் குறிப்பாக இலங்கையில் கடந்த 30 ஆண்டுகால போரினால் இடம் பெயர்ந்த பல தமிழ் குடும்பங்கள் சிதைந்து, பிரிந்து வாழ்கிறார்கள். தாய் ஒருபக்கமும் தந்தை மற்றொரு பக்கமாக அல்லது பெற்றோர்களை போரினால் இழந்து இளைஞர்கள் தனித்து வாழும் அவல சூழ்நிலையைக் காணக்கூடியதாக உள்ளது. இக்காரணியும் போதைப் பொருள் பாவனையை அதிகரித்துள்ளது.

### சாராய போதை

போதை என்றால் ஏதோ கஞ்சா. பிரவுண் சுகர் போன்ற பொருட்கள் மட்டுமல்ல, தமிழர்கள் இன்று சாராயத்திற்கும் அடிமையாகி தமது வாழ்வையும், பொருளாதாரத்தையும் இழக்கின்றனர். நகரங்கள் மட்டுமல்ல சிறிய கிராமங்களிலும் சாராயக்கடைகள் திறக்கப்பட்டு அமோக விற்பனை செய்யப்படுகின்றன.இதனால் இளைஞர்களும் இத்தீய பழக்கத்திற்கு உள்ளாவதை நேரில் காணலாம்.

ஜனவரி மாதம் நான் முல்லைத்தீவில் நின்ற நேரம், கடலில் இறால்பட்டது. என்றைக்கெல்லாம் நன்றாக இறால் பட்டதோ, அன்றெல்லாம் நகரின் மத்தியில், பேருந்து நிலையம் அருகில் இயங்கிய சாராயக்கடையிலும் விற்பனை அதிகமாகியது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலேயே சாராயக்கடைகள் திறக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவது, அதிலும் முக்கிய நகரமான முல்லைத்தீவின் நகரப்பகுதியில் இது நடந்தது வேதனைக்குரியது.

மன்னார் போன்ற இடங்களில் மிகவும் சர்வசாதாரணமாக சாராயம் எல்லோர்க்கும் கிடைக்கும். இரவில் 9மணிக்கு மேல் சாராயம் விற்கக்கூடாது என்பதனால் சில பெண்கள் தங்களின் நீண்ட உடுப்புக்குள் சாராய போத்தலை மறைத்துக் கொண்டு குடிகாரர்களுக்கு “சமூக சேவை”



செய்வதை அறிகின்றோம். காவல்துறையினர் எவ்வித அக்கறையும் காட்டாமல், தமிழினம் குடித்தாவது அழியட்டும் என்று வேடிக்கை பார்க்கின்றனர். சில சமூக அக்கறையுள்ள நிறுவனங்கள் மூலம் காவல் துறையினர் நடவடிக்கையில் இறங்கினால் சாராயம் விற்பவர்களிடம் பணத்தையும், தமக்கு தேவையான சாராயத்தையும் பெற்று தப்பவிட்டு விடுகின்றனர். அப்படியே பிடித்தாலும் வெறும் இரண்டாயிரம் ரூபாய் அபராதம் கட்டி வெளிவருகின்றனர். சாராயவியாபாரிகள் யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் சாராயத்திற்கு அடிமையாகும் செய்தித்தாள் தகவலைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். இதோ அந்த செய்தி


மதுவுக்கு அடிமையாகும் யாழ். மாணவர்கள்

(யாழ்.அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணக்குடா நாட்டுப் படாசாலை மாணவர்கள் மத்தியில் மதுபாவனைப்பழக்கம் அதிகரித்து வருவதாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இது இவ்வாறிருக்க கடந்த வெள்ளியன்று நல்லூர் முத்திரைச் சந்திக்கு அருகில் மது மயக்கத்தில் கலாட்டா புரிந்த ஏழுபேரைக் கைது செய்து விசாரித்த சமயம் அவர்கள் அத்தனைபேரும் யாழ்.நகரிலுள்ள பிரபல பாடசாலையொன்றின் மாணவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இதுவிடயத்தில் அம்மாணவர்களின் எதிர்காலத்தையும், பாடசாலையின் மதிப்பையும் காப்பாற்றும் பொருட்டு அவர்களை எச்சரிக்கை செய்து விடுவித்ததாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே இது விடயத்தில் மாணவர்களின் பெற்றோரும், ஆசிரியர்களும் இத்தகைய நிலை நீடிக்காது பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

*நன்றி: வீரகேசரி, 23.07.2003 பக்கம் 2*

### போதைப் பொருள் பாவனையின் விளைவு

போதைப் பொருள் பாவனையில் இன்று பல குடும்பங்கள் சிதைந்து போயுள்ளன. வீட்டின் பொருளாதார நிலை முற்றிலுமாக குன்றி



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

நடுத்தெருவுக்கு வரவேண்டிய நிலையில் பல குடும்பங்கள் வாடுகின்றன. குடும்பத்தை காப்பாற்ற வேண்டியவரே தொழில் செய்யாமல் போதை பொருளுக்கு அடிமையானால் குடும்பத்தின் வருமானம் என்னவாகும்? மேலும் போதைக்கு அடிமையானவருக்கு நாளாந்தம் தேவைப்படும் போதைப் பொருளை பெற பணமும் தேவைப்படுகிறது. மேலதிகமாக அவருக்கு தேவையான மருத்துவ சிகிச்சையோ அல்லது காவல்துறையினரிடமிருந்து மீட்கவோ அக்குடும்பம் பெரும் பணநெருக்கடிக்கு உள்ளாவதையும் இங்கு நேரில் கண்டறியலாம். இவ்வாறாக போதைப் பொருளுக்கு அடிமையானவரின் மொத்த குடும்பமே சீரழிந்து விடுகிறது.

இரண்டாவதாக பாதிக்கப்பட்டவரின் உடலும், உள்ளமும் கெடுகிறது. உடல் மெலிந்து, உணவு ஏதும் உட்கொள்ள முடியாமல் மந்த நிலைக்கு, சாவின் விளிம்புக்கு தள்ளப்படுகிறார்கள். எவ்வித உணர்வுமின்றி, மானமின்றி, மனித தன்மையிழந்து வாழும் நிலைக்கு அவர் தள்ளப்படுகின்றார். சாவை எதிர்நோக்கியவராக அனுதினமும் செத்துக் கொண்டிருப்பவராக, நடைபிணமாக வாழ்பவரை என்ன செய்வது?

மூன்றாவதாக, அவர்கள் பல்வேறு சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். திருட்டு, கொலை, கொள்ளை, பணம் பறிப்பு என்று தீய வழிகளில் எளிதாக பணம் பெற முயற்சி எடுப்பதனால் சமூகத்திலிருந்தும் ஒதுக்கப்படுகிறார்கள். போதையின்றி ஒரு நொடிப்பொழுதும் அவர்களால் வாழ முடியாது என்ற சூழ்நிலையில் எப்பணம் கொடுத்தாவது, எவ்வழியிலாவது போதைப் பொருட்களை பெற்றுக்கொள்ள அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

போதைப் பொருள் எதிர்ப்பு தினமான யூன் 26ம் தேதிக்கு முந்தின நாள் அதாவது 25-06-2003 அன்று இலங்கையின் தலைநகரமான கொழும்பில் இரண்டு காவல்துறை அதிகாரிகள் போதைப் பொருள் தடுப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதை சக்தி டி.வி. செய்திகளில் கூறியது. காரணம் பெரும்பணத்தைப் பெற்றுக்கொண்டு போதைப் பொருள் கடத்தல்காரர்களை பிடித்து பின் தப்பவிட்டுவிட்டார்கள். இவ்வாறாக காவல் துறையினரும், இலங்கை இராணுவத்தினரும் உடந்தையாக செயல்படுகிறார்கள். போதைப் பொருட்கள் இலங்கைக்கு



வெளிநாடுகளிலிருந்தே கடத்தப்படுகிறது. கடல் மார்க்கமாகவும், வான் வழியாகவும் கடத்தப்படும் போதைப் பொருட்களை இராணுவத்தினர் எளிதில் நிறுத்தலாம்.

இறைவன் கொடையாக தந்த வாழ்வை அழித்துக்கொள்ள எந்த தனிமனிதருக்கும் உரிமையில்லை. அடிப்படையில் வாழவேண்டும் என்ற உந்துதலே எல்லா உயிரிலும் இருப்பதைப் பார்க்கிறோம். எல்லா உயிர்களுக்கும் பசி எடுப்பதும், பசி எடுக்கிறபோது உண்ண வேண்டும் என்ற உணர்வும் வாழ வேண்டும் என்ற இந்த உணர்வாலே. வாழ வேண்டிய இளைஞர்கள், நாளைய சமூகத்தின் தலைவர்கள். இன்று போதைப்பொருட்களுக்கு அடிமையாகி வாழ்வை இழந்தவர்களாக, சாவை எதிர்நோக்குபவர்களாக இருப்பது மிகப் பெரிய அவலம்.

அதுவும் இங்கு தமிழீழத்தில், யுத்தத்தால் அழிந்து போயுள்ள தமிழ் சமூகம் இன்று மெல்ல, சிறிய போதைப் பொருட்களுக்கு அடிமையாகி மேலும் அழிய விடலாமா? 18,000 இளைஞர்கள், இளம்பெண்கள் இலட்சியத்தோடு வாழ்ந்து, மண்ணுக்காக, மக்களுக்காக போராடி, தமிழினம் வாழ காரணமாக தங்கள் உயிரையே கையளித்துள்ள சூழ்நிலையில், இன்றைய இளையோர் போதைக்கு அடிமையாகி தங்கள் வாழ்வை அழித்துக் கொள்வது வேதனைக்குரியது, வெட்கத்துக்குரியது. அந்த மாவீரர்களின் தியாகத்தையும், அர்ப்பணிப்பையும், தற்கொடையையும் அர்ததமற்றதாகவும், கொச்சைப்படுத்துவதாகவும் அமைகிறது.

கடந்த கால போராட்ட வாழ்வினை நீர்த்து போகவிடாமல், சுதந்திரமாக, சகல உரிமைகளுடன் தமிழினம் வாழ இன்றைய இளையோர் மீண்டும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். உன்னால் முடியும் தம்பி என்ற நம்பிக்கையோடு எம்மால் நிறைவாக வாழ முடியும் என்பதை சாதித்துக் காட்ட போதைப் பொருள் பாவனையற்ற ஒரு நல்ல தமிழ் சமூகத்தை இளையோர் படைக்க வேண்டும்.

> சோம்பிக் கிடந்தால்
> சிலந்தியும் உன்னைச் சிறைப்பிடிக்கும்.
> எழுந்து நடந்தால் எரிமலையும் வழிகொடுக்கும்.
>
> \- கவிஞர் கவிதாசன்



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

# தமிழீழத்தில் பெண் விடுதலை

ஒரு விடுதலைப் போராட்டத்தில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே. பொதுவாக பெண்களுக்குரிய பாதுகாப்பு தன்மையை இழந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு அவர்கள் உள்ளாவதை பல போர் வரலாறுகளில் படிக்கலாம். உடல் ரீதியான துன்பங்கள், மனப் பாதிப்புக்கள் என்று பல்வேறு கோணங்களில் பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்திலும் அதிகம் பாதிக்கப்பட்டது பெண்களே என்றாலும் பெண்கள் விடுதலைப்போராட்டத்திலும் ஈடுபட்டது பெருமைக்குரிய விடயம்தான். உலக அரங்கில் பெண்விடுதலையென்பது வெறும் வாய் பேச்சாகவே நின்று விடுகின்ற போது தமிழ் பெண்கள் வீரத்தோடு போரிட்டமையும், சமஅந்தஸ்து உடையவர்களாக சமூகத்தில் வாழ்வதும் குறிப்பிடவேண்டியது.

எனது வன்னி காட்டு விஜயத்தின் முதல் அனுபவமே அலாதியானது. இரவு சுமார் பத்து மணி போல் இருக்கும் கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி வழியாக புதுக்குடியிருப்பு போக பயணமானோம். கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கரையோரமாக மெதுவாக 'பிக்கப்' வாகனத்தில் பயணம் செய்தபோது ஒரு டிரக்டர் வாகனம் பழுதாகி இருட்டில் நின்று கொண்டிருந்தது. சுமார் 10-15 இளம் பெண்கள் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள். என்னை அழைத்து சென்று கொண்டிருந்த அருட்பணி. ஜேம்ஸ் பத்திநாதர் அவர்கள் எமது வாகனத்தை நிறுத்தி அங்கிருந்த இளம் பெண்களிடம் "உதவி வேண்டுமா?" என்று கேட்க அவர்களும் மரியாதையோடு "வேண்டாம் ஐயா, நாங்களே திருத்திவிட்டோம்" என்றார்கள். அவர்களை கடந்து நாங்கள் சென்ற



போது அவர்கள் அனைவரும் பெண் போராளிகள் என்று அருட்தந்தை என்னிடம் கூறினார். இருட்டில் தனியாக எந்த ஆண்துணையும் இல்லாமல் ஒரு பெரிய வாகனத்தை இளம்பெண்கள் ஓட்டி வருவதை முதன்முதலாக என் வாழ்நாளில் கண்டேன். ஆச்சரியப்பட்டு திரும்பும் முன் அவர்கள் வேகமாக எம்மை கடந்து சென்றுவிட்டார்கள்.

அன்றிரவே நாங்கள் எங்கள் பயணத்தை தொடர்ந்த போது புதுக்குடியிருப்பை தாண்டி முல்லைத்தீவை நோக்கி நாங்கள் சென்றபோது நள்ளிரவு நேரம். நானும் அரைதூக்கத்தில் இருந்தேன். திடீரென்று அருட்பணியாளர் எமது வாகனத்தை நிறுத்திய போது நான் பயந்து விட்டேன். எமது வாகனத்திற்கு முன்னால் ஒரு பெரிய வாட்ட சாட்டமான பெண் ஒரு கையில் டார்ச் விளக்கோடும், மற்றொரு கையில் ஒரு பெரிய இயந்திர துப்பாக்கியுடனும் நிற்பதை கண்டுதான் பயந்து போனேன். எங்களைப் பற்றி விசாரித்து பின் எமது வாகனத்தை சோதனையிட்ட பிறகே எமது பயணத்தை தொடர அனுமதித்தாள் அந்த பெண் போராளி. புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு பிரதேசங்கள் விடுதலைப்புலிகளின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக இருப்பதனால் இரவு நேரங்களில் பாதுகாப்பை அதிகப்படுத்தி சோதனையிடுகின்றார்கள் என்று அருட்தந்தை எனக்கு விளக்கமளித்தார். முறத்தால் புலிகளை விரட்டிய வீரத்தமிழ்



புலியை முறத்தால் விரட்டிய வீரத்தமிழ் பெண் இன்று விடுதலைபுலியாய் . . .



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

பெண்ணின் வாரிசுகள் இன்று புலிகளாக தமிழ் மக்களை பாதுகாத்து நிற்கின்றார்கள். இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் பகுதிகளில் காவல் காக்கும் இராணுவ வீரர்கள் எங்கும் தனித்து நிற்பதில்லை. எப்போதும் இருவராக அல்லது நான்கு பேராக கூடித்தான் திரிவார்கள். ஆனால் தமிழீழத்தில் பெண் போராளிகள் தனித்தே நள்ளிரவிலும்கூட காவல் காத்து நின்றது வியப்புக்குரியதே.

தமிழ் பெண்களின் துணிவையும், துன்பத்தையும் ஒரு சேர படம் பிடித்துக்காட்டும் நிகழ்வை ஒரு இளம் பெண்ணின் சொந்த கதையாக அவரிடமே இருந்து கேட்டேன். அதை அவரையே எழுதியும் தரச் சொன்னேன். இதோ ஒரு புரட்சிப் பெண்ணின் சொந்தக்கதை, அவரின் சொந்த வார்த்தைகளிலே.

## வக்கீல் பொண்ணு

1987-1989கள், அவை இந்திய அமைதி காக்கும் படையினரால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஓரங்கட்டப்பட்ட காலம். தெருவுக்குத் தெரு இந்தியப்படைகள் ரோந்து போவது, திடீர் திடீரென சுத்திவளைப்பு எல்லாம் விடுதலைப்புலிகளைப் பிடிக்க. அன்றாடத் தேவைகள் பற்றிய எதுவித சிந்தனையுமில்லாமல், எங்கே ஆமிக்காரர் நிற்பார்களோ, அன்றி எப்போ வருவார்களோ, இதுதான் நம்மவர்கள் தூங்கினாலும் விழித்தாலும் எண்ணம் எல்லாம்.

அன்றும் பொழுது புலர்ந்தது. திடீரென ஊர்மக்கள், பதற்றம் பரபரப்பு பயம் ஒன்றுசேர்ந்த உணர்வலைகளுடன் ஆலயம் நோக்கி ஓடிக்கொண்டிருந்தார்கள். ஆம், ஆமிக்காரர்கள் வந்தால் மக்கள் அடைக்கலம் ஆவது தேவாலயங்களில்தான். குளித்துக்கொண்டிருந்த பெண்மணியொருவர் மேலாடை மாற்றி, கீழாடை ஈரத்துடன், மாற்றுடை கையிலுமாக ஓடினார் என்றால் தமிழீழ மக்கள்பட்ட அவல நிலையை இதற்குமிஞ்சி சொல்ல வேண்டுமா? அந்த அளவிற்கு இந்திய அமைதிப்படை எங்களைப் பாதுகாத்தது. ஒடுகின்ற மக்கள் "ஐயோ! ஆமிக்காரன்கள் வாரான்கள், எங்கள் வீட்டிற்குக் கொஞ்சம் தள்ளி வாரான்கள், நாய்களெல்லாம் குரைக்குது. அங்கேயிருந்து சனங்களும் ஓடி வருது" என்று நின்ற மக்களையும் குரல் கொடுத்து கூட்டி



செல்வார்கள். ஆனால் எங்கள் குடும்பம் மட்டும் ஓடுவதில்லை. குனிந்தால்தானே குட்டுவார்கள் என்ற செருக்குடன் நிற்போம். வந்த ஆமிகள் ஒரு விடுதலைப் புலியைக்கூட பிடிப்பதில்லை. அந்த ஏமாற்றத்தை மக்கள் மீது காட்டுவார்கள். மக்களை பயமுறுத்தி அவர்களை அடக்கி விடுதலை புலிகளுக்கு யாரும் அடைக்கலம் கொடுக்கக் கூடாது என்பார்கள். மீறிகொடுத்தால் அக்குடும்பம் சிதைக்கப்படும். அடைக்கலம் கொடுப்பவர்கள் வீட்டில் இளைஞர்கள் இருந்தால் அவர்களுக்கு சிறைவாசம் கிடைக்கும். பெண்களுக்கு மானபங்கம் ஏற்படும். இதுதான் இந்திய அமைதிப்படை தமிழீழ மக்களுக்கு கொடுத்த வெகுமானம். எத்தனைப்பட்டாலும் துணிந்து நின்று அடைக்கலம் கொடுத்த வீரத்தமிழர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அதில் எங்கள் குடும்பமும் ஒன்று என்பதை நான் மார்தட்டி நிமிர்ந்து, பெருமிதத்துடன் சொல்வேன்.

அடைக்கலம் கொடுத்துவரும் நாட்களில் எங்கள் குடும்பத்தலைவியான எனது அம்மாவின் பெயர் உட்பட ஏழு குடும்பங்களின் பெயர்ப்பட்டியல் ஆமிக்காரர்களால் (இராணுவத்தினரால்) எழுதி ஒட்டப்பட்டது. இப்படி, விடுதலை புலிகளுக்கு உணவோ எதுவித உதவியுமோ கொடுக்கக் கூடாது. மீறி கொடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வருவது வரட்டும், வாழ்வதும் சாவதும் புலிகளுடனே, வீரம் செறிந்த இந்திய வம்சத்தில் வந்தவர்கள் தானே நாமும் என்பதை அவர்களுக்கே புரியவைக்க வேண்டாமா? என்று எமக்குள்ளேயும் ஒரு வேகம் - கொதிப்பு. எங்கள் மண்ணில் எங்கள் உணர்வுகளை இவர்கள் நசுக்குவதா? நாமும் மசியவில்லை, உறுதியுடன் செயல்பட்டோம். பசி என்று தம்பிமார் வந்தபோதெல்லாம் எங்கள் சக்திக்கு மீறி உணவு கொடுத்தோம். இதில் எங்கள் அன்னைக்குத்தான் பெரும்பங்கு. எங்கள் பிள்ளைகளை, உடன்பிறப்புக்களை பசியில் தவிக்கவிடலாமா? தாயுள்ளம் தவிக்காதா?

எனது சகோதரி, முதல்முதலில் இரண்டு போராளிகளை அழைத்து வந்த அந்த நாளை, கலங்கிய கண்களுடனும், தாய்மை உணர்வுடனும் இன்றும் நினைவு கூர்வாள். இராணுவத்தினர் துரத்த ஓடிக்களைத்து ஊர் எல்லையில் ஓர் கிணற்றுக்கட்டில் தண்ணீர் குடித்து களைப்புத்தீர்த்து இருந்தார்கள். முகத்தில் பசிக்களை.



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

தாய்மையுள்ளம் தாங்கவில்லை, வீட்டிற்கு அழைத்து வந்து விட்டாள். அன்றிலிருந்து அவர்களுக்கு எங்கள் வீடு அடைக்கலமானது. அவ்விருவரும் முக்கிய உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. தும்பன், தனேந்திரன் பெயர் கொண்ட இவர்கள் ஏரியா (பிராந்திய) பொறுப்பாளிகள். இவர்களின் கூட்டம் கடுமையாக தேடப்பட்டது. இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த ஏழு வீடுகளில் ஆறு வீடுகளும் இராணுவத்தினரால் கண்டு பிடிக்கப்பட்டு சீல்வைக்கப்பட்டது. எமது வீடு மட்டும் அவர்களுக்கு சவாலாக அமைந்தது.

எமது கிராமத்துக்குள் விடுதலைப்புலிகள் வருவதை அறிந்து இராணுவத்தினர் வாகனங்களில் சுத்திவருவார்கள். ஆனால் வீடு சரியாகத் தெரியாததால் முடிவதில்லை. இறுதியில் ஒருநாள் பொழுதுசாய்ந்து ஆறு மணிக்கு மேல் எமது வீட்டில் குறிப்பிட்ட விடுதலைப்புலிகள் வந்தார்கள். இம்முறை எப்படியும் பிடிப்பது என்று கங்கணம்கட்டி, எங்கள் வீட்டை அடையாளம் காட்டவென எங்கள் ஊர் நபர் ஒருவரையும் தங்கள் டறக் வண்டியில் ஏற்றி வந்தார்கள். அவர்கள் நூறு அடி தொலைவில் வந்த பொழுதே காவல் நின்ற எமது அன்னை கண்டுவிட்டார். விடுதலைப்புலிகள் பறந்துவிட்டார்கள். மயிரிழையில் அனைவரும் அன்று தப்பினோம். இரவோடு இரவாக நாமும் வெளியேறிவிட்டோம். அன்று இரவு முழுவதும் இராணுவம் எங்கள் வீட்டில் காவல், விடுதலைப்புலிகளின் வாலைப்பிடிக்க.

மறுநாள் பொழுது புலர்ந்தது. மீண்டும் பத்து மணியளவில் எங்கள் ஊரில் பெரிய அளவிலான சென்ரி போட்டு தொடர்வாகனங்கள் சூழ இராணுவம் வருகை தந்தது. எனது அம்மா சகோதரி நான் உட்பட, பக்கத்துவீட்டு குடும்பத்தவரையும் டிரக்வண்டியில் ஏற்றி காங்கேசன்துறை (K.K.S) முகாமிற்குக் கொண்டு சென்றனர். அங்கே நால்வரையும் தனித்தனியாக விசாரணைகள். பக்கத்துவீட்டுக்காரரையும் அழைத்து சென்றதன் காரணம், எங்களில் தங்கள் கைவிரல் நகம் கூடப் படவில்லை என்பதனை உலகிற்கு காட்டி தமது களங்கத்தைத் துடைக்கத்தான் என்பதை பின்னர் அறிந்தோம். அங்கே இராணுவத்தலைவர் முன்னிலையில் அம்மா, அக்கா, பக்கத்து வீட்டுக்காரர் மூவரும் விசாரணைக்கு உட்படுத்தபட்ட பின்னர் நான் அழைக்கப்பட்டேன்.



ஒரு மணி நேரம் வரை விசாரிக்கப்பட்டேன். எங்கள் ஊரில் விடுதலைப்புலிகளை எதிர்த்தவர்களும் உண்டு. அவர்கள் என்னை 'சுதந்திர பறவை' (விடுதலை புலிகளின் இளம் பெண்கள் சங்கம்) என்று தவறான இரகசியத் தகவலை கொடுத்திருந்தார்கள். அதன் அடிப்படையிலேயே நான் விசாரிக்கப்பட்டேன். நான் அவர்கள் சொன்ன குற்றசாட்டுக்களை மறுத்தேன். முதல் கேள்வி: "தும்பன் வந்தானா? நீ சுதந்திர பறவையில் இருந்தாயா?" நான் இல்லை என்றே பதில் சொன்னேன். "பொய் சொன்னால் உள்ளே தள்ளிவிடுவோம். பார் அந்த அறையை" என்று அவர்கள் காட்டிய அறையைப் பார்த்தால் அது பைத்தியகாரர்கள் குழுமிய இடம் எப்படி தோன்றுமோ அப்படிப்பட்ட உணர்வை ஏற்படுத்தியது. ஒன்றுமட்டும் திட்டவட்டமாக தோன்றியது. இவர்களிடம் உண்மை எடுபடாது. எனவே அவர்கள் வழியிலேயே பொய்யை மெய்யாக்கி, மெய்யை பொய்யாக்குவது என மனதில் திடம் கொண்டேன்.

அழகிய தூய தமிழில் இராணுவ தளபதி கேட்ட கேள்விகளும் எனது பதில்களும்:
தளபதி: நீ சுதந்திர பறவையில் இருந்தாயா?
நான்: ஆம், இருந்தேன். (பொய்யை மெய்யாக்கினேன்)

தளபதி: ஏன் இருந்தாய்?
நான்: இந்தியாவின் உதவியுடன் தமிழீழத்தை வென்றெடுப்போம். இந்தியா எமக்கு ஆயுதப்பயிற்சி உட்பட சகலவித உதவிகளும் செய்கின்றது. தார்மீக சமுதாயத்தை கட்டியெழுப்பி தமிழீழத்தை இந்தியாவின் துணைகொண்டு வென்றெடுப்போம் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் பிரச்சாரம் செய்தார்கள். நாமும் விடுதலைப்புலிகளைப் பின்தொடர்ந்தோம். (சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் இந்தியாவை முன்வைத்தே பதிலைக் கொடுத்தேன்)

தளபதி: சுதந்திர பறவையில் என்ன செய்தாய்?
நான்: சிறுசிறு கைத்தொழில் முயற்சிகள், பின்தங்கிய கிராமங்களை உருவாக்குதல், கல்வியறிவற்ற சமூகத்தில் அதனை வளர்த்தல் போன்றவை.



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

தளபதி: அதனை நீங்கள் செய்ய வேண்டியதில்லையே. அரசாங்கமும் நாமும் பார்த்துக்கொள்ளுவோமே.
நான்: நீங்களெல்லாம் செய்து நிறைவுகண்டிருந்தால் நாம் ஏன் தலையிடுகிறோம். செய்ய வேண்டிய தேவை இருந்தது. நாமும் செய்கிறோம். இந்தியா தலையிட்டதால்தான் எமக்கு துணிவும், பலமும் கிடைத்தது. கீழ்மட்டத்தில் இருக்கும் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டாமா? அவர்கள் வாழ்வு மலர வேண்டாமா?

தளபதி: புலிகளுக்கு சாப்பாடு கொடுத்தாயா?
நான்: ஆம், கொடுத்தேன்.

தளபதி: ஏன் கொடுத்தாய்?
நான்: (இது என்ன கேள்வி என்ற உணர்வு என் வார்த்தையில் தொனிக்க) பசியென்று யார் வந்தாலும் உணவு கொடுக்கத்தானே வேண்டும். அது கடமைத்தானே. ஏன் நீங்கள் வந்து கேட்டால்கூட நாம் உணவு கொடுப்போம். தமிழர் பண்பாடு அது.

கேள்விகளும் பதில்களும் தொடர்ந்தன. திடீரென இராணுவ தளபதி தும்பன் வந்தானா? என்றார். என்னையறியாது பயம் என்னைக் கவ்விக்கொண்டது உண்மை. அதை அவர் எனது முகத்தில் கண்டுகொண்டார். எனக்கு சிறிது நேரம் பேச்சே வரவில்லை. அவர் அருகில் நின்றவரிடம் குடிநீர் கொண்டு வரச் சொன்னார். கிளாசில் தண்ணீர் கொண்டு வரப்பட்டது. என்னைக் குடிக்கச் செய்தார். அதன் பின்னரே மீண்டும் எனக்கு தென்பு வந்தது. மீண்டும் அவரது கேள்விகள்.

தளபதி: தும்பன் ஆட்கள் உங்கள் வீட்டிற்கு வந்ததுதானே?
நான்: இல்லை, அவர்கள் வருவதில்லை.

தளபதி: வந்தார்கள். பொய் சொல்ல வேண்டாம். எமது ஆட்கள் நேற்று கண்டார்களே, உங்கள் வீட்டிலிருந்து ஓடிப் போனதைப் பார்த்தார்களே?
நான்: (நான் உசாராகி) ஆமாம் விடுதலைப்புலிகளை நீங்கள் தான் வளர்த்தீர்கள். அவர்கள் இங்கே எல்லா இடமும் இருக்கின்றார்கள், உங்கள் படையினர் துரத்தும் போது ஓடிவந்த புலிகள் வீடுகள்



கடக்கும் போது எங்கள் வீடுதாண்டி பக்கத்துவீட்டாலும் ஓடிப்போகின்றார்கள். அவ்வளவுதான். நீங்கள் எப்படி, எங்கள் வீட்டில் இருந்துதான் ஓடிப்போனார்கள் என்று சொல்ல முடியும். அடுத்த வீட்டாரையும் கேட்க வேண்டியதுதானே.
சில வினாடிகள் மௌனம்.
தளபதி: அப்படியாயின் நீ ஏன் தும்பன் என்றதும் பயப்பட்டாய்?
(தும்பன் என்று சொன்னதும் எனக்கு உள்ளூர உதறல் எடுத்தது உண்மைதான். காரணம் கையும் மெய்யுமாக பிடிபட்டதுதானே)
நான்: உங்கள் படையினருக்குதான் பயப்படுகிறோம் - கதையை திசைதிருப்பினேன்.

தளபதி: ஏன் . . . . ?
நான்: நாட்டில் நடப்பது தெரியாதா?
தளபதி: உன்னை ஏதாவது செய்தார்களா?
நான்: இல்லை. . . . ஆயினும் வீட்டில் நின்ற உடையுடன்தானே இங்கு வந்துள்ளேன். உடையை மாற்றக்கூட எமக்குச் சுதந்திரம் இல்லை. அறைவாசலில் காவல்..... என்றதும் எனக்கு கண்கள் கலங்கி விட்டன.

தளபதி: என்ன வக்கீல் பொண்ணு அழுகிறாயோ?
நான்: ஏன்? வக்கீல் பொண்ணுக்கு உணர்ச்சிகள் இல்லையோ?

சிறிது நேரம் மீண்டும் மௌனம். பின்னர் பக்கத்தில் நின்றவனிடம். சட்டை கொண்டுவந்து கொடுக்கும்படி ஆங்கிலத்தில் சொன்னார். நான் எனக்குத் தேவையில்லை என்று, உரமாக பதில் கொடுத்தேன். இவர்களிடம் சட்டை வாங்கி நான் போடுவதா, எங்களை என்னவென்று நினைத்தார்கள். இதுவே என் கொதிப்பு.

வீட்டிலிருந்து புறப்படும் நேரம் நடந்த சிறுசம்பவத்தை இங்கே சொல்ல விரும்புகின்றேன். நான் உடை மாற்ற வேண்டுமென்று எனது மூத்த சகோதரியுடன் (அக்கா) அறையினுள் சென்றேன். எமைத் தொடர்ந்து வந்த ஒரு இராணுவவீரன் அறைவாசலில் காவல் நின்றான். என்ன செய்வது என்று தெரியாத சங்கடம், ஆடைமாற்றப்போகிறேன் என்று இவனிடம் சொல்வதா, முடியாது. அதே நேரம் எனது அக்கா



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

"ஐசியை (தேசிய அடையாள அட்டை) எடு, ஐசியை எடு" என்று சொலிக்கொண்டே நின்றார். எனக்கோ திண்டாட்டம், அதை வைத்த இடத்திலிருந்து எப்படி எடுப்பது? என்று எனக்குள்ளே போராட்டம், எனவே ஐசி எங்கேயோ என்பது போல தேடினேன், அக்காவும் "எங்கேதான் வைத்தாய், கெதியாய் எடு" என்றார். நானும் தேடுவது போல் நடித்தேன், இதைப் பார்த்து நின்ற இராணுவவீரன் என்னை வரும்படி அவசரம் காட்டினார். ஐசி என்றேன், பரவாயில்லை வா என்றார், அவர்களுக்கு நேரம் கடக்கின்றது என்பதோ அல்லது ஐசி முக்கியமில்லையோ என்னவோ, அவசரப்படுத்தினார். நானும் இதுதான் தருணம் என்று ஒருபயங்கர சூழ்நிலையிலிருந்து விடுபட்ட உணர்வுடன் அவர்களுடன் சென்றேன். ஏனெனில் ஐசி வைத்த இடம் எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அதை அந்த நேரம், அந்த இடத்திலிருந்து எடுத்தால் நிலமை மோசமாகியிருக்கும். ஐசியுடன் சேர்த்து எனது ஒரு சோடி தங்கவளையல், அதனிலும் மேலாக விடுதலை புலிகளால் நாலுநாள்கள் முந்தி கொடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் இருந்தன. ஐசியை எடுத்தால் அதனுடன் சேர்த்து துண்டுப்பிரசுரமும் அகப்படும் என்பதே எனது பயத்தின் காரணமாகும், அவை பாதுகாக்கப்பட இடம் வேறெதுவுமில்லை. நான் படுத்துறங்கும் எனது தலையணை உறையில் கீழ்புறத்தின் உட்பகுதிதான். வெளியே வரும்போது அக்காவிடம் யாரும் இல்லாத போது ரகசியமாக சொல்லிப்போனேன். இச்சம்பவத்தை சமயம் வந்தபோதெல்லாம் வீட்டில் சொல்லி சிரிப்பதுண்டு.

இரா. தளபதி: (அருகே பெரிய துணிப்பொட்டணம், ஒருகால் செருப்பு இவற்றைக் காட்டி) இவையெல்லாம் யாருடையது?
நான்: எங்கள் கட்டில் விரிப்புக்குள்ளே பல சேட்டுக்கள், ஒருசில ஜீன்சுகளும் இருந்தன. அவை எனது மூத்த அக்காவின் மகனுடையவை.

இரா. தளபதி: செருப்பு யாருடையது?
அது தும்பனுடையது. அவர்கள் பரபரப்பாக ஓடியபொழுது கொழுவியது பாதி, கொழுவாதது பாதியாக சென்றார்கள். இவர்களிடம் ஒருகால் செருப்பு அகப்பட்டிருக்கின்றது என்பதை புரிந்துகொண்டேன். ஆனால் அதை எனது அக்காவின் மகனுடையது என்று சொல்லவில்லை. ஏனெனில் அவர் பற்றி விசாரித்த போது அவர்



ஊரில் இல்லையென்றேன். இரண்டு நாட்கள் முன்புதான் அவர் தனது சகோதரி வீட்டிற்கு சென்றிருந்தார். எனவே எப்படி தம்பியுடையது என்று சொல்லி சமாளிப்பது. எனவே அதுபற்றி எனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டேன்.

பின்னர் பக்கத்து அறையில் மேலதிகாரி போலும், அவரிடம் அழைத்துச் செல்லப்பட்டேன். அவரது மேசைமேல் தேசியத்தலைவர் பிரபாகரனின் படமும், அவருக்கு நேரெதிரே புலிச்சின்ன படமும் தொங்கிக்கொண்டிருக்க அவரது அறை காட்சியளித்தது. எனக்குள்ளே ஏளனம். இதெல்லாம் ஒரு வலைவிரிப்பு, மக்களை ஏமாற்றும் நாடகம். ஏனெனில் மக்களை அரசியல் புரியக் கூடாத முட்டாளாக்கி விட்டார்கள். எனது ஏளனப் பேச்சை வெளியே கொட்டிவிட்டேன்.

இப்படி, "நீங்கள் மட்டும் தலைவரின் படம், புலிச்சின்னம் எல்லாம் வைத்திருங்கள். எங்களை மட்டும் இப்படி இழுத்தடித்துத் துன்புறுத்துங்கள்" என்றேன். "என்ன செய்வது நாம் அவர்களை நன்றாகத்தான் பார்க்கின்றோம், அவர்கள்தாம் நம்மோடு சண்டைசெய்கின்றார்கள்" என்றார் அவர். "சிறியோர் செய்த பிழைகளை பெரியோராகிய நீங்கள் தான் பொறுத்துப்போக வேண்டும். நீங்கள் அவர்களை வளர்த்தவர்கள்தானே. நீங்கள் அவர்களை தகுந்தமுறையில் அணுகினால் எல்லாம் சரியாகும்" என்றேன். தொடர்ந்து பேசுகையில் "நீ பிரபாகரனுக்குக் கடிதம் எழுதி அவரை ஆயுதங்களைப் போட்டுவிட்டு சரணடையச் சொல்லிச் சொல்லு. நாங்கள் எல்லாம் கொடுப்போம்". ஏதோ தமிழீழமே என்கைப்பிடிக்குள் தான் இருப்பது போல சொன்னார்.

"அவருக்கு கடிதம் எழுதக்கூடிய சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித்தாருங்கள். நான் எழுதுகிறேன். நீங்கள் ஆயுதபாணிகளாக நிற்கும்வரை அவர்களும் வெளிப்பட மாட்டார்களே" நானும் பதிலடி கொடுத்தேன். நிறையவே பேசினார்கள். என்னை அரசியல் கண்ணோட்டத்தில் பார்த்ததை, தங்களுக்குள்ளே ஆங்கிலத்தில் பேசியதிலிருந்து புரிந்து கொண்டேன். மேற்கொண்டு நான் எதையும் பேசவிரும்பவில்லை. விடயத்தை முடிக்கவே விரும்பினேன். "உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள். உங்களால் வளர்க்கப்பட்ட புலிகளுக்கும் உங்களுக்கும் உள்ள பிரச்சினைகள் எமக்கு



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

விளங்காது. மக்கள் எம்மை விட்டு விடுங்கள். ஏன் எங்களைத் தொந்தரவு செய்கின்றீர்கள்" என்றேன்.

மீண்டும் இருதலைவர்களுமாக பழைய பல்லவி. "தும்பன் வந்தான் தானே, சரிசரி இனிமேல் வந்தால், அல்லது அழைத்து சாப்பாடு கொடுத்து நித்திரையாக்கிய பின் எமக்குத் தகவல் கொடு" என்றார்கள். "எமக்கு அதெல்லாம் முடியாது. வேண்டுமாயின் உங்களிடம் தான்வேண்டிய படையினர் உண்டே. நீங்களே எங்கள் வீட்டுத் தெருவில் சந்திக்கு ஒன்றாக இருபக்கமும் சென்றி போட்டு வரும்போது பிடியுங்கள்" என்றேன்.

"அதெல்லாம் எங்களால் முடியாது. உன்னால்தான் முடியும். எமக்கு உதவு", என்றார். நானோ "முடியாது, முடியவே முடியாது" என்றேன். "ஆம், பிடித்து தருகிறேன்" என்று சொல்ல வைக்க வேண்டும் என்றதொரு பிடிவாதம் அவர்களுக்கு. எனவே இறுதியில் நானும் "காட்டி கொடுத்தால் என் மண்டைதான் உருளும்" என்றேன். அவர்களோ "உன் மண்டை ஸ்ரோங் (strong) ஆனது, உருளாது" என்றார். இது என்னடா வம்பாகிவிட்டது. இன்று நாம் வீடு போவதில்லை போலும் என்ற உணர்வு ஒருபுறம், எம்மவர்களை இவர்களிடம் கையளிப்பதா என்ற கொதிப்பும் வேகமும் மறுபுறமாக அலைமோதும் உணர்வு போராட்டத்தின் மத்தியில் நின்றநான் இவர்களிடமிருந்து விடுபட்டால் போதும் என்ற நிலையில், சரி என்று தலையாட்டி விட்டு வெளியேறினேன். காட்டி கொடுப்போமா, இல்லை காட்டித்தான் கொடுத்தோமா. அதன்பின்னர்தான் நாம் நிறையவே துன்பப்பட்டோம். ஆயினும் ஒரு புலியைக்கூட உயிரோடு பிடிக்கவில்லை. இது எமக்கு வெற்றிதானே.



# தமிழீழ சமூகம் - எனது பார்வை

சமூக பகுப்பாய்வு என்பது ஒரு சமூகத்தை அதன் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் என்ற அலகுகளில் பிரித்து பார்த்து அறிய முற்படுவதுதான். காரல் மார்க்சின் தத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமூகத்தின் அடித்தளமாக பொருளாதாரம் என்பதும், அதன் மேலே தான் அரசியலும், பண்பாடும் கட்டியெழுப்பப்படுவதாகவும் அறிகிறோம். அதன் அடிப்படையில் நான் கண்ட தமிழீழ சமூகத்தை முழுமையாக பகுப்பாய்வு செய்யும் நிலையில் நான் இல்லை என்பதை நன்குணர்வேன். இருப்பினும் நான் கண்ட சில நிகழ்வுகளையும், என்னைப் பாதித்த சில அனுபவங்களையும் கொண்டே இச் சமூகப் பகுப்பாய்வில் ஈடுபடுகிறேன். மேலும் தமிழகத்தில் நான் வாழ்ந்த தமிழ் சமூகத்தோடு ஒப்பிட்டே தமிழீழ சமூகத்தையும் பார்க்க விழைகிறேன்.

## பொருளாதாரம்

தமிழகத்தில் நாம் பெரிதாக காணக்கூடிய வறுமை, வெளிப்படையாக அப்பட்டமாக இங்கு தெரிவதில்லை. இயற்கையான அனைத்து வளங்களையும் கொண்டதாகவே தமிழீழம் காணப்படுகிறது. உதாரணமாக முள்ளிக்குளம் கிராமத்தை இங்கு முன்வைக்க விரும்புகிறேன். ஒவ்வொரு வார இறுதி நாட்களிலும் நான் தவறாமல் சென்று வந்த ஒரு கிராமம். மன்னார் மாவட்டத்தின் தென் கோடியில் உள்ள சிறுகிராமம். போரினால் மிகவும் பாதிப்புக்குள்ளான இடம். இக்கிராமத்தின் மேற்கு எல்லை இந்தியப் பெருங்கடல். கிழக்கு எல்லை வில்பத்து தேசிய காடு. தெற்கு எல்லை வற்றாத மொடராகம ஆறு வடக்கில் மூன்று போகமும் நெல் விளையும் விவசாய நிலங்களும்,



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

சிறிய குளங்களும் என்ற இயற்கை வளங்களைக் கொண்டே தமிழ் மக்கள் இங்கு வாழ்கிறார்கள். மன்னார் மாவட்டம் மட்டுமன்றி தமிழீழம் முழுவதுமே கடலால் சூழப்பட்டுள்ளது. தமிழீழத்தின் உட்பகுதிகளில் பெரிதும், சிறியதுமாக பல குளங்கள் உள்ளன. வளமான வயல்களும், காட்டுவளங்களும் எங்கும் காணப்படுகின்றன. பொதுவாக இங்கு வாழும் தமிழ் மக்கள் விவசாயம் மற்றும் கடல் தொழில் செய்தே வாழ்கிறார்கள் கடற்கரையோர தமிழர்கள் காலம் காலமாக மீன் பிடிக்கும் தொழிலை செய்து வருகிறார்கள். உள்நாட்டு தேவைக்கு போக மீன்கள், இறால், நண்டு போன்றவை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன. இதனால் மீனவர்களுக்கு நல்ல வருவாய் கிடைக்கும் வாய்ப்புள்ளது. தொழிற்சாலைகள் என்று எதுவும் இங்கில்லை. படித்தவர்கள் அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களிலும், பாடசாலை ஆசிரியர்களாகவும் பணி செய்கிறார்கள்.

ஏதேனும் தொழில் வாய்ப்பு எப்போதும் இங்கு உண்டு. சாதாரண கட்டிட தொழிலாளர்கள், தச்சர்கள், வாகனம் திருத்துவோர்கள் கூட குறைவு. ஆகவே அதிக பணம் பெற்று வேலைகளை செய்கிறார்கள். எனவே வறுமை என்பதே இங்கில்லை எனலாம். ஏதேனும் ஒரு தொழில்



தமிழீழ பொருளாதாரத்தின் அடிநாதமான இயற்கை வளம் அழிக்கப்பட்ட காட்சி



செய்து வாழ்க்கையை வாழலாம் என்ற நிலையே அதிகம் இங்கு காணப்படுகிறது. கடல் தொழில் செய்பவர்கள் வருடத்தில் ஆறு மாதங்கள் சோளகக்காற்று வீசும் நேரம் கடலுக்கு மீன் பிடிக்க செல்வதில்லை. அப்போது அவர்களுடைய குடும்பங்கள் வறுமையில் வாடும். கடன்பட்டு அல்லது பொருட்களை அடகு வைத்து உணவு பெறவேண்டிய சூழல். இதற்கு முக்கிய காரணம் சிறு சேமிப்பு இல்லாததே. ஆறு மாதம் தொழில் செய்து கை நிறைய சம்பாதிக்கும் பணத்தை, சிறுக சிறுக சேமித்து வைத்தால் காற்று காலத்தில் பயன்படும் என்ற சிந்தனையில்லாமல், பெற்ற பணத்தை குடித்து, ஆடம்பரச் செலவுகளுக்கு பயன்படுத்தி பின்னர் துன்புறுகிறார்கள். தமிழீழத்தில் யாழ்ப்பாணத்து மக்களே மிகவும் வசதிகளோடு உள்ளனர். கல்வி நிலையிலும், பொருளாதார நிலையிலும் மிகவும் மேம்பட்டவர்களாக யாழ்ப்பாணத்து தமிழர்களைக் காணலாம். வன்னி பிரதேசமாகிய கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மக்கள் மிகவும் குறைந்த பொருளாதார நிலையில் வாழ்கிறார்கள்.

கடந்த இருபது ஆண்டுகால போரினால் மறைமுகமான ஒரு நன்மையையும் தமிழீழ மக்கள் பெற்றுள்ளனர். போரினால் இடம் பெயர்ந்து குறைந்தது குடும்பத்துக்கு ஒருவர் என்ற முறையில் பலரும் இந்தியா, ஐரோப்பா மற்றும் கனடா போன்ற வெளிநாடுகளுக்கு சென்று அங்கிருந்து பெருமளவிலான அந்நிய செலாவாணியைப் பெற்று தருகிறார்கள். வெளிநாட்டில் உழைத்து இங்கே நிலங்களை வாங்கி கட்டிடங்களை அமைத்து தொழில் வளங்களையும் பெருக்கி கொள்கின்றனர். புலம் பெயர் தொழிலாளர்களினால் இலங்கைக்கு கிடைக்கும் வருமானம் இந்த ஆண்டு, முதல் ஆறுமாதங்களில் பதினொரு சதவீதமாக அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனாலும் தமிழீழத்தின் பொருளாதாரம் நலிந்து விடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று கூறலாம்.

பொதுவாகவே தமிழ் பெண்களுக்கு தங்க நகைகள் மீது அதிக ஆர்வம் உண்டு. யாழ்ப்பாணத்தின் முக்கிய வீதிகளில் பல நகைக்கடைகள் இருப்பதே இதற்கு சான்று. இன்று வெளிநாடுகளிலிருந்தும் தங்கம் அதிகளவில் கொண்டு வரப்படுகிறது. ஆண்கள் கூட கைகளில் தங்க காப்பு அணிவதை நாகரீகமாக கருதுகிறார்கள்.



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

இன்று இலங்கையின் பொருளாதாரம் கடந்த கால போரினால் கடும் வீழ்ச்சியுற்ற போதும், இன்றைய சமாதான சூழலில் பல வல்லரசு நாடுகள், வளர்ச்சியடைந்த நாடுகள் பெரும் கடனுதவி, நிதியுதவி செய்து வருவது நாம் அறிந்தது. இத்தகைய நிதியுதவிகள் பல பன்னாட்டு சேவை நிறுவனங்கள் ஊடாகவும் இலங்கை மக்களுக்கு கிடைக்கின்றன. ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் இணையம் (UNICEF), ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர்ஸ்தானியர் (UNHCR) போன்ற நிறுவனங்கள் பல்வேறு நலதிட்டங்களை செயல்படுத்துகின்றனர். இத்தகைய பெரிய பன்னாட்டு நிறுவனங்களுக்கு உதவிபுரிய, சில சிறிய உள்நாட்டு சமூக நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் இங்கு உள்ளன. தமக்கு கிடைக்கும் நிதியில் பெரும் பங்கினை இத்தகைய நிறுவனங்கள் ஊழல் செய்து எடுத்துக் கொள்கின்றனர். சனம் குடியேறாத ஊர்களில் குடிசைகள் போட்டதாகவும், சாலைகள் அமைத்ததாகவும், கிணறு தோண்டியதாகவும் தவறான கணக்கு காண்பித்து, பிறகு மாட்டிக்கொண்டு மக்களிடம் பணத்தை திருப்பிக்கொடுத்த நிறுவனங்கள் உண்டு. முள்ளிக்குளம் கிராம மக்களுக்கு அப்படியொரு நிகழ்வு நடந்தது.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியென்று சர்வதேசத்திடம் பெற்ற நிதியை இலங்கை அரசாங்கமும், சிங்கள மக்களும் அபகரித்துக்கொள்ள முயற்சித்தால் சும்மா நின்று வேடிக்கை பார்ப்பதா? ஆகவே தான் சுயமாக, திறமாக செயற்பட விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக சபையைக் கேட்பது நியாயமென தெரிகிறது.

விடுதலைப் புலிகள் ஏன் டோக்கியோ நிதி வழங்கும் மாநாட்டுக்கு செல்லவில்லை என்பதைப் பற்றி விமர்சித்த போது ஒரு அருட்பணியாளர் கூறினார், "இன்று எமது தேவை வெறும் நிதி அல்ல, எம்மிடம் தேவையான வளங்கள் உள்ளன. இலங்கை அரசியல்வாதிகளோடு சேர்ந்து போய் உலக நாடுகளிடம் கையேந்த வேண்டிய அவசியம் எமக்கில்லை. எமக்கு தேவை நீதியோடு கூடிய சமாதான வாழ்வு. தமிழ் மக்கள் நீதியோடும், நிம்மதியோடும், சகல உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்றுதான் போராடி வந்தோம். பணத்தைக் காட்டி எம்மை அடக்கிவிட, அமுக்கிவிட இயலாது". அதுவும் உண்மைதானே. தமிழீழத்தின் வளங்களைக்கொண்டு விரைவில் ஒரு சிங்கப்பூர் அல்லது துபாய் போன்ற நாட்டைக் கட்டியெழுப்பும் திறமை தமிழர்களுக்குண்டு என்பதை சிங்களவரும், ஏன் உலகநாடுகளும் நன்றாக அறியும்.



**அரசியல்**

தமிழன் என்றாலே ஒத்துப்போக மாட்டார்கள், ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். சமாதானமாக, ஒற்றுமையாக வாழ மாட்டார்கள் என்ற கருத்து பரவலாகவே உள்ளது. இதன் அடிப்படையிலேயே நண்டுக் கதையைக் கூட சொல்லுவார்கள். எல்லா நாடுகளிலும் பிடிபட்ட நண்டுகளை கூடைகளில் அடைத்து மூடி வைப்பார்களாம். ஆனால் தமிழ் நண்டுகளை மட்டும் மூட வேண்டிய அவசியம் இல்லையாம். ஒரு தமிழ் நண்டு மேலேறி கூடைவிட்டு வெளியே பாய நினைத்தால் பிற நண்டுகள் அதை பிடித்து கீழே இழுத்து விடுமாம். அதனால் எந்த நண்டும் வெளியே வராதாம். இது தமிழனுக்கே உரிய பிறவிப் பண்பு என்று கூட சொல்லலாம்.

ஈழத்தமிழர்களிடேயும் அரசியல் அடிப்படையிலான இத்தகைய பிளவுகள், ஒற்றுமையில்லா தன்மையினை வெளிப்படையாக பார்க்கலாம். ஒரே குறிக்கோள் கொண்ட பல அரசியல் கட்சிகள் இன்றும் செயல்படுகின்றன. ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ஈரோஸ், ஈ.பி.டி.பி., டெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி என்று எல்லாமே தமிழீழ விடுதலையை மையமாகக் கொண்டு பிறந்த கட்சிகளே. இவைகள் அனைத்தும் ஆயுதம் ஏந்தி போராடிய குழுக்களே. பின்னர் இலங்கை அரசியல் வாதிகளின் நயவஞ்சக பேச்சுக்கு மயங்கி ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு தேசிய நீரோட்டத்தில் கலந்து, தேர்தல் அரசியலில் இலாபம் தேடி இன்று தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக, இலங்கை பாராளுமன்றத்தில் அலங்கார பொருட்களாக காட்சி தருகிறார்கள். இவர்களுடைய செயல்பாடுகள் தமிழன் வாழ்வை விடியச் செய்யுமா என்ற கேள்வி என்னுள் தொக்கி நிற்கிறது. ஏதோ உடலின் மேல் உள்ள புண்ணுக்கு மருந்து கட்டும் உபாயமாக இவர்களது செயல்பாடுகள் அமைந்துள்ளன. உள்நோயான, ஆழ புரையோடிப் போன நோயான அடிமை வாழ்விலிருந்து இவர்கள் விடுதலை பெற்றுத் தருவார்களா?

தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கூறும் சில பாராளுமன்ற உறுப்பினர்களை நேரில் கண்டு கதைத்திருக்கிறேன். தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சிகளின் ஒன்றிய செயலாளர், வட்டச் செயலாளருக்கு கிடைக்கும் மதிப்பும், மரியாதையும் கூட இங்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைப்பதில்லை. அது தமிழ்நாட்டின்



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

அவலங்களுள் ஒன்று. மேலும் தமிழ்நாட்டில் இருப்பது போலவே இங்கும் சில குழுக்கள் அல்லது அரசியல் கட்சிகள் சாதி ரீதியாகவும் இயங்குவதாக அறியவருகிறேன். உலகெங்கும் வாழும் தமிழர்களின் சாபக்கேடான சாதி அமைப்பு மனிதனை மனிதனாக மதியாமல், பிறப்பால் ஏறறத்தாழ்வுகளை புகுத்தி மனித வாழ்வை சீரழிக்கிறது. தமிழீழத்தில் சாதியமைப்பைப் பற்றி பின்னர் விரிவாக காண்போம்.

இன்று தமிழ் மக்களிடையே வலுவான ஒரு அரசியற் கட்டமைப்பை ஏற்படுத்திய ஒரே இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள்தான். வன்னிக் காட்டில் விஜயம் செய்கிற போது இதை மிகவும் தெளிவாக உணரலாம். இலங்கையில் சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக, விடுதலைப்புலிகளை ஏற்றுக் கொண்டுதான் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறார்கள். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை தவிர்த்த பிற இடங்களில் வாழும், அதாவது மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் - பிற அரசியல் கட்சிகளின் தாக்கத்தினால் - சிலர் விடுதலைப் புலிகளை தமிழர்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வதில்லை என்பது வருத்தமானதுதான்.

24.09.2003 அன்று வவுனியாவிலும், 15.10.2003 அன்று மன்னாரிலும் நடைபெற்ற "பொங்கு தமிழ் 2003" நிகழ்வு தமிழ் மக்களின் உள்ளுணர்வு பொங்கும் நிகழ்வாக அமைந்திருந்ததை நேரில் கண்டு ஆனந்தமடைந்தேன். ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டது கட்டாயத்தினால் அல்ல மாறாக தங்களின் அடிமைதளை முற்றிலும் நீங்கி உண்மையான சமாதானத்தோடும், உரிமைகளோடும் தமிழினம் வாழவேண்டும் என்பதற்காக என்பது வெள்ளிடை மலை. 'எமது நிலம் எமக்கு வேண்டும், எமது நிலமே எமக்கு வேண்டும்' என்ற முழக்கம் இந்நிகழ்வின் நோக்கத்தை தெளிவுபட உலகுக்கு உரைத்தது. தமிழ் மக்களின் எழுச்சி மிகுந்த நிகழ்வுகளாக அவை அமைந்தன. மேலும் தமிழீழமெங்கும் கேணல் கிட்டு நினைவு நாள், கரும்புலிகள் தினம், தியாக தீபம் திலீபன் நினைவு நாள் மற்றும் மாவீரர் தினம் கொண்டாடிய போது வீதியெங்கும் மஞ்சள், சிவப்பு தோரணங்கள், கொடிகள் கட்டி எழுச்சியை தெரிவித்தது மக்களின் உள்ளங்களில் விடுதலைப் புலிகள் பெற்ற இடத்தை குறிப்பிட்டு உணர்த்துவதாக எண்ணுகிறேன். தமிழீழத்தில் மட்டுமல்ல இந்தியா தவிர்த்த பிற வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களிடையே விடுதலைப் புலிகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்பது மறைக்க முடியாத உண்மை.



இன்று வன்னிக்காடு முழுவதும் விடுதலைப் புலிகள் மிகவும் வலுவான அரசியல் அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். நான் முன்னரே சொன்னதுபோல விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான வன்னிக்காட்டில் நுழையும் போதே தமிழீழ ஆயத்துறை, போக்குவரவு கண்காணிப்பு துறை போன்றவற்றையும், வன்னிப் பகுதியில் தமிழீழ போக்குவரத்து, தமிழீழ காவல், தமிழீழ நீதிமன்றம், தமிழீழ பொருண்மியம், தமிழீழ வனவளம், தமிழீழ மருத்துவச் சேவை, தமிழீழ வைப்பகம் (வங்கி) என்ற அடிப்படையான அரசியல், நிர்வாக கட்டமைப்பைப் பார்க்கலாம். மிகவும் நேர்த்தியாக, விரைவாக மனித நேயத்தோடு செயல்படுபவர்களாக விடுதலைப் புலிகள் செயல்படுவதைக் காணலாம். இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளிலும் பொதுமக்கள் தமது பிரச்சனைகளைத் தீர்க்க விடுதலைப்புலிகளின் உதவியையே நாடுகின்றனர். அது காணிப் பிரச்சனையாக இருந்தாலும் சரி அல்லது சிறிய திருட்டு பிரச்சனையாக இருந்தாலும் விடுதலைப் புலிகளின் தீர்ப்பை அனைவரும் ஏற்று மதிக்கின்றனர். இதுவே விடுதலைப்புலிகள் தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதை உறுதிப்படுத்தும்.

இருப்பினும் சிற்சில குறைபாடுகளை ஆங்காங்கே காணலாம். மனித செயல்பாடு என்றால் சில தவறுகள், குறைகள் இருக்கத்தானே செய்யும். அதுவும் முழுமையான கல்வியறிவு பெறாமல், ஆயுதம் ஏந்தி போராடிய தம்பி, தங்கைகள் இன்று ஒரு பெரிய நிலப்பரப்பை நிர்வகிப்பது என்றால் மிகவும் கடினமான செயல்தானே. அதுவும் ஒரே இனம் என்றாலும் பலதரப்பட்ட மக்களை ஒன்றிணைத்து செயல்படுவது கடினம்தான். பெரும்பாலும் இன்று விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தைப் பற்றிய ஒரு பெரிய விமர்சனம் வரியைப் பற்றிதான். தமிழ் மக்கள் இன்று சிங்கள அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் வரி செலுத்த வேண்டிய நிலையுள்ளது. இந்த இரட்டை வரி தமிழர்களுக்கு ஒரு பெரும் சுமை என்று சிலர் கருதுகிறார்கள். இருப்பினும் விடுதலைப்புலிகள் செயல்படுவதற்கும் பணம் தேவைப்படுகிறது. ஆயிரக்கணக்கான போராளிகளை பராமரிக்கவும், சிங்கள அரசின் படைபலத்திற்கு ஈடாக புலிகள் தமது பலத்தை பேணவும் பெரும் பணம் தேவைப்படுவது நியாயமானதே. கடந்த இருபத்தைந்து ஆண்டளவாக உணவு மறந்து, உறக்கம் துறந்து, பாம்பையும், உடும்பையும் காட்டில் சுட்டு உண்டு, போராடிய அந்த போராட்ட காலத்தில், தங்களது துன்பத்தையே பெரிதென நினைத்து வாழ்ந்தவர்கள், இன்று 5 – 15 சதவீதம் வரி செலுத்துவதையே பெரிய துன்பமாக நினைப்பவர்கள், தன்மானமுள்ள தமிழர்கள்தானா?



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

ஒரு நாள் முள்ளிக்குளத்தில் ... ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணி போல்..... திருப்பலி நிறைவேற்றி மக்களை சந்தித்து காலை உணவையும் முடித்துவிட்டு ஓய்வெடுத்த நேரம். கோயிலுக்கு முன்பாக அமர்ந்து பழைய செய்திதாள்களை புரட்டிக்கொண்டிருந்தேன். யாரோ ஒருவர் ஒரு கூட்டம் நடத்துவது போல் கேட்டது. அதென்ன எனக்கு தெரியாமல் கோயிலில் கூட்டம் என்ற எண்ணத்தோடு சத்தம் வந்த திசையில் சென்றேன். கோயிலின் பின் பக்கம் ஒரு சிறுவன் உரையாற்றிக் கொண்டிருந்தான். அவன் ஒய்யாரமாக வராந்தாவில் நிற்க, கீழே சிலர் நின்று கொண்டிருப்பதாக நான் யூகித்தேன். மறைந்து நின்று என்ன நடக்கிறது என்று கவனித்தேன்.

“உங்களுக்கெல்லாம் ஆளுக்கு ஒரு துவக்கு (துப்பாக்கி) தருவோம். ரேடியோவும் (வாக்கி டாக்கி) தரப்படும். நல்லா சண்டைபிடிக்கணும். வீட்டை பத்தியெல்லாம் நினைக்க கூடாது. தைரியமா நிக்கணும். நாங்க உங்களுக்கு தேவையானதெல்லாம் செய்வோம். விளங்குதோ? இப்ப எல்லோரும் இந்த காணியை மூணுமுறை சுத்தி ஓடி வாங்க”.

ஒரு இராணுவ தளபதி தன் சிப்பாய்களுக்கு கட்டளையிடுவது போல அதிகாரம் கலந்த தொனியில் மிடுக்குடன் உரையாற்றியவன் எட்டாம் ஆண்டு படிக்கும் ஒரு சிறுவன். சிப்பாய்களாக முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு பயிலும் சிறுவர்கள். அங்கே விடுதலைப்புலிகள் இயக்க பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. தொடர்ந்து நான் மறைவில் நின்று அவதானித்துக் கொண்டிருந்தேன். மைதானத்தை சுற்றி வந்தவர்களை நேராக நிற்க சொன்னான். பிறகு அச்சிறுவர்களின் மார்பையும், தோள்பட்டையையும் வேகமாக அடித்து பார்த்து அவர்களின் உடல் உறுதியை சோதித்தான். மிகவும் பலவீனமாக காணப்பட்ட ஒரு சிறுவனை விலக்கி அவனுக்கு வேறு பணி தரப்படும் என்று சொல்லப்பட்டது.

அங்கிருந்த பழைய வாகன டயர்களை உருட்டி, ஒருவர் மீது ஒருவர் மோதி சண்டையிடச் சொன்னான். தானும் ஒன்றை எடுத்துக் கொண்டு பிறரோடு மோதி பயிற்சி கொடுத்தான். பிறகு எல்லா டயர்களையும் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி, பங்கர் போல் அமைத்து அதனுள் நின்று குறிபார்த்து சுடக்கற்றுக்கொடுத்தான். பனைமர



மட்டைகளை பாவித்து துப்பாக்கிபோல் அதைக் கொண்டு பயிற்சி கொடுத்தான். புதர்களில் மறைந்து நின்று தாக்கவும், காயம்பட்டவர்களை தூக்கிக்கொண்டு போகவும் பயிற்சி கொடுத்தான். அது நடைபெறும் போது சிப்பாயாக விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் மறைந்திருந்த என்னை கண்டுவிட்டு பாதர் என்று கத்தினான். அதோடு அவர்கள் விளையாட்டு கலைந்துவிட்டது. முழுமையாக பார்த்து ரசிக்க முடியவில்லையே என்ற ஏமாற்றத்தோடு அவர்களோடு இணைந்தேன். தளபதியாக செயல்பட்டவரை அழைத்து “இதெல்லாம் உமக்கு எப்படி தெரியும். ஏதாவது இயக்க பயிற்சியை நேரில் பார்த்தீரா அல்லது போய் வந்தீரா? வீட்டில் யாராவது இயக்கத்தில் இருக்கிறார்களா?” என்று பல கேள்விகள் கேட்டேன். எங்கே நான் கோபப்பட்டு கண்டிப்பேனோ என்ற பயத்தோடு பதிலேதும் சொல்லாமல் மௌனமாக நின்று கொண்டிருந்தான்.

அவனது பயத்தைப் போக்க வேண்டும் என்பதற்காக ஒரு பாட்டு பாடும் என்றேன். என்ன பாட்டு பாட என்று கேட்டான். அதற்குள் அருகில் நின்றவர்கள் இவனுக்கு இயக்க பாட்டு நல்லா வரும் என்று சொல்ல நானும் பாடும் என்றேன். ஒரு அருமையான இயக்கப் பாடலை தெளிவாக பாடினான். அவன் பாடிக் கொண்டிருந்த போதே சூழ நின்றவர்களும் அவனோடு சேர்ந்து பாடத் தொடங்கினார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தாக்கம் மிகப் பெரியது. நான் சுற்றிவந்த பல இடங்களிலும், நான் சந்தித்த வீடுகளிலெல்லாம் நான் சந்தித்த மனிதர்களிலெல்லாம் இயக்கத்தின் தாக்கத்தை உணர முடிந்தது. அந்த தாக்கத்தின் வெளிப்பாடுகளைக் கொண்டே விடுதலைப் புலிகள்தான் ஈழத்தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகள் என்று உறுதிபடக் கூறுவேன்.

## விடுதலைப்புலிகளின் வளர்ச்சி

‘பத்து நல்ல இளைஞர்களைத் தாருங்கள். இவ்வுலகை மாற்றி காண்பிப்பேன்’ என்று அறைக்கூவல் விடுத்தவர் சுவாமி விவேகானந்தர். கைவிரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் ஒரு சிறிய குழுவாக செயல்பட துவங்கிய விடுதலைப்புலிகள் இன்று 18,204 மாவீரர்களை உயிர்பலி தந்து, தமிழீழம் முழுவதும் நிர்வகிக்கும் ஆற்றல் பெற்றுள்ளனர். இரண்டு



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

வலிமை வாய்ந்த, முறையான பயிற்சி பெற்ற இராணுவத்தை எதிர்த்து போரிட்டு வெற்றி பெறும் நிலைக்கு உயர்ந்துள்ளார்கள் என்றால் அதுவே அவர்களின் வளர்ச்சியின் குறியீடு. கொரில்லா முறையில் போராட்டத்தை துவக்கி, முறையான இராணுவ கட்டமைப்பை மிகக் குறைந்த காலத்தில் உருவாக்கி, எதிரியிடமிருந்து பறித்த ஆயுதங்களை தமது பலமாக்கி, அயல்நாட்டு இராணுவ நிபுணர்கள் வியக்கும் வண்ணம் ஓயாத அலைகள் 1,2,3 என்ற பெரும் சமர்களை களமாடி, முல்லைத்தீவு, ஆனையிறவு போன்ற இராணுவப் பெருந்தளங்களை கைப்பற்றியது மாபெரும் வளர்ச்சியாகும்.

எவரிடமும் கையேந்தி நில்லாமல், சுயமாக இராணுவ பயிற்சிகளை மேற்கொண்டு, நுணுக்கமாக திட்டமிட்டு, சக போராளிகளை வழிநடத்தி வெற்றி வாகை சூடிய தலைவன் பிரபாகரன். ஆயுதமேந்தி போராடிய பிற தமிழ் குழுக்களெல்லாம் களம் கண்டு ஓடிய பின்னும் எதிரிக்கு முகம் கொடுத்து வீரத்தோடு நின்றவன் தலைவன் பிரபாகரன். ஆயிரமாயிரம் இளையோரின் அண்ணனாய், தமிழீழ மக்களின் தலைவனாய் வாழும் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமைத்துவம் தமிழீழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சி எனலாம்.

கடந்த முப்பது ஆண்டளவாகவும் தலைமறைவான வாழ்க்கையை மேற்கொண்டு, பலவித இன்னல்கள், இடையூறுகள், போக்குவரத்து தடைகள், பொருளாதார தடைகள் என்பனவற்றை சந்தித்த போதும் இன்று மிகவும் வலுவான நிலையில், திறம்பட நிர்வாகம் செய்யும் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கண்டு வியந்திருக்கிறேன். சுயாட்சிக்கு தேவையான அனைத்து அரசியல் அமைப்புகளையும், நிர்வாக கட்டமைப்புகளையும் கொண்டு உண்மையான, நீதியான மக்களாட்சி செய்பவர்கள் விடுதலைப்புலிகள்.

திரை கடல் ஓடி திரவியம் எடு என்ற வாக்கு ஈழத்தமிழரிடையே பலித்துள்ளது. அகதிகளாய் கடல் கடந்து பாருலகம் முழுவதும் வாழும் ஈழத்தமிழர்கள் தமிழீழத்தின் வளமையை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்கு அறிவோம். தமிழீழத்தின் பெரும்பகுதி கடலால் சூழ்ந்துள்ளதால், கடலையும் காக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கடற்புலிகளையும் உருவாக்கி சாதனைகள் புரிந்துள்ளனர். கடலைப் பாதுகாக்க, கடலோர மக்களை பாதுகாக்க கடற்புலிகள் போராடியுள்ளனர். இந்த கடற்புலிகளின் வளர்ச்சியை நேரில் கண்டு அதிசயமானேன்.



முல்லைத்தீவில், அளம்பில் காட்டு பகுதியில் இரண்டு பெரிய படகுகளை கண்டேன், கடற்புலிகளே வடிவமைத்து, கட்டிய படகுகள், இன்று கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. ஒன்று போர்ப்படகு, மற்றொன்று எண்ணெய் படகு, இரண்டுமே குறைந்தது 50 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்டது. நவீன வசதிகள் கொண்ட படகுகள். நவீன மலசல கூடம், தங்குமிடம் அமைக்கப்பட்டிருந்தது. ஏதோ வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது போல காணப்பட்டது. விடுதலைப்புலிகள்தான் அதை கட்டினார்களா என்ற ஆச்சரியத்தோடு மீண்டும் மீண்டும் எனது சந்தேகத்தை வெளிப்படுத்தி என்னை அழைத்து சென்றவர்களிடம் உறுதிப்படுத்திக் கொண்டேன். எனது மதிப்பீட்டின்படி அந்த எண்ணெய் படகு குறைந்தது ஒரு இலட்சம் லீட்டர் கொள்ளளவு கொண்டதாக காணப்பட்டது. மூன்று பெரிய மோட்டார் கொண்டு இயங்கக் கூடியதாகவும் அவை காணப்பட்டன. கடலில் காவியமான இரண்டு கடற்புலி மாவீரர்களின் பெயரை கொண்ட படகுகள் அவை. நான் இணையதளத்தில் வாசித்த ஒரு ஆங்கில பொன்மொழி நினைவுக்கு வந்தது. Amatures built the Ark and the Professionals built the Titanic. தமிழில் மொழிபெயர்த்து சொல்வதென்றால் அனுபவமில்லாதவர்கள் நோவா பெட்டகத்தை உருவாக்கினார்கள். நிபுணர்கள் டைட்டானிக் கப்பலை கட்டினார்கள். அமெரிக்க, இந்திய மற்றும் இஸ்ரேயலிய நிபுணர்களிடம் தேர்ச்சிபெற்ற இலங்கை கடற்படையினர் கடற்புலிகளிடம் பலமுறை தோற்றது வரலாறு.

இயக்கத்தின் வளர்ச்சியின் மற்றெரு குறியீடாக நான் நேரில் கண்டது அவர்களுடைய வெகுசன தொடர்பு ஊடகங்கள். செய்திதாள்களையோ, துண்டு பிரசுரங்களையோ அச்சடித்து மக்களிடையே விநியோகம் செய்யமுடியாமல் பொருளாதார தடையும், பொருட்கள் தடையும் இருந்த காலகட்டத்தில் பள்ளிக்கூட மாணவர்களின் நோட்டு புத்தக தாளையும், பொருட்களை மடித்து கொடுக்கும் தாள்களிலும் அச்சடித்து தமது கருத்துகளை பரப்பியிருந்ததைப் பார்த்தேன்.

தமிழ் கவிஞர்களையும், இசை கலைஞர்களையும் ஊக்கப்படுத்தி நூற்றுக்கணக்கான ஒலிப்பேழைகளை இக்குறைந்த கால கட்டத்தில் உருவாக்கியுள்ளனர். தமிழீழத்தில் வாழும் மக்களனைவரும் குறிப்பாக சிறார்கள் கூட பல இயக்கப் பாடல்களைப் பாடுகின்றனர் என்றால் இந்த ஒலிப்பேழைகளின் வெற்றி எனலாம். உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தன்,



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

தேனிசை செல்லப்பா மற்றும் புதுவை இரத்தினதுரை போன்றோரின் பங்கு தமிழீழ விடுதலைப் பணியில் பெரும் மதிப்புக்குறியதே.

விடுதலைப்புலிகள் 'புலிகளின் குரல்' என்ற வானொலி சேவையை பல்லாண்டுகளாக திறம்பட, மக்கள் கேட்கும் வண்ணம் நடத்தி வருகின்றார்கள். வானொலி நேயர் மன்றங்களையும் உருவாக்கி மக்களின் ஒன்றிப்புக்கும், பொதுமக்களின் திறமையை வெளிக்கொணருவதற்கும் மற்றும் ஈடுபாட்டினை வளர்க்கவும் முயற்சி செய்கிறார்கள். மக்களிடையே பொது அறிவை வளர்க்கும் நோக்கத்துடனும், தமிழீழத்தைப் பற்றி அனைவரும் அறிந்து கொள்ளவும் பல பொது அறிவு விடயங்களை, தரவுகளை ஒலிபரப்புகிறார்கள். ஆங்கில அறிவை வளர்க்க, இயக்க சிந்தனைகளோடு கூடிய நல்ல நிகழ்ச்சிகளை புதுமையாக தயாரித்து வழங்கியதை நானே பலமுறை கேட்டு ரசித்துள்ளேன்.

'நிதர்சனம்' என்ற அமைப்பை உருவாக்கி செய்திபடங்கள், குறும் விவரண மற்றும் முழுநீழ திரைப்படங்களையும் உருவாக்கியுள்ளனர். இந்தியாவிலேயே புலிகளின் செய்தி திரைப்படங்களை 'ஒளிவீச்சு' என்ற பெயரில் பார்த்துள்ளேன். போரில் பெற்ற வெற்றிகளை, கடுமையான போர்க்களங்களை செய்திகளாக்கி, நேரில் படம் பிடித்து காண்பித்துள்ளார்கள். விடுதலைப் புலிகளின் குறும் படங்கள், செய்தி படங்கள் உலக ஊடக அரங்கில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. ஊடக நிபுணர்கள் வியக்கும் வண்ணம் தரமான போர்த் திரைப்படங்களை தயாரிக்கின்றனர். கடலோரக் காற்று, உப்பில் உறைந்த உதிரங்கள் என்ற திரைப்படங்களைப் பார்த்துள்ளேன். தரம், புதுமை, ஆழமான கருத்து செறிவுள்ள தயாரிப்புகளை கொண்டுவர பணம் மட்டுமல்ல அர்ப்பணிப்பும், தியாகமும், கடின உழைப்பும் முக்கியமானவைகள். அதுவே விடுதலைப் புலிகளின் வளர்ச்சி.

விடுதலைப்புலிகளின் மேற்கத்திய இசைபாண்டு வாத்திய குழுவினரையும் நேரில் கண்டு வியந்து போனேன். நேர்த்தியான ஆடைகள், புதிய இசைக்கருவிகள், ஒய்யாரமான நடையில், காதுக்கு இனிமையான இசையை இசைத்தவர்கள் அனைவருமே பெண் போராளிகள். இந்தியாவில் குடியரசு நாளில் தலைநகர் புது தில்லியில் இராணுவ அணிவகுப்பு போன்றதாகவே விடுதலைப் புலிகளும் செயல்படுவதை பார்த்த போது, இவர்களையா உலகம் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், கொரில்லாக்கள்



என்று முத்திரை குத்துகின்றனர் என்று நொந்து போனேன். உண்மையை, யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள விரும்பாத பொல்லாத உலகம் இது.

மேற்கூறப்பட்ட இவ்வனைத்து விடயங்களும் வெறும் பொருள் பலத்தாலும், ஆட்பலத்தாலும் சாதிக்கக் கூடியவையல்ல. ஏனெனில் விடுதலைப் புலிகளின் இயக்கத்தை விட பல நூற்றாண்டுகள் செயல்படும் சில நிறுவனங்கள் போதுமான பொருளையும், ஆட்களையும் கொண்டிருந்த போதும் சாதிக்காத சாதனைகளை இவர்கள் சாதிக்கின்றார்கள் அல்லது வேகமாக வளர்ந்துள்ளார்கள் என்றால் அது கடின உழைப்பாலும், அர்ப்பணத்தாலும் மட்டுமே. கூலிக்காகவும், சுயநல தேவைகளுக்காகவும் உழைப்பவர்களைக் கொண்டு எந்த நிறுவனமும், இயக்கமும் வளராது என்பது இங்கு நான் கற்ற பாடம்.

இயக்கத்தின் வளர்ச்சியின் வெளிப்புற காரணங்களாக நான் கருதுவது பல. முதலாவது மக்கள் சார்பு, அதாவது போராட்டத்தின் கரு மக்கள் விடுதலை. இதுவே பிற அரசியல் கட்சிகளிடமிருந்து இயக்கத்தை பிரித்து காண்பிப்பது. இதனோடு தொடர்புடைய மற்றொரு காரணம். விடுதலைப்புலிகள் மக்களோடு, மக்களாக வாழ்வது, மாவோவின் கூற்றில் 'மக்கள் கடலில் மீனாக' போராளிகள் இயங்குவது. ஆகவேதான் போராளிகளை தனித்து அடையாளம் காணமுடியாது, பொது மக்களையும் கொரில்லாக்கள் என்று சிங்களை இராணுவம் பலமுறை தாக்கியுள்ளது. மக்களும், இயக்கமும் வேறு வேறு என்றில்லாமல் இரண்டும் ஒன்று என்று இயங்குவது இயக்கத்தின் வெற்றி எனலாம்.

மூன்றாவதாக விசுவாசமுள்ள, அர்ப்பணமுள்ள, கடின உழைப்புக்கு தயாரான உறுப்பினர்கள். எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற மனநிலை. பள்ளிப்படிப்பை பாதியில் துறந்து வந்தவர்கள் அந்த அமைதி சூழலில் கணினி, ஆங்கிலம் என்று கற்றுக்கொண்டு இன்னும் திறம்பட செயலாற்ற முனைகிறார்கள். இறுதியாக தலைமையின் மேல் அசைக்க முடியாத, உறுதியான நம்பிக்கை. தமது பலவீனத்தையோ, பிற உறுப்பினர்களது அல்லது இயக்கத்தின் பலவீனத்தையோ வெளிப்படுத்தாது, மறைத்து வளர்ச்சிக்கு உதவுவது. இயக்கத்தின் அடிப்படையான தகவல்கள் இரகசியமாக காப்பாற்றப்படல். இதுவும் ஒரு இயக்கத்தின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் மிகவும் அடிப்படையாக அமைகிறது.



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

## குடும்பம்

ஒரு சமூகத்தின் அடிப்படையான அலகு குடும்பம்தானே. இன்றைய தமிழீழத்தில் குடும்பங்கள் பலவும் சிதைந்தே காணப்படுகின்றன. போரினால் ஏற்பட்ட இழப்புக்களில் தலையாயது உயிரிழப்பு. பல குடும்பங்கள் குடும்ப தலைவரையோ, குடும்ப உறுப்பினர்களையோ இழந்து துன்பப்படுகிறார்கள். வில்பத்து தேசிய பூங்கா ஊடாக இலங்கை இராணுவம் பெருமளவில் முள்ளிக்குளம் கிராமத்தை கைப்பற்ற முனைந்த வேளை வெறும் ஏழு, எட்டு போராளிகள் மட்டும் அவர்களை ஊருக்குள் வரவிடாமல் தடுத்து வைத்திருந்தனர். இரண்டு நாட்களாக தங்களது முயற்சி தோற்ற வேளையில் இலங்கை இராணுவம் மேலதிக இராணுவத்தினரைக் கொண்டு வந்து முள்ளிக்குளம் கிராமத்தில் நுழைந்த போது ஊரை சூரையாடினார்கள். வீடுகளுக்கு தீ வைத்தனர். கையில் அகப்பட்டவர்களை கொலையும் செய்தனர். இது நடந்தது அக்டோபர் 1990ம் ஆண்டு.

நன்றாக வசதிகளோடு வாழ்ந்த தமிழ் மக்கள் தங்கள் வீடுகளையும், பாவித்த உடுப்பு, பாத்திரங்கள், நகைகள் எல்லாவற்றையும் அப்படியே விட்டு விட்டு தங்கள் குழந்தைகளை மாத்திரம் கூட்டிக்கொண்டு காட்டில் புகுந்து அருகிலுள்ள முருங்கன் கிராமத்திற்கு ஓடிச் சென்றனர். இரவோடு இரவாக காட்டு விலங்குகளுக்குக் கூடப் பயப்படாமல் மனித விலங்குகளைக் கண்டு ஓடினர். நூறு அடிக்கு முன்பாக தங்களது வீடு தீக்கிரையாக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டே, ராஜன் இரண்டு மாதமே ஆன பச்சிளம் இரட்டைக் குழந்தைகளை கையில் வைத்துக்கொண்டு ஒரு புதரில் மறைந்து கொண்டார். தாய்ப்பாலுக்காக வீறிட்டு அழுது கொண்டிருந்த அக்குழந்தைகள் பசியால் அவரின் கைகளிலேயே இறந்துவிட்டன.

குருவிக் கூட்டைக் கலைப்பது போல், தமிழர் தம் வாழ்வையே அழித்தனர் கயவர்கள். பல குடும்பங்கள் இடம் பெயர்ந்து பிரிந்து வாழ்கிறார்கள். இதனால் குடும்ப சூழ்நிலை ஒரு பெரும் அவலத்தில் இருப்பதாக உணர்கிறேன். இதனையே போதைப் பொருள் பாவனை பற்றிய கருத்துக்களிலும் தெரிவித்துள்ளேன். குடும்பங்களில் மற்றொரு துன்பமான நிகழ்வு காணாமல் போனோர் பற்றிய எண்ணமே. போர்க்கால



சூழ்நிலையில் சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள், இளம் பெண்கள் திரும்பி வரவேயில்லை. அவர்களின் உண்மையான நிலையென்ன என்பதைப் பற்றி தெளிவான எண்ணமில்லாமல் பல குடும்பங்கள் பெரும் மனத்துயரத்திற்கு உள்ளாகியிருப்பதை நான் நேரில் உணர்ந்திருக்கிறேன். யாழ்ப்பாணம் செம்மணி, அரியாலை மனித புதை குழிகள் இந்த அவலத்தை உலகிற்கு உணர்த்துகிறது.

தமிழீழத்தில் பொதுவாக தாய்வழி சமூகம் செயல்படுவதை உணர்கிறேன். வீட்டின், குடும்பத்தின் நிர்வாக பொறுப்போடு முடிவு செய்யும் நபராகவும் குடும்ப தலைவி செயல்படுவதை பொதுவாக பலகுடும்பங்களில் காணமுடியும். தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட சமூகத்திலும் இந்நிலை உண்டு என்பதை நான் நன்கறிவேன். பாரம்பரியமாக தமிழ் சமூகமே தாய்வழி சமூகம் என்பதையும் நாம் நன்கறிவோம். மாறுபட்ட மேற்கத்திய நாகரீகத்தின் தாக்கம் மற்றும் தனியுடமை போன்ற கருத்தாக்கங்களின் பாதிப்பே ஆணாதிக்கம். தமிழீழத்தில் இத்தகைய ஆணாதிக்க போக்கு சற்று குறைவாகவே இருப்பதை பார்க்கிறேன். இது பாராட்டி வளர்க்கப்பட வேண்டிய ஒரு விடயமாகவும் கருதுகிறேன். பெண்களின் கல்வி இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறைந்த சனத்தொகையுடைய ஒரு நிலப்பரப்பு என்பதால் எல்லார்க்கும் கல்வி என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தமிழ் குடும்பத்திலும் அவர்களின் சொந்த கதையைக் கேட்டு எழுதினால் இந்நூல் நூற்றுக்கணக்கான பாகங்களாக வெளியிடவரும். போரின் நேரடி பாதிப்பு, இறப்பு, இழப்பு, இடப்பெயர்வு என்று பல கோணங்களில் பல கதைகளை உள்ளடக்கியதாக இருக்கும். வார்த்தைகளினால் விவரிக்க முடியாத துன்பங்களை ஒவ்வொரு குடும்பமும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது. யுத்த நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு ஒன்றரை வருடத்திற்கு மேலாகியும் இன்னும் மன்னார் மாவட்டத்தில் நீலமடு, களிமோட்டை, பேசாலை போன்ற இடங்களிலும், இன்னும் பிற மாவட்டங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகள் முகாம்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் சொந்த இடங்கள் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருப்பதும், மிதிவெடி அகற்றப்படாமல் இருப்பதாலும் மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்பாமல் அகதி வாழ்க்கையைத் தொடர வேண்டியுள்ளது.



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

யுத்தத்தினால் பெரும்பாலும் ஆண்கள் குறிப்பாக இளைஞர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 140 குடும்பம் உள்ள முள்ளிக்குளத்தில் 18 விதவைகள் தங்கள் குழந்தைகளோடு வாழ்கிறார்கள். மன்னார் மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான விதவைகள் உள்ளனர். அது போன்றே தமிழீழம் முழுவதும் ஆயிரக்கணக்கான விதவைகள், அதுவும் இளம் விதவைகள் தங்கள் குழந்தைகளோடு துன்பப்படுகிறார்கள். பெரும்பாலும் இவ்விதவைகள் தாங்களாகவே உழைத்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதனால் பிள்ளைகளின் வளர்ப்பு, படிப்பு, ஒழுக்கம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

சமீபத்தில் நான் வாசித்த ஒரு பத்திரிகைச் செய்தி என்னை மிகவும் வருத்தத்தில் ஆழ்த்தியது. “வன்னிப் பகுதியில் 12-15 வயது இளம்தாய்மார் 12,000 பேர்!” என்ற தலைப்பிலான செய்தி அது. வடக்கு, கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற போர் காரணமாக இளவயது தாய்மார்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்திருப்பதாக புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வருகிறது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி வன்னிப் பகுதியில் 12-15 வயதுக்கு உட்பட்ட சுமார் 12,000 தாய்மார்கள் உள்ளனர் என்ற அதிர்ச்சியான தகவல் வெளியாகி உள்ளது. வவுனியா, மன்னார் மாவட்ட அகதிமுகாம்களிலேயே இவர்களில் அதிகமானோர் உள்ளனர்.


**வன்னிப்பகுதியில் 12–15 வயது இளம்தாய்மார் 12,000 பேர்!**

வவுனியா, ஆக. 02

வடக்கு, கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற போர் காரணமாக இளவயது தாய்மாரின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்திருப்பதாக புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவருகிறது.

வடக்கு, கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி வன்னிப் பகுதியில் 12-15 வயதுக்கு உட்பட்ட சுமார் 12,000 தாய்மார்கள் உள்ளனர் என்ற அதிர்ச்சியான தகவல் வெளியாகி உள்ளது. வவுனியா, மன்னார் மாவட்ட அகதி முகாம்களிலேயே இவர்களில் அதிகமானோர் உள்ளனர்.

போர் அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களைத் தங்க வைக்கவென அரசினால் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களிலேயே அதிக எண்ணிக்கையான இளம் தாய்மார்கள் உள்ளனர் என்று அறியப்பட்டுள்ளது. (ர-312)

நன்றி: சுடர்ஒளி, ஆகஸ்டு *03, 2003*



யுத்தத்தினால் விளைந்த மற்றொரு பாதிப்பு - இளைஞர்கள், இளம்பெண்கள் உளவியல் ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டு வன்முறை கலாச்சாரத்தை உள்வாங்கியுள்ளனர். அற்ப காரியங்களுக்காக பிறரோடு சண்டையிடுவது, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின்மை, பழிக்குப்பழி வாங்குதல். பிறரிடம் நம்பிக்கையின்மை. பெற்றோர், ஆசிரியரை மதியாமல், கீழ்ப்படியாமல் தான்தோன்றித் தனமாக திரிதல், எதிர் பாலினரை பகிடிவதைக்கு உள்ளாக்குதல், தெரு சந்திகளிலும், வீடுகளிலும் கூடி அரட்டை அடித்தல் என்று பல்வேறு வகையில் பிரச்சனை ஏற்படுத்துபவர்களாக, பிரச்சனைக்குரியவர்களாக இளையோர் வாழ்கின்றனர். யுத்த காலத்தில் காணப்பட்ட அடக்குமுறையால், அமுக்கப்பட்ட மன உணர்வுகளை இன்று சமாதான காலத்தில் தவறான முறைகளில் வெளிக்கொணருகின்றனர். வேலைவாய்ப்புகள் பல இருந்தும் வேலைக்கு செல்லாமல் நண்பர்களோடு திரிதல் பொதுவாக இளைஞர்களிடையே காணப்படுகிறது.

இதனால் அவர்களுடைய குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பெரிதும் பாதிக்கப்படுவதோடு பல்வேறு தீய பழக்கங்களில் ஈடுபடும் வாய்ப்பும் அதிகரிக்கிறது. பெற்றோர்களும் தங்களது குழந்தைகளை குறிப்பாக இளையோரை புரிந்து கொள்ளாமல் அவர்களை வெறுத்து ஒதுக்குகிறார்கள் இது இளையோரின் நிலையை மேலும் மோசமடையச் செய்கிறது என்பதை பெற்றோர் உணர்வதில்லை. ஆசிரியர்கள், குருக்கள் இவர்களைக் கண்டால் தமது இளையோரைப் பற்றி குறைகூறி, “இவர் சரியான குழப்படிக்காரர், இவருக்காக செபியுங்கள், இவரை பேசி திருத்துங்கள்” என்று பெற்றோர் கூறுவது இளையோரை வெறுப்படைய செய்கிறது. கடந்தகால துன்ப வாழ்வினை மனதில் கொண்டு இளைஞர்கள் நல்ல ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க முன்வர வேண்டும். எத்தனையோ இளைஞர்கள், இளம்பெண்கள் தங்கள் உயிரைக் கொடுத்து போராடி பெற்ற வாழ்வினை வளமானதாக்க முன்வரவேண்டும். கல்வி பயிலும் இளையோர் கல்வியில் மட்டுமே கவனத்தை செலுத்தி சிறப்பாக படித்து பல்வேறு துறைகளிலும் முன்னணியில் வரவேண்டும். அது அவர்களுடைய வரலாற்று கடமையாக உள்ளது என்பதை மனதில் கொள்ள வேண்டும். வீட்டில் பேச்சு கிடைத்தால் சில இளைஞர்கள் தாங்கள் இயக்கத்தில் சேரப்போவதாக பெற்றோரை மிரட்டுவார்கள். தனது மகன் துன்பப்படக்கூடாது என்று நினைக்கும் பெற்றோருக்கு அது ஒரு அதிர்ச்சியே. ஆனால் வீட்டில் குழப்புவோரை சில காலம் இயக்கத்திற்கு அனுப்புவது நாட்டுக்கும் நல்லது, அவர்களுக்கும், குடும்பத்திற்கும் நல்லது



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

## கல்வி

போரினால் தமிழீழத்தில் கல்வி நிலை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. கல்வியில் தராதரத்தைக் கொண்டுவந்து தமிழ் மக்களை கல்வியில் மேம்படாமல் செய்ததன் விளைவே தமிழர்கள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டத்தில் குதித்தனர். யுத்தம் துவங்கிய நாளிலிருந்து பாடசாலைகள் இடிந்து போயின. ஆசிரியர்களும், மாணவர்களும் இடம்பெயர்ந்து போயினர். ஆகவே கடந்த இருபத்தைந்து ஆண்டளவாக கல்விநிலை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது. சமாதான சூழல் உருவாகி இரண்டு வருடங்கள் ஆகின்ற இன்றைய நிலையிலும் இன்னும் பல பாடசாலைகள் இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளது. பல பாடசாலைகள் முற்றிலுமாக தரைமட்டமாகி உள்ளது. மரத்துக்கடியிலேயே பல வகுப்புகள் நடைபெறுவதை நேரில் காண்கிறேன். முள்ளிக்குளம் பாடசாலை கோயில் வராந்தாவில் இன்றும் நடைபெறுகிறது. போதுமான ஆசிரியர்கள் இல்லாத நிலையும் இன்று காணப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறக்குறைய ஆயிரம் ஆசிரியர்கள் பதவி நிரப்பப்படாமல் உள்ளது. சில தொண்டு நிறுவனங்கள் தாங்களாகவே சில தொண்டர் ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் கல்வியை உறுதிப்படுத்துவது பாராட்டுக்குரியது. வசதிகள் குறைவான சூழ்நிலையில், மிகவும் குறைவான சம்பளத்தை பெற்று உன்னதமான ஆசிரியப்பணியை நேர்த்தியோடு தொண்டர் ஆசிரியர்கள் செய்து வருகிறார்கள். அவர்களுடைய பணியை தமிழ் சமூகம் நன்றியோடு நினைவுகூரும்.

இருப்பினும் ஆசிரிய சமூகத்தில் சிலர் சுயநலத்தோடு செயல்படுவதையும் அறியமுடிகிறது. பாடசாலை வகுப்பறையில் சரியான முறையில் வகுப்பு எடுக்காமல், மாணவர்களின் சந்தேகங்களைத் தீர்க்காமல் மாணவர்களை தனி வகுப்புக்கு (டியூசன்) வருமாறு நிர்ப்பந்திக்கிறார்கள். ஐந்தாம் ஆண்டு தொடக்கம் எல்லா மாணவரும் இத்தகைய தனிவகுப்புக்கு மாலை நேரங்களில் கூட்டமாக செல்வதை எல்லா நகரங்களிலும் காணக்கூடியதாக இருக்கிறது. இந்நிலை பெற்றோர்களின் பொருளாதார சுமையைக் கூட்டி சில ஆசிரியர்கள் பெரும்பணம் சம்பாதிக்க வழிவகுக்கிறது. வகுப்பறையிலேயே மாணவர்களுக்கு தனிகவனம் செலுத்தி பயிற்றுவித்து, மாணவர்கள் வீடுகளில் தாங்களாகவே படிக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.



## சாதி

சாதியின் கொடுமையை, தீண்டாமையின் கோரப்பிடியை உணர்ந்து வாழ்ந்தவன் நான். கடந்த ஐந்து ஆண்டுகால குருத்துவ பணிவாழ்வில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே வாழ்ந்து அனுபவித்த சாதியை, ஈழத்தமிழர்களிடேயும் கண்டபோது மனம் வெறுத்துப் போனேன். ஆனால் சற்று ஆறுதலான விடயம் தீண்டாமை என்னும் கொடிய அரக்கனை இந்தியாவில் மட்டுமே காணலாம். இருப்பினும் சாதிய ஏற்றத்தாழ்வுகளும் வேறுபாடுகளும் இங்கும் காணக்கூடியதாக உள்ளது.

சில ஊர்களின் பெயர்களில் சாதி அடையாளம் காணப்படுவது சாதியத்தின் தொன்மையைக் குறிக்கும் என்று நினைக்கிறேன். உடையார்கட்டு, முதலியார்குளம், பறையனாலங்குளம் போன்ற ஊர்கள் தமிழீழத்தில் உண்டு. பெரும்பாலும் இரண்டு சாதிகள் இங்குள்ளன. ஒன்று பெருமளவில் ஆதிக்கம் செலுத்தும் வேளாளர் சாதி. இந்துக்களிலும், கிறிஸ்தவர்களிலும் இவ்வகை சாதியினர் பெரும்பான்மையில் உள்ளனர். மற்றொன்று பரதவர். இந்தியாவிலிருந்து மீன் பிடி தொழிலுக்காக இலங்கையில் குடியேறியவர்களாக கருதப்படுபவர்கள். மன்னார் மாவட்டத்தில் பேசாலை, தாழ்வுபாடு, வங்காலை, அரிப்பு, முள்ளிக்குளம் போன்ற கடலோர கிராமங்களில் பரதவர்கள் அதிகமாக வாழ்வதைக் காணலாம்.

இவர்களுடைய வாழ்க்கைமுறை, உணவு, சமய வாழ்வு அனைத்துமே தமிழ்நாட்டில் பரதவர்கள் அதிகம் வாழும் தூத்துக்குடி, நாகர்கோவில் போன்ற இடங்களில் காணக்கூடியதாக உள்ளது. மன்னார் மாவட்டத்திலுள்ள மடு தேவாலயத்தின் மேல் கூரையை தூத்துக்குடியைச் சேர்ந்த திரு. குருஸ் மோத்தா என்னும் பரதவருடைய குழந்தைகள் நிதியுதவி செய்து அமைத்துக் கொடுத்துள்ளனர். தொழில் சார்ந்த வாணிபம், வர்த்தகம் மட்டுமல்லாமல் பெண் கொடுத்து பெண் எடுக்கும் குடும்ப உறவும் இந்திய தமிழர்களுக்கும், ஈழத்தமிழர்களுக்கும் இருந்திருக்கிறது.

இங்கும் தாழ்த்தப்பட்ட சாதியினர் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். தாழ்த்தப்பட்ட சாதியில் பலரும் பொருளாதார முன்னேற்றம் கண்டு கல்வியில் மேன்மையடைந்து சாதிய ஒடுக்குமுறையிலிருந்து



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

வெளியேறிவிட்டனர். சிலர் இன்னும் தங்களது குலத் தொழிலை செய்து சாதியின் பிடிக்குள் சிக்கி தவிக்கின்றனர்.

"பிறப்பினால் ஒரு மனிதரை ஒரு சாதிக்குள் தள்ளிவிடும் சமூதாய அமைப்பானது காட்டுமிராண்டி தனமானது, ஒடுக்குமுறை நிறைந்தது. யாழ்ப்பாண சமூகத்தின் பொருளாதார சமூகவாழ்வில் இது பின்னிப் பிணைத்ததாயினும், சாதி அமைப்பானது மனித உழைப்புக்குக் கண்ணியமும், மரியாதையும் வழங்கும் நவீன சிந்தனைக்கு முரணானது....கடுமையாக உழைத்து, தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளத்தக்கதும், வளம் மிக்கதும், சமூக உற்பத்தி திறன் கொண்டதுமான ஒரு சமூகத்தை தாழ்ந்தது என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது" என்று வெள்ளைக்காரத் தமிழ்ப்பெண் அடேல் பாலசிங்கம் *சுதந்திர வேட்கை* நூலில் வினவுகிறார்.

தமிழ்நாட்டைப் போன்று சாதியமைப்பு ஈழத்தில் இறுக்கமாக இல்லாது போனதற்கான காரணங்கள் பல இருக்கலாம். அவற்றில் பிரதானமாக நான் கருதும் விடயம் போர். போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் எல்லா மக்களும் எல்லா இடங்களிலும் கூடிவாழ வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக மடுமாதா தேவாலயத்தைச் சுற்றியிருந்த அகதிகள் முகாமில் பல இடங்களிலுமிருந்து வந்த பலதரப்பட்ட மக்கள் ஒன்றுகூடி வாழ்ந்துள்ளார்கள். கற்றவன், கல்லாதவன், உயர்சாதி, தாழ்ந்த சாதி, பணக்காரன், ஏழை என்ற வித்தியாசம் இல்லாமல், ஊர், நகரம், கிராமம் என்று இல்லாமல் எல்லோரும் ஓரிடத்தில் தங்க நேரிட்டுள்ளது. அதுபோலவே புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பவர்கள் மத்தியிலும் பெரிதாக இந்த வித்தியாசங்களை காணமுடியாமல் போயிற்று. போரினால் ஏற்பட்ட ஒரு மிகப்பெரிய நன்மை இதுவென நான் நம்புகிறேன். தமிழர்கள் என்று அனைவரும் ஒன்றுகூடி வந்தமையினால் தங்களிடையே சாதிய உணர்வை மறந்துவிட்டனர்.

இரண்டாவது விடயம், இங்கு காதல் திருமணங்கள் வரவேற்கப்படுகின்றன. இளைஞர்கள், இளம்பெண்கள் ஒருவரையொருவர் அறிந்து, திருமணம் செய்து கொள்வதால் ஓரளவு சாதியின் இறுக்கம் இங்கு தகர்ந்துள்ளதாக எண்ணுகிறேன். 1994ம் ஆண்டு மே மாதம் தமிழ் நாட்டில் திருப்பத்தூரில் நாங்கள் நடத்திய இளையோர் மாநாட்டில் உரையாற்றிய திரு.தியாகு அவர்கள் இதே கருத்தை முன்வைத்தார்கள் என்பதை இப்போது நினைவுகூருகிறேன்.



மூன்றாவதாக கல்வியும் சாதியின் இறுக்கத்தை பெருமளவில் தகர்த்துள்ளது. கல்வி கற்று நல்ல வேலைவாய்ப்பினை பெற்று பொருளாதார ரீதியில் மேன்மையடைந்த மக்கள், சாதியின் கொடுமையை உணர்ந்து அதை விலக்கியுள்ளனர். பிறப்பால் உயர்வு தாழ்வு என்பதை பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ள மாட்டான். மனிதர்களாக பிறந்த அனைவரும் சமம் என்ற கொள்கையே அனைவருக்கும் பொதுவானது.

இருப்பினும் சாதிரீதியாக ஈழத்தமிழர்களிடையேயும் சில பிரச்சனைகள் எழுந்துள்ளன. இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட அருட்பணி. மேரி பஸ்ரியன் அவர்களின் வாழ்க்கையை *தீபங்கள் எரிகின்றன* என்ற நூலாக கொணர்ந்த திரு. நாவண்ணன் அவர்கள், அப்புத்தகத்தில் சாதி பிரச்சனையைக் குறிப்பிட்டுள்ளார்.

"(யாழ்ப்பாணம்) இளவாலை புனித அன்னம்மாள் கோவிற் பங்கைச் சேர்ந்தவர் (அருட்பணி. மேரி பஸ்ரியன்) என்கிறபோது சமூகப் பிரச்சனை காரணமாகத் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் (1971 – 1977) இன்னுமொரு சமூகத்துக்கு ஆலயத்தில் சமத்துவம் அளிக்க மாட்டோம் என்ற பிடிவாதத்தில் ஆலயக் கதவுகளைப் பூட்டிவைத்துச் சாதனை புரிந்தவர்களின் உயர்வகுப்பைச் சார்ந்தவர்". இந்நிகழ்வு அருட்பணி. பஸ்ரியன் அவர்களை வெகுவாக பாதித்த ஒரு விடயம் என்பதனையும் திரு. நாவண்ணன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்நிகழ்வைப் பற்றி அறிந்தபோது நான் தமிழ்நாட்டில் பணிசெய்த திண்டுக்கல் பெரிய கோயிலும் ஏறக்குறைய ஆறு மாதங்கள் (1995ம் ஆண்டு) சாதி பிரச்சனையால் மூடப்பட்டு கிடந்ததை நினைவு கூருகிறேன். தமிழ்நாட்டில் வேறு பல மாவட்டங்களிலும் இத்தகைய நிகழ்வுகள் நடந்துள்ளன என்பது வேதனைக்குரியது.

மேலும் நான் யாழ்ப்பாணத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது பருத்தித்துறையில் அருகருகே இரண்டு கோயில்கள் இருவேறு சமூகத்தால் கட்டப்பட்டிருப்பதையும் பார்த்தேன். அதே போன்றதொரு நிலை மன்னார் மறைமாவட்டத்திலும் இருப்பதாக உணர்கிறேன். இந்நிகழ்வை நான் தூத்துக்குடி மறைமாவட்டம், மணப்பாடு என்ற பங்கோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். எனதருமை தந்தை கலாநிதி தே. ஜாண் அவர்கள்



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

*தென்தமிழகத்தில் கிறிஸ்தவம்* என்ற தனது ஆராய்ச்சி நூலில் விரிவாக இதை ஆராய்ந்துள்ளார். இதில் இன்னும் வேதனையான விடயம் என்னவெனில் ஒரு சமூகத்தைச் சார்ந்த மக்கள் தங்களிடையே பட்டம் என்ற ஒரு பிரிவினை ஏற்படுத்தி அதிலும் ஏற்றத்தாழ்வு பார்க்கின்றனர். குறிப்பாக தமிழ்நாட்டிலும், இங்கும் காணப்படுகின்ற பரதவர் சாதியில் மட்டும் 63 உட்சாதி பிரிவுகள் உள்ளதாக அறிகிறோம். (கலாநிதி தே. ஜாண், *தென்தமிழகத்தில் கிறிஸ்தவம்*, பக். 275) முள்ளிக்குளம் கிராமம் முழுவதும் ஒரே சாதி மக்கள் என்றாலும் அவர்களிடையே பட்டம் என்ற எட்டு பிரிவினையுண்டு. ஆகவேதான் காலம் காலமாக அச்சிறு கிராம மக்களிடையே உட்பகை இருந்து வந்துள்ளது. இடம்பெயர்ந்து 13 ஆண்டுகள் பல இடங்களிலும் வாழ்ந்து இன்று திரும்பி வந்துள்ள அவர்களிடையே இப்பிரிவினை, உட்பகை மாறாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியதாக உள்ளது.

ஒரு நாள் நான் இங்கு ஆற்றிய ஞாயிறு திருப்பலியில் மறையுரையில் இதைப்பற்றி நான் அவர்களிடம் பகிர்ந்து கொண்ட கருத்து என்னவெனில், முள்ளிக்குளத்தில் ஒரே இனம், ஒரே மொழி, ஒரே மதம், ஒரே சாதி அமைப்பில் வாழும் 140 குடும்பங்கள் மத்தியில் பிரிவினையும், பகையும் இருந்தால், இரண்டு மொழி, மூன்று இனங்கள், நான்கு மதங்கள், பல சாதி அமைப்பில் வாழும் கோடிக்கணக்கான இலங்கை மக்களிடையே பரஸ்பரம் நம்பிக்கை, ஒத்துழைப்பு, புரிந்துணர்வு, சமாதானம் ஏற்படுமா என்பது மிகப்பெரிய கேள்வி. ஒரு நாள் நிச்சயம் தமிழீழம் மலரும். அந்த தமிழீழத்திலும் தமிழர்கள் பிரிந்து தமக்குள்ளே பகைமையோடுதான் வாழ்வார்களா?

“இனி உங்களிடையே யூதர் என்றும், கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை” (கலா 3:28) என்று முழங்கப்பட்ட திருச்சபையில் பிறப்பால், சமூக அந்தஸ்து ஏற்படுத்தி, பிளவுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் உருவாக்கி, கிறிஸ்தவராக சான்று வாழ்க்கை வாழ்வது எப்படி? மேற்சொல்லப்பட்ட கருத்துக்கள் யாருடைய மனத்தையும் புண்படுத்த அல்ல, மாறாக போராடி நாம் பெறும் சுதந்திர வாழ்வில் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையோடும், சமாதானத்துடனும் வாழ வழிவகுக்கப்பட வேண்டும் என்பதே என் நல்ல எண்ணம். சாதியம் ஒழிய வேண்டும். மனித மாண்பும், சமத்துவமும் மலர வேண்டும்.



## பண்பாடு

கல் தோன்றி மண் தோன்றா காலத்து மூத்த குடியான தமிழரின் பண்பாடு மிகவும் பழமையானது. பிற நாகரீகங்கள் போற்றும் அளவு சிறப்பு வாய்ந்தது என்றும் கூறலாம். தமிழீழத்தில் காணப்படும் பண்பாடு தமிழ்நாட்டைவிட இன்னும் தூய்மையான நிலையில் இருப்பதாக உணர்கிறேன். பிற கலாச்சார தாக்கம் இங்கு வெகுகுறைவாகவே உள்ளது. பண்பாட்டின் தூய்மையைக் காப்பாற்றி வந்துள்ள ஈழத்தமிழர்கள் போற்றுதலுக்குரியவர்களே. இருப்பினும் தமிழ்நாட்டின் தாக்கம் இங்கு அதிகமாகவே இருக்கிறது என்பதையும் உணரலாம். பண்பாட்டு ரீதியாக என் மனம் கவர்ந்த அல்லது பாதித்த சில விடயங்களை காண்போம்.

## மொழி

ஈழத்தமிழர்களின் தமிழ் மொழி தூய்மையானதாக காணப்படுகிறது. ஆங்கிலமே கலவாமல் தூய, நல்ல தமிழில் இவர்கள் உரையாடுவது தமிழ் பற்றுள்ள எவர் மனதையும் எளிதில் கவரும். ஒரு நாள் மன்னாரில் சில நண்பர்களுடன் சன் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்வை பார்த்துக் கொண்டிருந்தபோது, அந்நிகழ்வை தொகுத்து வழங்கிய பெண் ஒவ்வொரு அடுத்த வார்த்தைக்கும் ஆங்கிலம் பாவித்ததை எண்ணிக் கொண்டிருந்தோம். அவர்கள் பேசியது தமிழா அல்லது ஆங்கிலமா என்று கூட தெரியால் போயிற்று. தமிழ்நாட்டில் அதுவே நாகரீகமாக மாறிற்று. தன்மான தமிழின தலைவர்கள் என்று தங்களைத் தானே அழைத்துக்கொள்பவர்கள் இதை கண்டுகொள்வதாக இல்லையே.

இருப்பினும் மெல்ல பிறமொழிக் கலவையை இங்கும் காணலாம். பொலிஸ், கோட்ஸ்(court), முஸ்பாத்தி என்று ஈழத்தமிழர்களும் கதைக்க துவங்கினால் தமிழ் இனி மெல்ல சாகும். கிறிஸ்தவர்கள் தங்களது சமய குருக்களை அல்லது துறவிகளைக் காணும் போது “காட் ப்ளஸ் யூ” என்று ஆங்கிலத்தில் வாழ்த்துவது இங்கு பரவலாக காணப்படுகிறது. என்னை வாழ்த்திய போதெல்லாம் நான் மறுமொழியாக வணக்கம் என்று வாழ்த்தியதும் சிலரின் நெற்றிபுருவம் சுருங்குவதைக் கண்டிருக்கிறேன். புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான வன்னி பிரதேசத்தில் மொழி தூய்மை சிறப்பாக பாதுகாக்கப்படுகிறது. எல்லா வர்த்தக நிறுவனங்களிலும்



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

அழகிய தமிழ்ப்பெயர்களைக் காணலாம். ஆங்கிலத்தில் பேக்கரி என்பதனை வெதுப்பகம் என்றும் ஐஸ்கிரீமை, குளிரூற்று என்றும் அழைக்கிறார்கள். மொழியில் மற்றொரு சிறப்பம்சம் மரியாதை கலந்த பேச்சு இங்குண்டு. மிகச் சிறியவர்களையும் பார்த்து வாங்க, போங்க, நீங்க என்று பேசுவது அந்த சின்ன மனங்களிலும் மரியாதைப் பண்பை வளர்ப்பதாக உள்ளது. மிகச் சாதாரணமாக வாடா, போடா, போடீ என்றெல்லாம் பேசி பழகின எனக்கு இது ஒரு நல்ல பாடமாக அமைந்தது. தமிழ்நாட்டில் சிறியவர்களை வாங்க, போங்க என்று கூறினால் ஏதோ நகைச்சுவை அல்லது நக்கல் என்று எடுத்துக்கொள்வார்கள்.

மரியாதை என்பது பேச்சில் மட்டுமல்ல, பிறரோடு பழகுவதிலும் இருப்பதை தெளிவாக காணலாம். பெரியவர்களிடம் எதைக்கொடுத்தாலும் இரண்டு கைகளால் கொடுப்பது, பெரிய வாகனங்களை ஓட்டி செல்பவர்கள் மிதிவண்டியில் செல்பவர்களை மதித்து, அவர்களுக்கும் இடம் தந்து செல்வது, சாலையில் பாதசாரிகளை கடக்க செய்து நிதானமாக போவதும் இயற்கையாகவே இங்கு பார்க்க கூடியதாக உள்ளது. தமிழ் நாட்டில் "மரியாதை" என்றால் என்ன விலையென்று கேட்கும் நிலையை எண்ணி வருந்துகின்றேன்.

## உடை

பெரும்பாலும் உடையில் பெரிய வித்தியாசங்கள் இல்லை என்றே கூறலாம். வேட்டி, சாரம், சட்டை என ஆண்களும், பாவாடை, சட்டை, சேலை என பெண்களும் அணிகிறார்கள். வேட்டியோ, சேலையையோ வயதானவர்களே அணிகிறார்கள். இளைய தலைமுறையினர் மேற்கத்திய உடைகளையே நாடுகின்றனர். கட்டையான பாவாடை மற்றும் மேலாடையையும், அரைகால்சட்டையையும் மேலை நாட்டினர் போல் இளையோர் உடுத்தி திரிவது பொதுவாகவே காணப்படுகிறது. ஆங்கில ஆதிக்கத்தின் எச்சங்கள் உடைகளிலும், நாகரீகத்திலும் இன்னும் காணப்படுகிறது. மேலும் வெளிநாட்டினரின் சுற்றுலா வருகை மற்றும் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை தமிழர்களின் வருகையும் இதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் சில இளையோர் சிங்களவர்களுக்கே உரிய உடையையும் நாகரீகமாக கருதி அணிகிறார்கள். சில நேரங்களில் நாகரீகத்திற்கும் அநாகரீகத்திற்கும் இடையே மிகச் சிறிய இடைவெளியே உள்ளது. மண்ணின் கலாசாரத்திற்கும், தட்பவெட்ப சூழலுக்கும் ஏற்ப நமது உடைகள் அமைய வேண்டும்.



## உணவு

இந்திய, தமிழக உணவுக்கும், இலங்கை தமிழர்களின் உணவுக்கும் இருக்கும் பாரிய வித்தியாசம் தேங்காய் பாவனையில்தான். கடந்த இரண்டு ஆண்டுகால கடுமையான கோடை கால வரட்சியில் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான தென்னைமரங்கள் காய்ந்து அழிந்ததை நேரில் கண்டேன். இங்கு தமிழீழத்தில் கேரளாவைப் போல திரும்பும் திசையெங்கும் நல்ல செழுமையான தென்னை மரங்கள். பெரும்பாலும் தமிழீழ மக்கள் இறைச்சி, மீன் என்று அசைவ உணவை விரும்புகிறார்கள். தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் அதிகம் பாவிக்கப்படுவதால் சுவை வித்தியாசமாக உள்ளது. அதிகமான காரம், உப்பையும் பயன்படுத்துகிறார்கள். ஆகவேதான் அவர்களின் செயல்பாடும் காரமாக உள்ளதோ? உணவில் விசேடமாக நான் சுவைத்தது ஒடியல் கூழ். இந்தியாவில் கூழ் என்றால் கம்பங்கூழ்தானே தெரியும். இங்கு எல்லா வகை கடல் உணவுகளையும் அதாவது மீன், இறால், நண்டு, கணவாய் போன்ற எல்லாவற்றுடனும் ஒடியல் (காய வைத்த பனங்கிழங்கு) மாவினைச் சேர்த்து கூழ் தயாரிக்கிறார்கள். பெரும்பாலும் வயதான பெண்களே சுவையான கூழினை தயாரிக்கிறார்கள்.

## திருமணம்

முக்கியமான சமூக நிகழ்வுகளில் ஒன்று திருமணம். உண்மையிலேயே அதன் முக்கியத்துவம் உணர்ந்து ஈழத்தமிழர்கள் திருமணங்களை சிறப்பாக கொண்டாடுகிறார்கள். தமிழீழ திருமணத்தை அடிப்படையாக கொண்டு விரிவான ஆராய்ச்சி செய்யலாம் என்று நினைக்கிறேன். ஏற்கனவே சொன்னது போல காதல் திருமணங்கள் பொதுவாக வரவேற்கப்படுகின்றன. இருப்பினும், சாதி, அந்தஸ்து, பொருளாதார ரீதியாக சில காதல்கள் நிராகரிக்கப்படுகின்றன. இதனால் ஓடிப்போய் கைபிடிப்பதும் காணப்படுகிறது. ஒரு நாள் இரவு மணி 9.30 இருக்கும். ஒரு இளம் ஜோடி கோயிலடிக்குள் வந்து "பங்கு பாதரை சந்திக்கணும்" என்று கேட்டார்கள். அப்போது "பங்கு பாதர் இப்போ இல்லை. நாளை காலையில் வாருங்களேன். ஏதேனும் அவசர அலுவல் உண்டா" என்று நான் கேட்டதற்கு, "இல்ல, நாங்க இப்பதான் வவுனியா போய் கைபிடிச்சு வாறோம். நாங்க காதலிச்சோம், ஆனா அவ வீட்டில ஏத்துக்கல, அவளுக்கு வேற மாப்பிள்ளை பார்த்தாங்க. அதனால



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

நாங்க தனியா ஓடிப்போய் ரெஜிஸ்தார் முன்ன கலியாணம் பண்ணிக்கிட்டோம். அதத்தான் பாதரிட்ட சொல்லிட்டு போகலாம்ன்னு" என்று இழுக்க, "நாளை காலையில் சந்திக்கலாம்" என்று நானும் அனுப்பிவிட்டேன்.

வெளிநாட்டு மாப்பிள்ளை பார்க்கும் எண்ணம் சிலருக்கு இங்குள்ளது. யுத்தத்தால் புலம் பெயர்ந்த தமது சொந்தங்கள் வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கு தமது பிள்ளைகளைக் கட்டிக்கொடுத்தால் குடும்ப பொருளாதாரம் உயரும் என்ற நம்பிக்கை சிலருக்கு உண்டு. இவ்வாறாக மாப்பிள்ளை, பெண் பார்த்து நிச்சயம் செய்த பிறகு அரசு பதிவாளர் முன்பாக திருமணத்தை பதிவு செய்கின்றனர். அதன்பிறகே கோயிலில் திருமணம் புனிதப்படுத்தப்படுகின்றது. மேலைநாட்டு பாணியில் உடுப்பு உடுத்தி, கேக் வகைகள் சகிதம் திருமணத்தை கொண்டாடுகின்றனர். அதோடு சில கிராமங்களில் கூத்து போன்று பாடல்கள் பாடி, நடனமாடி விருந்தினர்களோடு மகிழ்கிறார்கள். மூன்று நாள், ஏழாம் நாள் என்று திருமண கொண்டாட்டம் ஒருவார காலத்திற்கும் மேலாக நீடிக்கிறது. மிகவும் வறிய நிலையில் வாழ்பவர்கள் இதனால் மேலும் வறுமையை அடைகிறார்கள். பெண் வீட்டு சீதனப் பிரச்சனையால் சில திருமணங்கள் தள்ளிப் போடப்படுகின்றன என்பதும் தமிழ் சமூகத்தில் காணப்படும் ஒரு அவலம்.

## திருவிழாக்கள்

மனிதரின் உள்ளத்து ஆசைகளை, ஏக்கங்களை, நிறைவேறாத எண்ணங்களை, மகிழ்ச்சியை, அன்பை, நட்பை வெளிப்படுத்த திருவிழாக்கள் அவசியமாகிறது. எல்லா சமூகத்தினரும் சாதி, மதம், மொழி, இனம், நாடு, கல்வி, பொருளாதார பாகுபாடு ஏதுமின்றி ஏதேனும் திருவிழாக்களை கொண்டாடி மகிழ்கிறார்கள். பெரும்பணம் விரையம் செய்து வெறும் பகட்டுக்காக, ஆடம்பரத்திற்காக, சுய கௌரவத்திற்காக, தற்பெருமைக்காக திருவிழாக்களைக் கொண்டாடும்போது அவை தேவையற்றதாக, பொருளற்றதாக மாறிவிடுகின்றன. மேலும் கலாச்சார சீரழிவு செய்யும் வகையில் வேற்று கலாச்சார திருவிழாக்களைக் கொண்டாடுவதும் அர்த்தமற்றது. அவ்வகையில் திருவிழாக்கள் தேவைதானா? என்ற எண்ணமும் என்னில் எழுவதுண்டு. ஒருநேர கஞ்சிக்குக்கூட வழியில்லாத பாமர ஏழைகள் மத்தியில் பெரும்பணம் செலவு செய்து ஆடம்பரமாக, கேளிக்கைக்காக திருவிழாக்களை கொண்டாடுவதும், இலட்சக்கணக்கான பணம் செலவு செய்து பட்டாசு வெடித்து கரியாக்குவதும் அவசியம்தானா என்ற கேள்வியும் எழுவதுண்டு. இருப்பினும் மனித வாழ்வில் திருவிழாக்களின் அவசியத்தை உணர்த்தும்



வகையில் தமிழீழத்தில் நான் பங்கு பற்றிய சில திருவிழாக்கள் உண்டு. அதில் இரண்டு முக்கியமானவை. அவை இரண்டுமே வன்னிக்காட்டில் கொண்டாடப்பட்டது விசேடமானது.

ஒன்று, இலங்கை வாழ் அனைத்து இன, மொழி பேசும் மக்களுக்கும், குறிப்பாக எல்லா கிறிஸ்தவர்களுக்கும் பொதுவான ஒரு திருவிழா மடுமாதா திருவிழா. அதிலும் குறிப்பாக இலட்சக்கணக்கான மக்கள் பங்குபற்றும் யூலை 2 மற்றும் ஆகஸ்டு 15 திருவிழாக்களில் நான் முழுமையாக பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. மிகவும் பக்தியோடு, கிறிஸ்தவ பண்புகளோடு கொண்டாடப்பட்ட திருவிழா அவைகள். எவ்வகை பராக்கிற்கும் இடமளிக்காமல் மனதை இறைவன்பால் எழுப்பி நற்சிந்தனையோடு பங்குபெற முடிந்தது. இத்திருவிழாவைப் பற்றி பின்னர் விவரமாக அறிவோம்.

இரண்டாவது, தமிழீழத்தில் வாழும் நமது இந்து மத சகோதரங்கள் பெருமளவில் ஒன்றிணைந்து கொண்டாடிய முல்லைத்தீவு மாவட்டம், வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கல் விழா. கலாச்சார சீரழிவுக்கு உட்படுத்தும் ஹோலி பண்டிகை மற்றும் பிள்ளையார் சதூர்த்தியை கொண்டாடும் தமிழகத்தில் கண்ணகிக்கு விழா எடுப்பதை நான் அறிந்ததேயில்லை. நான் கேள்விப்பட்ட ஒரே கண்ணகி கோயிலும் கேரளாவில் சிறைப்பட்டிருப்பதை அறிந்து வேதனையடைந்திருக்கிறேன். இந்த கண்ணகி கோயிலும் 1992ம் ஆண்டு மே மாதம் 18ம் நாள் எறிகணைத் தாக்குதலுக்கு உட்பட்டு 15 பேர் கொல்லப்பட்டனர்.

இங்கு தமிழீழத்தில் வாழும் அனைத்து தமிழர்களும் இணைந்து கொண்டாடிய அத்திருவிழாவில் பல இலட்சம் மக்கள் கடலலையென திரண்டிருந்தது ஆச்சரியமாக இருந்தது. பல்வேறு துன்பங்கள், இடர்கள் மத்தியிலும் மக்கள் வெள்ளமென கூடியிருந்தார்கள். யாழ்ப்பாணம் தொடக்கம் மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், திருகோணமலை என்று எல்லா மாவட்டங்களிலிருந்தும் மக்கள் ஒன்று கூடி கண்ணகி அம்மனுக்கு பொங்கல் பொங்கி வழிபட்டு மகிழ்ந்தனர். தமிழ் பண்பாட்டின்படி அத்திருவிழா உண்மையில் அமைந்திருந்தது. கண்ணகி அம்மன் ஒரு தமிழ் தெய்வம். நீதிக்காக, உண்மைக்காக உயிரைக் கொடுத்த தெய்வம். அத்தெய்வத்திற்கு பொங்கல் சமைத்து, அதை உறவினர்கள், நண்பர்கள் அனைவரோடும் பகிர்ந்துண்டு, காவடி எடுத்து, நெய் விளக்கேற்றி சிறப்பாக கொண்டாடினார்கள்.

ஏராளமான கடைகள் அங்கு காணப்பட்டன. திருவிழா நாளில் மட்டுமே முளைக்கும் காளான்கள் அவை. பலவகைப்பட்ட கடைகள்



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

துணிகடை, சாப்பாட்டுகடை, வீட்டு உபயோகப் பொருட்கள், பெண்களின் அலங்காரப் பொருட்கள், படங்கள் என்று வித்தியாசமான கடைகள் காணப்பட்டன. அக்கடைகளை சுற்றி வருகிறபோது ஐந்து ஆண்டுகளாக தமிழ்நாட்டில், திண்டுக்கல் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் கோட்டை மாரியம்மன் திருவிழாவில் இளைஞர்களோடு கலந்து கொண்டு கடைகளில் வலம் வருவது நினைவுக்கு வந்தது.

தமிழீழத்தில் நான் கண்ட எல்லா திருவிழாக்களுக்கும் பொதுவானது குளிருற்று (ஐஸ்கிறீம்) வாகனங்கள். வட-கிழக்கு இலங்கையில் எங்கெல்லாம் திருவிழாவிற்காக கொடியேற்றப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் ஐஸ்கிறீம் விற்கும் வாகனங்கள் தவறாது வந்துவிடும். இரவு எவ்வளவு நேரமானாலும் மக்கள் வீடு திரும்பும் முன் ஐஸ்கிறீம் சுவைத்து செல்வது எங்கும் பார்க்கக் கூடியதாக உள்ளது. தமிழீழத்தில் நான் காலடி வைத்த முதல் நாளே அதாவது சனவரி மாதம் 15ம் திகதி புதுக்குடியிருப்பு குழந்தை இயேசு கோயில் திருவிழாவில் நான் கலந்து கொண்டேன். வழிபாடுகள் முடிந்த பிறகு சிறார், சிறுமியர்கள், இளைஞர்கள், இளம்பெண்கள் பெரும்பாலானோர் ஐஸ்கிறீம் வாகனங்களை சூழ்ந்ததைக் கண்டேன். வற்றாப்பளையில் ஏறக்குறைய 20 பெரிய ஐஸ்கிறீம் வாகனங்கள் வரிசையில் நின்று விற்பனையில் சாதனை படைத்து கொண்டிருந்தன.

எனது சிந்தனையை கிளரிய மற்றொரு திருவிழாவைப் பற்றியும் இங்கு நான் குறிப்பிடுவது அவசியம். அது வங்காலை தூய அன்னம்மாள் திருவிழா. திருவிழாவிற்கு அழைக்கப்பட்ட நான் அங்கு சென்றதற்கு காரணம், அங்குதான் அருட்பணி. மேரி பஸ்ரியான் சிங்கள இராணுவத்தினரால் தனது இல்லததிலே சுட்டுக் கொல்லப்பட்டார். திருவிழா முடிந்து திருச்சுரூப பவனி நடைபெற்ற போது அதில் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். அதன்போது சிங்கள இராணுவ தளபதி ஒருவனும் கலந்து கொண்டான். கோயிலுக்குள்ளே இராணுவம் அத்துமீறி நுழைந்து, அருட்பணியாளர் ஒருவரை விசாரணை ஏதுமின்றி அரக்கத்தனமாக சுட்டுக் கொன்று இன்று அதே கோயிலில் மரியாதையுடன் பவனி வருவதா என்ற கேள்வி என் மனதை குடைந்தது. பகைவனை மன்னிக்க இயேசு கற்றுத் தந்தார். ஆனால் ஏன் என்னை கன்னத்தில் அறைந்தாய் என்று நீதியையும் கேட்டாரே. அருட்பணி. பஸ்ரியான் இறப்புக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லையே?

திருவிழாக்களின் அவசியம் என்று என்னை உணர்த்திய கருத்துக்கள் சில.



- போரினாலும், இன ஒடுக்கு முறையாலும் பல்வேறு துன்பங்களை அனுபவித்த போதும் மகிழ்ச்சியாக வாழ ஒதுக்கப்பட்ட நாட்கள் திருவிழாக்கள்.
- எத்தகைய துன்பச் சூழலிலும் மனிதனின் மனதிலுள்ள பக்தி, ஆன்மீகம் அழிந்துபோவதில்லை.
- சொந்தங்களை தேடி சென்று வாழ்த்தி, உண்டு உறவாடி மகிழ்ந்து, உறவுகளை ஆழப்படுத்த திருவிழாக்கள் அவசியமாகிறது.

## சினிமா தாக்கம்

“நீங்க சினிமா நடிகர்களை பார்த்திருக்கிங்களோ?” நிறைய இளைஞர்கள் என்னிடம் கேட்கும் முதல் கேள்வி இதுதான். தென்னிந்தியாவின் சினிமா தாக்கம் ஈழத்தில் சற்று அதிகம் தான். எவ்விதமான பொழுதுபோக்கிற்கும் வழியில்லாமல் வாடும் இளையோருக்கு சினிமா சற்று ஆறுதல் தான். எல்லோர் கையிலும் வானொலி உண்டு. வன்னி பகுதிகளில் தொலைக்காட்சி கிடையாது. பிற ஏனைய தமிழ் பகுதிகளில் தொலைக்காட்சி வசதியுண்டு. தமிழ்நாட்டில் சன் தொலைக்காட்சி மற்றும் ஏனைய தொலைக்காட்சிகளில் வரக்கூடிய ‘சித்தி, மருமகள்’ போன்ற எல்லாத் தொடர்களையும் இங்குள்ள சக்தி டி.வி. வழங்குகிறது. ‘உலக தொலைக்காட்சியில் முதன் முறையாக, திரைக்கு வந்த சில மாதங்களே ஆன புத்தம் புது திரைப்படம்’ ‘பாபா’ அதிவிமரிசையுடன் பொங்கலன்று சக்தி டி.வியில் காட்டப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் சிறிய வீடியோ திரையரங்குகள் புதிய தமிழ் திரைப்படங்களை காட்டுகிறார்கள். இவைகள் எல்லாமே புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகின்றன. விடுதலைப் புலிகளின் ‘தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவு’ கதைக்கு ஒவ்வாத ஆபாச காட்சிகளை தணிக்கை செய்தபிறகே படங்களை திரையிட அனுமதிக்கின்றனர்.

## கூத்து

தமிழ்நாட்டில் மிகவும் அருகிவரும் ஒரு கலை கூத்து. இன்று தமிழ்நாட்டில் கிராமங்களில் இந்து சமய திருவிழாக்களின் போது கூத்து காணப்படகிறது. அதுவும் உண்மையான கூத்தின் தன்மை மறைந்து இரட்டை அர்த்தமுள்ள, வக்கிரம் நிறைந்த, தீய வார்த்தைகளால் மட்டுமே



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

வசனம் பேசி நடிப்பதாக இன்று கூத்து மாறிவிட்டது. சில தமிழ் கலை, நாட்டுப்புற கலை வடிவங்களில் பற்று உள்ளவர்கள் கலையை வளர்ப்பதற்காக கூத்து அமைத்து நடிக்கின்றனர். நாட்டுபுற கலைக்கென்று பல்கலைக்கழக பட்டப்படிப்பு துவங்கி, ஆராய்ச்சி செய்து கூத்தை வளர்க்க தமிழ்நாட்டில் அரும்பாடுபடுகிறார்கள்.

ஆனால் தமிழீழத்தில் கூத்து அழியாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது. கடந்த கால போரினால் கூத்து நடிப்பது குறைந்திருந்தாலும் இன்னும் அழியாமல் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. யூலை மாதம் பள்ளிமுனையில் தூய அந்தோனியார் கூத்து இரண்டு நாட்களாக விடிய விடிய நடைபெற்றதை நேரில் கண்டு இரசித்தேன். ஒரு கிறிஸ்தவ கூத்தை முதன்முதலாக கண்டேன். நான் தங்கியிருந்த மன்னார், புனித செபஸ்தியார் பேராலய பங்கின் பொன்விழாவையொட்டி 06.10.2003 அன்று புனித செபஸ்தியார் கூத்து சுமார் 20 வருடங்களுக்கு பிறகு அரங்கேற்றப்பட்டது. இக்கலை வடிவம் அழியாமல் பாதுகாக்கப்படுவது பாராட்டுதல்குரியது. மேலும் இயேசு கிறிஸ்துவின் பாடுகள் நிகழ்ச்சிகளை பெரிய அளவிலான பொம்மைகள் கொண்டு பாஸ்கு நாடகம் நடத்தப்படுவதையும் குறிப்பாக பேசாலை உடுக்கு பாஸ்கா நிகழ்வின் தயாரிப்புகளையும் நேரில் கண்டு வியந்தேன். கலைகள் அழியாமல் பாதுகாக்கப்பட்டு மக்களின் விடுதலைக்காகவும் பெருமளவில் பயன்படுத்தப்படுவது பாராட்டப்பட வேண்டியது.



மன்னாரில் அரங்கேறிய புனித செபஸ்தியார் நாட்டுக்கூத்து



# தமிழீழத்தில் கிறிஸ்தவம்

"இந்த பாதருக்கு செபிக்க தெரியல" நான் என்னைப் பற்றி கேட்ட முதல் விமர்சனம் இது. இந்தியா பாதர் என்றால் நல்லா செபிப்பாங்க. இந்தியா பாதர் என்றால் கேரளா, சாலக்குடி, டிவைன் தியான இல்லத்தை சார்ந்தவங்களா, நல்லா செபம் செய்து, நல்லா பிரசங்கம் வைப்பாங்க. இதுதான் பொதுவாக தமிழீழ மக்களிடம் இருந்த ஓர் எதிர்பார்ப்பு. அந்த எதிர்பார்ப்புக்கு ஏற்றால் போல் நான் செயல்படாதது சில கிறிஸ்தவர்களிடையே ஏமாற்றத்தை தந்தது உண்மைதான். நான் சுற்றிவந்த எல்லா பங்குகளிலும், எல்லா இடங்களிலும், கிறிஸ்தவ மக்களிடையே இத்தகைய எதிர்பார்ப்புக்கு என்ன காரணம் என்பதன் அடிப்படையிலேயே தமிழீழத்தில் கிறிஸ்தவத்தை முன் வைக்கிறேன்.

## கிறிஸ்தவ வரலாறு

நான் மன்னாருக்கு வந்து சேர்ந்த இரண்டாம் நாள் மாந்தை திருவிழா 15.02.2003 அன்று கொண்டாடப்பட்டது. அன்று மரியாள் பற்றிய ஒரு மறையுரையை நான் விவிலியத்தின் அடிப்படையில் நிகழ்த்தினேன். அத்திருப்பலியின் இறுதியில் தலைமைப் பணியாளராக திருப்பலியை ஒப்புக்கொடுத்த மன்னார் மறைமாவட்ட முதன்மைக்குரு அருட்பணி. சேவியர் குருஸ் அடிகளார் மாந்தையின் சிறப்பை சுருக்கமாக சொன்னார். அதில் இலங்கை கிறிஸ்தவ வரலாறு அடங்கியிருந்தது.

"1504ம் ஆண்டின் பின் இலங்கைக்கு போர்த்துக்கேயர் வருகையால் ஏற்பட்ட மாற்றங்களின் பெறுபேறுகளில் ஒன்றுதான் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பரம்பலாகும். இலங்கை தீவின் வடபுலத்தில் அமைந்துள்ள ஒரு குட்டித்தீவான நம் மன்னார்த் தீவிலும் கத்தோலிக்க திருமறை பரவக்காரணமானவர்களும் இப்போர்த்துக்கேயரே. இற்றைக்கு 450 ஆண்டுகளின் முன் அதாவது 1544 கார்த்திகை மாதத்திற்கும்



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

மார்கழி மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் மன்னார்த்தீவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெரும் வேதகலாபனையைச் சந்தித்தது. இக்கலாபனையின் போது 600க்கு அதிகமான மன்னார்த் தீவு மக்கள் வாளுக்கு இரையாகி வேதசாட்சிகளாக மரித்தார்கள்." (மன்னார் மறைசாட்சிகள் - 450வது ஆண்டு நினைவுமலர், பக். 57) இந்த வேதசாட்சிகளின் இரத்தம் விதையாகி இன்று இலங்கையில் கனிதருகிறது. அந்த வேதகலாபனையின் போது கெபியில் இருந்த சுருபம், சில கிறிஸ்தவர்களால் காப்பாற்றப்பட்டு காட்டில் ஒளித்து வைக்கப்பட்டது. அப்படி ஒளித்து வைக்கப்பட்ட இடம்தான் மருதமடு. இன்று செபமாலை அன்னையாக, மருதமடு தாயாராக இலங்கை வாழ் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் அன்னையாக இருக்கிறாள். அன்னை கோயில் கொண்ட அந்த மடுத்திருப்பதியும் வன்னிக் காட்டில் இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. அந்த வன்னிக் காட்டில் அவளின் குழந்தைகளுக்கு ஏற்பட்ட வன்செயல்கள், போர் அனர்த்தங்களுக்கும் அவளே சாட்சி.

அத்தகைய சிறப்பு வாய்ந்த மாந்தையில் நான் எனது திருப்பலியை நிறைவேற்றியது எனது பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன். ஆனால் இன்று அது இராணுவத்தினரில் பிடியில், இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கிறது. மக்கள் யாருமில்லாத ஒரு காடாக மாந்தை அமைந்திருக்கிறது. இந்த வரலாற்று சிறப்புமிக்க மாந்தையின் பின்புறம் மற்றொரு புராண சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம் சிவன் கோயிலும் அமைந்துள்ளது.

இங்கு தமிழீழத்தில் எல்லா பாடசாலைகளிலும், எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் சமயம் ஒரு பாடமாக உள்ளது. கிறிஸ்தவர்கள் திருச்சபையின் வரலாறு, மறைக்கல்வி, இலங்கை கிறிஸ்தவ வரலாறு போன்ற பாடங்களை விவரமாக படிக்கிறார்கள்.

## உறுதியான விசுவாச வாழ்வு

கடந்த இருபத்தைந்து ஆண்டு யுத்த காலத்திலும், பல்வேறு இழப்புகள் இடப்பெயர்வுகள் மத்தியிலும் தங்களுடைய விசுவாச வாழ்வில் உறுதியாக நிலைத்து நின்றுள்ளனர். போரினால் இடம்பெயர்ந்து சென்ற இடங்களிலும் தங்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தி வாழ்ந்துள்ளனர். இந்தியாவில் அகதிகளாக முகாம்களில் வாழ்பவர்கள் கிறிஸ்துமஸ் மற்றும் தங்களின் பாதுகாவலர்கள் திருவிழாக்களை சிறப்பாக கொண்டாடுவதை அறிந்திருக்கிறேன். நேரிலும் பங்குபற்றியிருக்கிறேன். இங்கு தமிழீழத்தில் உள்நாட்டு அகதிகளாக வாழ்பவர்கள் கூட அதே



போன்று தங்களின் திருவிழாக்களை கொண்டாடி தங்களின் விசுவாச வாழ்வில் உறுதி பெற்றுள்ளனர். திருவிழாக்கள் மட்டுமல்ல பக்தி சபைகளிலும் கூட்டங்கள் நடத்தி, பொது சேவைகளில் ஈடுபட்டு கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். இது மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்றாக நான் கருதுகிறேன்.

பொதுவாகவே இயற்கையோடு போராடி ஜீவியம் நடத்துபவர்கள் மத்தியில் ஆழமான விசுவாசம் வெளிப்படும். அவ்வகையில் ஈழக் கிறிஸ்தவ மக்களும், குறிப்பாக கடல் தொழில் செய்யும் மக்களிடையே தொன்மையான விசுவாச வாழ்வு வெளிப்படுவதை நன்கு உணரலாம். அவ்வகையில் இங்கு மன்னார் மாவட்டத்தில் பேசாலை, தாழ்வுபாடு,



இடிந்து போனது கோயில் கட்டிடமே – விசுவாச வாழ்வு அல்ல



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

பள்ளிமுனை, வங்காலை, அரிப்பு, முள்ளிக்குளம் போன்ற இடங்களிலெல்லாம் கிறிஸ்தவர்கள் மட்டுமே வாழ்வது குறிப்பிடத்தக்கது. வீதியோரங்களில், தெரு சந்திகளில் ஒரு சிலுவையையோ, ஒரு மாதா சுருபத்தையோ அல்லது புனிதரின் சுருபத்தையோ இங்கு மன்னார் மாவட்டத்தில் மிக அதிகமாக காணலாம். இதுவும் விசுவாசத்தின் ஒரு வெளி அடையாளமாகவே பார்க்கலாம். இதில் ஒரு சிறு பிரச்சனை என்னவென்றால் இச்சிறு ஆலயங்களுக்கும் பெரிய அளவில் திருவிழாக்களை எடுத்து, திருவிழாக்களை அதிகப்படுத்திவிட்டார்கள். ஒரு திருவிழாவிலிருந்து மற்றொரு திருவிழாவிற்கு மாறிக்கொண்டே இருக்க வேண்டிய சூழலில் சில பங்குபணியாளர்கள் கஷ்டப்படுகிறார்கள்.

ஒரு நாள் மாலை வேளையில் பக்கத்து பங்கான பள்ளிமுனை சென்றேன். புனித லூசியாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஆலயம். மிகவும் பழைய ஆனால் அழகான கட்டிட அமைப்பில் உள்ள ஆலயம். உள்ளே சென்று பார்த்தபோது மக்கள் உள்ளே பெருங்கூட்டமாக காணப்பட்டார்கள். இப்போ பூசை இருக்கா என்று அங்கிருந்தவர்களிடம் கேட்டேன். இல்லையென்று பதில் வந்தது. ஏதோ வழிபாடு, ஆராதனை இருக்கும் என்று நம்பினேன். ஆனால் பலி பீடமோ எவ்வித ஆயத்தமும் இல்லாமல் இருப்பதை பார்த்து ஆச்சரியத்தோடு பங்கு தந்தையிடம் விசாரித்தேன். ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் மக்கள் தனியாகவோ, குடும்பமாகவோ கோயிலுக்கு வந்து செபிப்பதை பார்த்து ஆச்சரியப்பட்டு நின்றேன்.

தனி செபம், நற்கருணை சந்திப்பு என்பது தமிழ்நாட்டிலும் உள்ள பழக்கம்தான். ஆனால் பெரும்பாலும் வயது போனவர்கள் - வீட்டில் நிம்மதியாக இருக்க முடியாது - கோயிலுக்கு வருவார்கள். ஆனால் இங்கு பெருந்திரளான மக்கள் தாங்களாகவே கோயிலுக்கு வந்து செபமாலை செபிப்பது, நற்கருணைநாதரை வழிபடுவது, தமது பாதுகாவலர்களாகிய புனிதர்களின் முன் செபிப்பது சற்று வித்தியாசமாகவே எனக்கு பட்டது. பள்ளிமுனையில் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் நாள்தோறும் அதிலும் குறிப்பாக செவ்வாய், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் மக்கள் கோயிலுக்கு சென்று தனிமையில் செபிப்பதை பார்க்கிறேன். இதுவும் ஆழமான விசுவாச செயல்பாடுகளில் ஒன்று. நான் சார்ந்திருக்கும் சலேசிய சபையை நிறுவிய தூய ஜான் போஸ்கோ தனது இளைஞர்களிடத்தில் அடிக்கடி கூறுவார், “உங்களுக்கு அதிகமான அருள், ஆசீர்வாதம் தேவையென்றால் அடிக்கடி நற்கருணை நாதரை தரிசியுங்கள்.” தமிழ்நாட்டு கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு நல்ல பாடம். தனி செபங்களிலும் அக்கறை செலுத்தி வாழும் போது நமது விசுவாச வாழ்வு ஆழம் பெறுகிறது. உறுதி பெறுகிறது.



தங்கள் பகுதிகளில், ஊரில் யுத்தம் தொடங்கியது என்றால் மக்கள் அனைவரும் கோயிலே தஞ்சம் என்று கோயிலை நோக்கியே ஓடுவார்களாம். எனவேதான் மடு ஆலய வளாகத்தில் மிகப் பெரிய அகதிகள் முகாம் பல ஆண்டுகளாக செயல்பட்டு சென்ற ஆண்டு மூடப்பட்டது. மேலும் யாழ்ப்பாணம் நவாலி, தூய பேதுரு ஆலயம், குருநகர் தூய யாகப்பர் ஆலயம் மற்றும் வற்றாபளை கண்ணகி அம்மன் கோயில் தாக்கப்பட்டதன் காரணம் அங்கு தமிழ் மக்கள் தஞ்சம் அடைந்ததினாலேயே.

## அருங்கொடை இயக்கம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் பரிசுத்த ஆவியின் அருங்கொடை இயக்கம் மிகவும் வேகமான ஒரு வளர்ச்சியைப் பெற்றுள்ளது. குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்மன ஆறுதல் தரவும், உளவியல் ரீதியான ஒரு விடுதலையைத் தரவும், போராட்ட வாழ்வின் துன்பங்களிலிருந்து நிம்மதி பெறவும் இந்த அருங்கொடை செபம் மிகவும் உதவியிருக்கிறது எனலாம். வாய் விட்டு சப்தமாக செபிக்கவும், கைதட்டி அல்லது கையை உயர்த்தி செபிக்கவும் அதிலும் குறிப்பாக தாங்களாகவே செபிக்கவும் இந்த அருங்கொடை செபம், வழிபாடுகள் உதவியிருக்கிறது. இந்தியா சாலக்குடி டிவைன் தியான மையத்தைச் சார்ந்தவர்கள் தமிழீழத்தின் பல இடங்களுக்கும் சென்று ஆயர்கள், அருட்பணியாளர்கள் உதவியோடு இத்தகைய செபவழிபாடுகளை நடத்தி பலருக்கும் உதவி செய்துள்ளனர். ஆழ்மன பாதிப்புகளிலிருந்து விடுதலையையும் அதனுடன் தொடர்புடைய உடல் நோய்களிலிருந்து (Psycho-somatic sickness) குணமும் பெற்று தந்துள்ளார்கள். உண்மையில் இது தூய ஆவியின் அருங்கொடை, வரப்பிரசாதம் என்றே நானும் உறுதியாக நம்புகிறேன்.

ஆனால் இதுதான் கிறிஸ்தவ வாழ்வு என்று சிலர் தவறாக நினைத்துக் கொண்டு வாழ்கிறார்கள். கிறிஸ்தவ வாழ்வில் செபம் மிகவும் அடிப்படையானது. ஆனால் கிறிஸ்தவர்கள் ஒரு சமூகமாக, தங்களிடம் உள்ளதை பிறரோடு பகிர்ந்து வாழ்தலும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, சமாதானத்துடன், ஒற்றுமையுடனும் வாழ்தலும் அவசியம் என்பதை மறந்துவிடக்கூடாது. அதிலும் மேலாக இறையாட்சியின் பண்புகளான உண்மை, நீதி, அன்புடன் வாழ்ந்து நீதியுள்ள ஒரு சமூகத்தை, இறையாட்சியை கட்டியெழுப்ப வேண்டிய கடமையுள்ளவர்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது. கடந்த காலங்களில் அடிமைச் சமூகமாக வாழ்ந்த தமிழினம் இன்று ஆயுதமேந்தி போராடி நீதியையும், விடுதலையையும் பெற வேண்டிய அவலத்திற்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் தமிழ்



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

கிறிஸ்தவர்கள் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பது சரியாகாது. இதனை தமிழ் திருச்சபை நன்றாக உணர்ந்து இயக்கங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு உதவி செய்து வந்துள்ளவையும் இவண் குறிப்பிடுவது அவசியம். அருட்பணி. சிங்கராயர் தொடங்கி பல குருக்களும் பல இயக்கங்களோடு இணைந்து செயல்பட்டுள்ளனர். இன்றைய கால கட்டத்தில் அது மிகவும் குறைந்து காணப்படுவதாக உணரப்படுகிறது. அதற்கு அருங்கொடை இயக்கத்தின் போக்கும் ஒரு காரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

மேலும் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் மக்களிடையே ஒரு விதமான குற்றப்பழி உணர்வையும் இந்த அருங்கொடை செபவழிபாடுகள் ஏற்படுத்துகின்றன என்பதும் என் எண்ணம். நான் பாவி, நான் பாவி என்ற மனநிலையோடு எந்நேரமும், எதிலும் இவ்வித குற்றப்பழி உணர்வோடு மக்களை இச்செபவழிபாடு உருவாக்குகிறது. இதனாலும் மக்கள் ஒருவித மன உளைச்சலுக்கு உள்ளாகிறார்கள் என்றும் நான் பார்க்கிறேன்.

இச்செபவழிபாடு பற்றிய எனது மற்றொரு விமர்சனம், தொன்மை வாய்ந்த கீழை நாகரீகத்தில் செபம் அல்லது வழிபாடு என்பது அமைதியில் நடப்பதாகும். தியானம் போன்ற சமய செயல்பாடுகள் உள், புற அமைதியில் இறைவனை உணர்வதாகும். இதற்கு எதிராக அருங்கொடை செபவழிபாடுகள் அமைந்திருப்பதாகவும் நான் உணர்கிறேன். கைதட்டுவது சப்தமாக செபிப்பது, உரக்க கூவுவது, சப்தமான பாடல்கள், போன்றவை மேற்கத்திய நாகரீகத்தோடு ஒன்றித்து செல்லக்கூடியது. இதற்கு காரணம் இங்கு மக்கள் நெருக்கமாக வாழ்கிறார்கள். சப்தம் தேவையில்லை. ஆனால் மேலை நாடுகளில் மக்கள் தனிமையில் வாழ்கிறார்கள். அங்கு சப்தம் மக்களுக்கு துணை போகும். ஆகவேதான் அவர்களுடைய இசையும் பாப், ராக் இசையென்று சப்தமே இசையாக மாறிவிட்டது. அதுபோல் சப்தம் செபமாக மாறாதே. இவ்வகையில் அருங்கொடை செபம் நமது நாகரீகத்திற்கு எதிரானது என்று நான் நம்புகிறேன். ஒவ்வொரு சமயத்திலும் உணர்வுபூர்வமான வழிபாடுகளுக்கு இடமுண்டு. ஆனால் அது தகுந்த அளவில் மட்டுமே இருக்கவேண்டும். இக்கட்டுரையின் தொடக்கத்தை ஒருமுறை வாசிக்கவும்.

## மரியாள் பக்தி

கடந்த யூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் மருதமடு அன்னையின் பெருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இலங்கையில் வாழும் எல்லா கிறிஸ்தவ மக்களுக்கும், இனம், மொழி,



சாதி வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் தாயாக அன்னை விளங்குகிறாள் என்பதை நேரில் நான் உணர்ந்தேன். இலட்சக்கணக்கான மக்கள் கூடும் இத்திருவிழாவில் பக்தியும், பரவசமும் காணப்படுகிறது. நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, செபமாலை, பிரார்த்தனைகளில் பங்கு பற்றி, திருப்பலி ஒப்புக்கொடுத்து, தனியாக, குடும்பமாக, குழுக்களாக சிலுவைப்பாதையை தியானித்து மிகவும் பக்தியுள்ள முறையில் திருவிழாக்களில் பங்குபெறுகிறார்கள்.

தமிழ்நாட்டில் வேளாங்கண்ணியில் கொண்டாடப்படும் அன்னையின் திருவிழாவை ஒருமுறை நேரில் கண்டு, வேளாங்கண்ணிக்கு இனி செல்லும் எண்ணமே இல்லாமல் போயிற்று. வெறும் வியாபாரம், சந்தடி சப்தம், வேடிக்கை, விளையாட்டு என்று வேளாங்கண்ணி மாறிவிட்டது. பக்தியோடு செபிப்பது இயலாமல் போகிறது. மடு திருப்பதியில் திருவிழா நாட்களில் இரு மொழி பேசும் மக்கள் வருவதால் எல்லா வழிபாடுகளும் இரு மொழிகளில் கொண்டாடப்படுகிறது. ஆனால் தனித்தனி வழிபாடுகள் என்று இல்லாமல் ஒரே வழிபாட்டில் இரு மொழிகளும், சிறப்பாக திருச்சபையின் பாரம்பரிய மொழியான இலத்தீனும் பாவிக்கப்படுகிறது. இதனாலும் இரு இனங்களிடையே ஒற்றுமை, சமாதானம் ஏற்பட வழிவகுக்கப்படுகிறது எனலாம்.

மடுமாதா திருவிழாவின் போது நான் கண்டு அதிர்ச்சியடைந்த ஒரு விடயம், திருவிழா நாட்களில் வழிபாடுகளில், திருப்பலியில் பாடல் பாடவோ, வாசகம் வாசிக்கவோ, செபங்களை செபிக்கவோ பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சாதாரண நாட்களில் பாடல் பாட அனுமதிக்கப்படுபவர்கள் திருவிழா நாட்களில் ஓரங்கட்டப்படுகிறார்கள். ஏன் என்று விசாரித்தபோது 'வழமை' என்ற பதிலே கிடைத்தது. வழமை என்று பழங்காலத்து மூடநம்பிக்கைகளைக் கொண்டு அன்னையின் பாதத்தில் பெண்ணடிமைத்தனம் அரங்கேறுகிறது. இந்த வழமை 21ம் நூற்றாண்டிலும் மாறவில்லையே.

திருவிழா காலங்களில் வரும் மக்கள் கூட்டம் தங்குவதங்கு போதுமான வசதிகள் இல்லை. செய்திருந்த வசதிகளும் போரினால் அழிந்துவிட்டன. இருப்பினும் அத்தகைய சூழலில் சமாளிப்பதற்காக மக்கள் ஆயத்தமாகவே வருகிறார்கள். தங்குவதற்கு தற்காலிக கொட்டில் மற்றும் உணவு பொருட்கள், சமையல் பொருட்கள் என்று எல்லாவற்றையும் தாங்களாகவே கொண்டு வருகிறார்கள். வசதியின்மையை ஒரு பொருட்டாக அவர்கள் கருதுவதில்லை.



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

ஏற்கனவே சொன்னது போல மடுத்திருப்பதி வன்னிக்காட்டில், புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் அமைந்துள்ளது. ஆகவே இங்கு வருகின்ற பக்தர்கள் அனைவரும் இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடிகளைக் கடந்து தமது பெயர் மற்றும் வாகனங்களை பதிந்துதான் உள்ளே செல்லமுடியும், வெளியே வர முடியும். திருவிழாவின் போது வருகிற பக்தர்களுக்கு இது ஒரு நெருக்கடியாக இருப்பதாகவும் விடுதலைப்புலிகள் காலம் கடத்துவதாகவும் சிலர் குறை கூறினர். இதைப்பற்றி நான் சற்று ஆழமாக யோசித்துப் பார்த்த போது இருதரப்பினருக்கும் அதாவது இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இருக்கும் பாதுகாப்பு பிரச்சனைகள் வெவ்வேறானது, பாரதூரமானது. இராணுவத்தினருக்கு தங்களது பாதுகாப்பு மட்டுமே பிரதானமானது. மேலும் அவர்கள் சம்பளத்திற்காக உழைப்பவர்கள். ஆனால் விடுதலைப்புலிகளுக்கோ தாங்கள் இரத்தம் சிந்தி, சண்டையிட்டு கைப்பற்றிய நிலத்தில் எதிரி உள்ளே புகாவண்ணம் நிலத்தையும், மக்களையும் காப்பாற்ற வேண்டும். மேலும் மடுக்கோயிலுக்கு சிங்களவர்கள் அதிகமாக வருகின்ற காரணத்தினால் எதிரியின் புலனாய்வு துறையினர் வேவு பார்க்க அல்லது வேறு தீய எண்ணத்தோடு பக்தர்களோடு சேர்ந்து உள் நுழையலாம் என்ற பேராபத்து இருப்பதனால் தீவிரமான சோதனையின் ஒரு பகுதியாக பதிவுகளை மேற்கொள்கிறார்கள். இது ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே இருப்பதாக நான் உணர்கிறேன்.

அன்னை மரியாள் பக்தியில் மற்றொரு சிறப்பான அம்சம் ஈழக்கிறிஸ்தவர்கள் திரிகால செபத்தை செபிக்கும் நல்ல பழக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். இது தொன்மையான, ஆழமான ஒரு பக்தி முயற்சிதான். மூவேளையும் கோயிலில் மணி அடிக்கிறபோது எந்நிலையில் இருந்தாலும், எவ்வேளையில் ஈடுபட்டிருந்தாலும் திரிகால செபத்தினை செபிக்கிறார்கள். இளைஞர்கள் மாலை நேரத்தில் விளையாடும் போது திரிகால செபத்திற்கான மணி சப்தம் கேட்டவுடன் பந்தை அதே இடத்தில் நிறுத்தி அனைவரும் மௌனமாக தலை சாய்த்து நிற்பர். முள்ளிக்குளம் இளைஞர்களிடையே இதை பார்த்து வியந்து நின்றேன். பாடசாலையில் வகுப்புகள் நடைபெற்றாலும் ஆசிரியர்கள் பாடங்களை நிறுத்தி மௌனமாக நிற்பார்கள். ஏதேனும் கிறிஸ்தவ கூட்டங்கள் நடைபெற்றால், அனைவரும் எழுந்து நின்று ஒருமிக்க திரிகால செபத்தை செபிப்பார்கள். இப்படியாக அன்னை மரியாளின் பக்தியில் ஊன்றியவர்களாக ஈழத்தமிழர்கள் வாழ்வது சிறப்பானது.



## தமிழ் கிறிஸ்தவ பெண்களின் முன்னோடி மரியாள்

தமிழீழத்திலுள்ள சில மரியாளின் சேனையினருக்கு நான் அன்னை மரியாளைப் பற்றி கூறிய சில கருத்துக்ககளை இங்கு முன்வைப்பது பொருத்தமானதாக கருதுகிறேன்.

இன்று தமிழீழத்தில் ஒவ்வொரு பெண்ணும் அனுபவிக்கும் வேதனை, துன்பத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே அன்னை மரியாள் அனுபவித்ததனால் அவள் தமிழ் பெண்களின் முன்னோடியாக திகழ்கிறாள்.

முதலாவதாக, கடவுளுடைய வார்த்தை அன்னை மரியாளுக்கு எடுத்துக் கூறப்பட்டபோது மரியாள் கலங்குகிறாள். "இது எங்ஙனம் ஆகும். நானோ கணவனை அறியேனே" என்கிறார். ஆயினும் தூய ஆவியின் உதவியால் மரியாள் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள் என்பது மரியாளுக்கு மட்டுமே அறிவிக்கப்பட்ட நற்செய்தி. வானதூதரின் நற்செய்தியை அறியாத பிறர் - மரியாளின் காலத்தில் வாழ்ந்தவர்கள் - அவரை தவறாக, கேவலமாக நினைத்திருக்கலாம். யூதமத சட்டத்தின்படி மரியாவை கல்லால் எறிந்து கொல்லலாம். தனது உண்மை நிலையை பிறருக்கு எடுத்து கூறினாலும், ஒரு பெண்ணின் வாக்குமூலத்தை ஏற்காத யூதர்கள் மரியாவை விபச்சாரி என்று பட்டம் கட்டியிருக்கலாம். இன்று நம்மிடையே வாழும் எத்தனையோ தமிழ் பெண்களால் இதே பட்டத்தோடு வாழ்கிறார்கள். தாங்கள் செய்யாத ஒரு பாவத்திற்காக, பாவி என்று எத்தனையோ இளம் பெண்கள் தவறாக தீர்ப்படப்படுகிறார்கள். வக்கிர புத்தியுள்ள ஆண்களால் ஏமாற்றப்பட்டு தவறாக நடத்தப்படுகிறார்கள். விலைமாதர்களாக விற்கப்படுகிறார்கள். இராணுவத்தினரால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டு துன்பப்படுகின்றனர். சிறையில் காவலர்களால் துன்புறுத்தப்பட்டு குழந்தைகளோடு தென் இலங்கை சிறைகளில் வாடுகிறார்கள்.

இரண்டாவதாக, மரியாவுக்கு மண ஒப்பந்தமான யோசேப்பு, மரியாவை விலக்கிவிட தீர்மானிக்கிறார். இதையறிந்த மரியா எவ்வளவு வேதனையடைந்திருப்பார். இன்றும் எத்தனையோ பெண்கள் கணவர்களால் சந்தேகிக்கப்பட்டு ஒதுக்கப்படுகிறார்கள். மனைவி வெளியே சென்றால் அல்லது உறவினர்கள், தெரிந்தவர்களிடையே சிரித்து பேசினால், தவறாக நினைத்து சந்தேகப்படும் கணவன்மார்களோடு எத்தனை பெண்கள் கஷ்டப்படுகிறார்கள். போரினால் கணவனையிழந்து இளம்விதவைகளாக வாழ்பவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் ஒன்றா, இரண்டா?



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

மூன்றாவதாக, நிறை மாத கர்ப்பிணியாக பெத்லேகம் நகரில் மக்கட் தொகை கணக்கெடுப்பில் தங்கள் பதிவினை செய்ய வந்தபோது, மரியா பேறுகால வேதனையில் தவித்தபோது தங்க இடம் மறுத்து தனது முதல் குழந்தையை மாட்டுக்கொட்டிலில் பிரசவித்தபோது அன்னையின் மனம் பட்ட வேதனைக்கும் அளவுண்டோ? தனது சொந்தங்களால் இடம் மறுக்கப்பட்டு துரத்தியடிக்கப்பட்ட தமிழ் பெண்கள் எத்தனை பேர்? தனது குழந்தையை தனது வீட்டில் அல்லது ஒரு நல்ல மருத்துவமனையில் பெற்றெடுக்கவே எந்த தாயும் விரும்புவாள். மாட்டு கொட்டிலையும் விட கேவலமான அகதிகள் முகாம்களில், தனிமை என்பதே இல்லாத சூழ்நிலையில், ஆரோக்கியமற்ற சூழலில் தமது குழந்தைகளை பெற்றெடுத்த தமிழ் பெண்கள் பட்ட துன்பம் மரியாவின் வியாகுலங்களோடு ஒப்பிடலாம்.

நான்காவதாக, தனது பச்சிளம் குழந்தையை - இயேசுவை - தூக்கிக் கொண்டு ஏரோது அரசனால் ஏவப்பட்ட வீரர்களுக்கு அஞ்ச எகிப்துக்கு அகதிகளாக மரியா ஓடிப்போனதும், தமிழின அழிப்பை உறுதிசெய்ய சிங்கள அரசியல்வாதிகளால் ஏவப்பட்டு வீடுவீடாய் குழந்தைகளையும், முதியவர்களையும், நேயாளிகளையும் சுட்டு, கத்தியால் குத்தி கொலை செய்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சி, அகதி முகாம்களுக்கும், காட்டுக்கும், கடல்கடந்து அண்டை நாடான இந்தியாவுக்கும் அகதிகளாய் போன தமிழ் பெண்கள் பட்ட துன்பமும் ஒன்றுதானே. அதனிலும் மேலாக அகதிகளாக ஓடிப்போனபோது துரத்தின இராணுவ வீரர்களால், மேலிருந்து சுட்ட உலங்கு வானூர்திகளால், கடலில் மூழ்கடிக்கப்பட்டு செத்த அகதிகள் ஆயிரம் ஆயிரம்.

ஐந்தாவதாக அன்னை மரியா தன் கணவர் யோசேப்புடன் தனது ஒரே மகன் இயேசுவோடு யெருசலேம் ஆலயத்திற்கு வழிபட செல்கிறார்கள். இயேசுவுக்கு அப்போது வயது பன்னிரண்டு. சிறுவன் இயேசு பரிசேயர்கள், மறைநூல் வல்லுநர்களின் போதனையைக் கேட்டு கொண்டும், கேள்விகள் கேட்டும் விவாதித்து கொண்டும் இருந்துவிட மரியாவும், யோசேப்பும் திரும்பி விடுகிறார்கள். தங்கள் மகன் தங்களோடு இல்லாததை பாதிவழியில் தான் உணர்கிறார்கள். பின் மனவேதனையோடு தேடுகிறார்கள். மூன்று நாட்களுக்கு பிறகு யெருசலேம் கோவிலில் கண்டடைந்து மகிழ்கிறார்கள். ஆனால் இன்று ஆயிரங்கணக்கான தமிழ் பெண்கள், பெற்றோர்கள் முடிவேதும் இல்லாமல் ஆண்டுகணக்கில் தங்களது பிள்ளைகளுக்காக தேடிக்கொண்டிருக்கிறார்கள். சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டவர்கள் இன்னும் திரும்பிவராமல் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் உயிருடன்



உள்ளனரா இல்லையா என்று கூட தெரியாமல், இராணுவ முகாம்களிலும் மற்றும் சிறைச்சாலைகளிலும் மனவேதனையோடு இன்னும் தேடுகிறார்கள்.

இறுதியாக, ஒரு பாவமும் அறியா தனது மகனை, எப்போதும் சென்ற இடமெல்லாம் எல்லோருக்கும் நன்மையே செய்து வாழ்ந்த தனது ஒரே மகனை, முப்பத்திமூன்று வயது இளைஞனை, பரிசேயர்கள் ஒன்று சேர்ந்து தன் கண் முன்னே சிலுவையில் அறைந்து கொலை செய்த போதும், செத்த மகனை தன் மடியில் கிடத்தி சொல்லொண்ணா துயரத்திற்கு ஆளான அன்னை மரியாவைப் போல ஆயிரமாயிரம் தமிழ் அன்னையர்கள் தங்களின் மகன்களை, அப்பாவி இளைஞர்களை, பாடசாலைக்கு படிக்க சென்ற மகனை, தொழில் செய்து திரும்பி வந்த மகனை இராணுவம் சுட்டுக்கொன்ற போது இரத்தக் கண்ணீர் விட்டழுதனர்.

அன்னை மரியாவைப் போலவே நம் தமிழ் பெண்களும் எல்லா வகையான துன்பங்களையும் அனுபவித்துள்ளதால் தமிழ் பெண்களுக்கு முன்னோடியாக அன்னை மரியா திகழ்கிறாள். மரியாவின் மாசற்ற இதயம் அனுபவித்த வியாகுலங்களால், நம் பெண்களின் துன்பத்தை அந்த அன்னை அறிவாள், ஆறுதல் தருவாள். எனவேதான் மடுமாதா திருவிழாவின் போது அன்னையின் திருச்சுரூப பவனி நடைபெறும் போது இலட்சக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு கண்ணீரோடு அம்மா! தாயே! என்று அழுது செபிக்கும் காட்சி நமது கண்களிலும் கண்ணீரை வரவழைக்கும்.



கானகச் செல்வி – மடு மாதா



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

# இனப்பிரச்சனைக்கு தீர்வு

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறிய தீவு நாடான இலங்கையில் நடைபெறும் இனப்பிரச்சனைக்கு தீர்வா? பல முறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, ஒப்பந்தங்கள் எழுதப்பட்டு அவை மதிக்கப்படாமல் இனப்பிரச்சனை தொடர்ந்து, ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டு, மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து அகதிகள் ஆனதும் வரலாறாக மாறிவிட்டது. இனியும் இந்நிலை தொடர வேண்டுமா என்றால் பெரும்பான்மையான மக்கள் சமாதானத்தை, அதிலும் நீதியோடு கூடிய சமாதானத்தையே எதிர்பார்த்து நிற்கின்றனர். இதனை நன்கறிந்த தமிழீழ விடுதலைப்புலிகளும் தாமாக முன்வந்து போர் நிறுத்தம் ஏற்படுத்தி தற்போது அரசுடன் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். தற்சமயம் இந்த பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக விடுதலைப்புலிகள் விலகியிருப்பது மக்களிடையே ஒரு பீதியை கிளப்பிவிட்டுள்ளது. மேலும் இராணுவமும் தென் இலங்கையில் சுற்றி வளைப்பு, தேடுதல் என்று மீண்டும் தமிழ் இளைஞர்களை கைது செய்வதையும், விசாரணை என்ற பெயரில் தடுப்பு காவலில் வைப்பதும் தமிழ் மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றரை வருட போர் நிறுத்த ஒப்பந்தம் எப்போது நின்று போய் யுத்தம் மூளுமோ என்ற அச்சத்தோடு ஒவ்வொரு நாளும் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இனி போர் வந்தால் தாங்காது. இனி அழிப்பதற்கு எமது உயிரைத் தவிர ஒன்றுமேயில்லை என்ற கருத்தையும் தமிழ் மக்கள் வெளியிடுகிறார்கள். இத்தகைய சூழலில் ஒரு நீண்டகால நோக்கில் வித்தியாசமான ஒரு தீர்வை இன்னொரு அருட்பணியாளர் - நீண்ட நாள் அனுபவமும், முற்போக்கு சிந்தனையும், மக்கள் நலனில் அக்கறை கொண்டவர் - ஒருவருடன் நீண்ட நேரம் சிந்தித்தோம். அவர் முன் வைத்த சிந்தனைகளின் தொகுப்பு.



இன்று தெற்காசிய நாடுகளில் காணப்படும் இனப்பிரச்சனை முழுவதற்கும் தீர்வாக அமையக்கூடியது தெற்காசிய ஒன்றியம். ஐரோப்பிய ஒன்றியத்தின் மாதிரியை செயல்வடிவமாக ஏற்று அதே போன்றதொரு ஒன்றிய அமைப்பை ஏற்படுத்தினால் இனநலனும், மக்கள் நலனும் பாதுகாக்கப்படும். முன்னேறும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியும் பிற நாடுகளோடு போட்டியிடக் கூடியதாக இருக்கும் என்பதே கருத்து.

## தெற்காசிய ஒன்றியம்

தெற்காசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், நேப்பால், பூட்டான் போன்ற நாடுகள் ஒன்றிணைந்து இந்த புதிய தெற்காசிய ஒன்றியத்தை உருவாக்கலாம். இதில் இன ரீதியாக பிரிந்து செல்லக்கூடிய தமிழீழம், காசுமீரம் போன்ற நாடுகளுக்கும் வாய்ப்பாக இருக்கும். இதனால் பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டங்களை முடிவுக்கு கொண்டுவரலாம்.

ஐரோப்பிய ஒன்றியத்தைப் போலவே ஒரே நாணயத்தைக் கொணரலாம். இதனால் நாணய மதிப்பு உயரும். சர்வதேச அளவில் பிற நாணயங்களோடு போட்டிபோட இயலும். ஒவ்வொரு நாடும் இந்த நாணயத்தில் தங்களுக்கென தனித்துவத்தையும் கொண்டிருக்கலாம். ஐரோப்பிய ஒன்றியத்தின் நாணயமான "யூரோ" நாளுக்கு நாள் வேகமாக வளர்வதும் தெற்காசிய ஒன்றியத்தின் இணைப்புக்கு தூண்டுகோலாக அமையும்.

ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனியான இராணுவ அமைப்பைக் கொண்டிராமல், ஒன்றியத்திற்கென பொருவான இராணுவ அமைப்பை ஏற்படுத்தி, தமது இராணுவ செலவை கணிசமான அளவு குறைத்து மக்கள் மேம்பாட்டுக்கு செலவு செய்யலாம். அண்மை நாடுகளோடு இனங்களோடு சமாதானமாக வாழ்வதால் இராணுவ அமைப்புக்கும் தேவையிருக்காது.

தெற்காசிய ஒன்றியத்துக்குள் உள்ளே நாடுகளுக்கிடையே பொதுவான வர்த்தக முறை கொண்டுவரலாம். அதனால் சந்தை பெரிதாகி



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010

எளிதில் சந்தைப்படுத்தவும், உள்ளூர் பொருட்களை உள்நாடுகளிலேயே சந்தைப்படுத்தவும் முடியும். இதனால் அந்நிய செலாவணி இருப்பு கூடும். மேலும் ஒன்றிய நாடுகளுக்குள் சுதந்திரமாக சென்று வர உள்ளூர் சுற்றுலா துறை விருத்தியடையும்.

இலங்கையின் இனப்பிரச்சினை, காசுமீர் பிரச்சனையை மையமாகக் கொண்ட இந்திய - பாகிஸ்தான் பிரச்சினை, இந்தியா - சீனா பிரச்சனை என்று தெற்காசிய சமூகம் சந்திக்கும் அனைத்து பிரச்சனைகளுக்கும் உலகளாவிய தீர்வாக தெற்காசிய ஒன்றியம் அமையும்.

இவை மேலோட்டமாக சிந்தித்தவை. சமூக, அரசியல், பொருளாதார நிபுணர்கள் இதனுடைய நன்மை, தீமைகளை விரிவாக ஆராயலாம். ஆனால் எந்த ஒரு தீர்வுக்கும் அரசியல்வாதிகளின் தீர்க்கமான முடிவும், மக்களின் ஈடுபாடுடைய பங்களிப்பும் மிகவும் அவசியம். அரசியல்வாதிகளின் சுயநலப் போக்கும், நிரந்தரமற்ற தன்மையும், ஆணவப்போக்கும், அதிகாரிகளின் இலஞ்சம், ஊழல் ஒரு நாளும் மக்கள் விடுதலைப் பெற்றுத் தராது. மக்களின் விடுதலைக்காக, உறுதியுடன், துணிவுடன், அர்ப்பணத்துடன், தியாகத்துடன் பணி புரியும் தலைவர்களாலே உண்மையான விடுதலையை பெற்றுத்தர முடியும். ஈழத்தமிழர்கள் அப்படியொரு உன்னதமான தலைவரையும், அவர் வழி நடக்கும் திறமையான தலைமையையும் பெற்றிருக்கிறார்கள் என்பது அவர்களின் புண்ணியமே.

**தமிழீழம் ஒரு நாள் நிச்சயம் விடியும்**



FREE E Books - www.thamizham.net - TM 1861 / Dec 2010